# மூன்றாண்டு நிலைமை அறிக்கை

## 2021-2023

**மாவட்டச் செயலகங்கள்**

# உள்ளடக்கம்


| | | | பக்க இல. |
|---|---|---|---|
| **1.** | நிறைவேற்று பொழிப்புரை | | 3 |
| **2.** | நிதிக்கூற்றுகள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம் | | 5 |
| **3.** | மாவட்டச் செயலகங்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் | | |
| | 3.1 | அம்பாறை மாவட்ட செயலகம் | 8 |
| | 3.2 | அனுராதபுரம் மாவட்ட செயலகம் | 15 |
| | 3.3 | பதுளை மாவட்ட செயலகம் | 19 |
| | 3.4 | மட்டக்களப்பு மாவட்ட செயலகம் | 23 |
| | 3.5 | கொழும்பு மாவட்ட செயலகம் | 32 |
| | 3.6 | காலி மாவட்ட செயலகம் | 37 |
| | 3.7 | கம்பஹா மாவட்ட செயலகம் | 45 |
| | 3.8 | ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் | 52 |
| | 3.9 | களுத்துறை மாவட்ட செயலகம் | 64 |
| | 3.10 | கண்டி மாவட்ட செயலகம் | 88 |
| | 3.11 | கேகாலை மாவட்ட செயலகம் | 91 |
| | 3.12 | கிளிநொச்சி மாவட்ட செயலகம் | 98 |
| | 3.13 | குருநாகலை மாவட்ட செயலகம் | 104 |
| | 3.14 | மாத்தறை மாவட்ட செயலகம் | 113 |
| | 3.15 | மாத்தளை மாவட்ட செயலகம் | 122 |
| | 3.16 | மொனராகலை மாவட்ட செயலகம் | 131 |

| | | | |
|---|---|---|---|
| | 3.17 | நுவரஎலிய மாவட்ட செயலகம் | 141 |
| | 3.18 | பொலன்னறுவை மாவட்ட செயலகம் | 147 |
| | 3.19 | புத்தளம் மாவட்ட செயலகம் | 151 |
| | 3.20 | இரத்தினபுரி மாவட்ட செயலகம் | 163 |
| | 3.21 | திருகோணமலை மாவட்ட செயலகம் | 167 |
| | 3.22 | வவுனியா மாவட்ட செயலகம் | 170 |
| | 3.23 | யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம் | 176 |
| | 3.24 | மன்னார் மாவட்ட செயலகம் | 182 |
| | 3.25 | முல்லைத்தீவு மாவட்ட செயலகம் | 187 |

# 1. நிறைவேற்று பொழிப்புரை

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் 25 மாவட்ட செயலகங்கள் மற்றும் அதன் கீழ் செயற்படுகின்ற 341 பிரதேச செயலகங்களின் நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளின் பெறுபேறுகளை உள்ளடக்கிய 25 மாவட்ட செயலகங்களின் நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்படுவதுடன், அவ்வாறு கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் நிதிக்கூற்றுக்கள் மற்றும் செயற்பாட்டு பெறுபேறுகளுக்கு உரியதாக பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களை உள்ளடக்கிய அறிக்கை அந்தந்த ஆண்டுகளின் போது பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்களுக்கிடையே மேலும் தீர்க்கப்படாதுள்ள பாராளுமன்றம் கவனம் செலுத்த வேண்டுமென நான் கருதும் முக்கியமான அவதானிப்புக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 14 ஆவது பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற இந்த மூன்றாண்டு நிலைமை அறிக்கை மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றது.

25 மாவட்ட செயலகங்களின் கீழ் 341 பிரதேச செயலகங்கள் செயற்படுவதுடன், மாவட்டத்தில் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிதி மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டிலிருந்து மாவட்ட செயலகங்களின் செலவினத் தலைப்பிற்கு நிதிஏற்பாடு ஒதுக்கப்படுவதுடன், ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்குரிய செலவினத் தலைப்புகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டிலும் மாவட்ட செயலகங்களின் ஊடாக செலவிடப்படுகின்றது. அவ்வாறு ஒதுக்கப்படும் நிதியேற்பாட்டினை பயன்படுத்தி பிராந்திய நிர்வாகத்தினை வலுவூட்டி பல்வேறு அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி பொது மக்களுக்கு அவசியமான சேவைகள் மற்றும் வசதிகள் வழங்கப்படல் மாவட்ட செயலகங்கள் மற்றும் அதன் கீழுள்ள பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. மாவட்டத்தை உள்ளடக்கும் வகையில் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் அபிவிருத்தி செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல், ஓய்வுதிய நலன்களை செலுத்துதல், சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள பணிகளை மேற்கொள்ளல், சமூக நலன்புரி நலன்களை செலுத்தும் பணிக்கு உதவுதல், அரச காணிகள் தொடர்பான பணிகள், இடர் நிவாரண சேவைப் பணிகளை மேற்கொள்ளல் போன்ற பாரிய பணிப்பொறுப்பு உள்ளடங்களாக பெரும் எண்ணிக்கையான அரச நிறுவனங்களுக்காக சேவை வழங்கும் பிரதிநிதித்துவ பணியும் மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது. இந்த விடயப் பரப்பில் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட அவதானிப்புகளும் உள்ளடங்களாக மாவட்ட செயலகங்களின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வின் 2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டிய போதிலும், இதுவரை தீர்க்கப்படாதுள்ள

கணக்காய்வு அவதானிப்புகளும், அந்தந்த மாவட்ட செயலகங்களின் கீழ் இந்த மூவாண்டு நிலைமை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுகள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அபிப்பிராயம்

மாவட்டச் செயலகங்களால் ஆண்டின் இறுதியில் உள்ளபடியாக நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான வருமானக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய தெளிவுபடுத்தல் தகவல்களின் பொழிப்புகளை உள்ளடக்கிய வருடாந்த நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுகின்றன. நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் உண்மையான மற்றும் நியாயமான நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படுகின்றதா என்பது தொடர்டபில் சுயாதீனமான சான்றுபடுத்தலொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் வழங்கப்படும். நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் அபிப்பிராயமொன்றை வழங்குவதன் மூலம் இந்த சான்றிதழ் வழங்கப்படுகின்றது. மாவட்டச் செயலகங்களின் நிதி நிலைமைக் கூற்று மற்றும் நிதிச் செயலாற்றல் கூற்றுக்களின் நியாயமான நிலைமைகள் வெளிப்படுத்தப்படுகின்றதா இல்லையா என்பது மற்றும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு அல்லது தற்போது சர்வதேச பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு மற்றும் நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இந்த நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றதா இல்லையா என்பது தொடர்பிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை கணக்காய்வு அபிப்பிராயத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அல்லது இணக்கமின்மைகள் மற்றும் விடயப்பரப்பிலான மட்டுப்படுத்தல்கள் மற்றும் முகாமைத்துவ மற்றும் கணக்காய்வு ஆகியவற்றுக்கு இடையே ஏற்படும் இணக்கமின்மைகள் ஆகியவற்றை கருத்திற்கொண்டதன் பின்னர் நான்கு முறைகளில் அபிப்பிராயம் வெளிப்படுத்தப்படுகின்றது. அவை பின்வருமாறு.

**முனைப்பழியற்ற அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ் கூற்றுகள் அல்லது இணக்கமின்மைகள் அறிக்கையிடப்படாத போது இந்த அபிப்பிராயம் வழங்கப்படும்.

**முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களில் பொருண்மையான பிறழ் கூற்றுகள் அல்லது இணக்கமின்மைகள் அறிக்கையிடப்பட்டுள்ள போதிலும் அவை நிறுவனத்தின் நிதிக்கூற்றுக்களில் வியாபித்திருக்காத போது இந்த அபிப்பிராயம் வழங்கப்படும்.

**பாதகமான அபிப்பிராயம்**

நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டுள்ள பொருண்மையான / பிறழ் கூற்றுக்கள் நிதிக்கூற்றுக்களில் வியாபித்துள்ள போது பாதகமான கணக்காய்வு அபிபிராயம் வழங்கப்படும்.

**மறுப்பு அபிப்பிராயம்**

விடயப்பரப்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ள காரணத்தால் கணக்காய்வுக்கு கணக்காய்வு அபிப்பிராயத்தை வழங்குவதற்கு போதிய மற்றும் பொருத்தமான சான்றுகளை பெற்றுக்கொள்ள முடியாமை மற்றும் கணக்காய்வினால் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படாத பிறழ் கூற்றுகள் காணப்படும் என தீர்மானிக்கின்ற போது இந்த அபிப்பிராயம் வழங்கப்படும்.

**மாவட்ட செயலகங்களின் அபிப்பிராயம் தொடர்பான தகவல்**

2021, 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளுக்கு உரியதாக 25 மாவட்ட செயலகங்களுக்கு உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயம் தொடர்பான தகவல்கள் பின்வரும் அட்டவணையில் காணப்படுகின்றன.

| | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|
| முனைப்பழியற்ற | 03 | 03 | 02 |
| முனைப்பழியுள்ள | 22 | 22 | 23 |
| மறுப்பு | - | - | - |
| பாதகமான | - | - | - |
| அபிப்பிராயம் இதுவரை தீர்மானிக்கப்படாத எண்ணிக்கை | - | - | - |
| நிதிக்கூற்றுக்கள் கிடைக்காத எண்ணிக்கை | - | - | - |

| | பெயர் | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|
| 1. | அம்பாறை மாவட்ட செயலகம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| 2. | அனுராதபுரம் மாவட்ட செயலகம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியற்ற |
| 3. | பதுளை மாவட்ட செயலகம | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| 4. | மட்டக்களப்பு மாவட்ட செயலகம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| 5. | கொழும்பு மாவட்ட செயலகம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| 6. | காலி மாவட்ட செயலகம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| 7. | கம்பஹா மாவட்ட செயலகம் | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற | முனைப்பழியற்ற |
| 8. | ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| 9. | களுத்துறை மாவட்ட செயலகம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| 10. | கண்டி மாவட்ட செயலகம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |

| | | | | |
|---|---|---|---|---|
| **11.** | கேகாலை மாவட்ட செயலகம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **12.** | கிளிநொச்சி மாவட்ட செயலகம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **13.** | குருநாகலை மாவட்ட செயலகம் | முனைப்பழியற்ற | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **14.** | மாத்தறை மாவட்ட செயலகம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **15.** | மாத்தளை மாவட்ட செயலகம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **16.** | மொனராகலை மாவட்ட செயலகம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியற்ற | முனைப்பழியுள்ள |
| **17.** | நுவரஎலிய மாவட்ட செயலகம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **18.** | பொலன்னறுவை மாவட்ட செயலகம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியற்ற | முனைப்பழியுள்ள |
| **19.** | புத்தளம் மாவட்ட செயலகம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **20.** | இரத்தினபுரி மாவட்ட செயலகம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **21.** | திருகோணமலை மாவட்ட செயலகம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **22.** | வவுனியா மாவட்ட செயலகம் | முனைப்பழியற்ற | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **23.** | யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **24.** | மன்னார் மாவட்ட செயலகம | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |
| **25.** | முல்லைத்தீவு மாவட்ட செயலகம் | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள | முனைப்பழியுள்ள |

## 3. மாவட்டச் செயலகங்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 3.1 அம்பாறை மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 3,625,116,050 | 3,459,491,085 | 165,624,965 | முனைப்பழியுள்ள |
| **2022** | 3,921,985,477 | 3,842,420,658 | 79,564,819 | முனைப்பழியுள்ள |
| **2023** | 7,596,175,528 | 7,524,581,657 | 71,593,871 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1. | நீண்டகால குத்தகை அடிப்படையில் காணிகள் வழங்கியிருந்தமை தொடர்பில் கல்முனை மற்றும் இறக்காமம் பிரதேச செயலகங்களினால் அறவிடவேண்டிய குத்தகை நிலுவையான கூட்டுமொத்தம் ரூபா 24,538,440 தொகையினை அறவிடுவதற்கு 2023 டிசம்பர் 31 வரை வருடங்களாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 | நீண்டகால நிலுவைக் குத்தகையை விரைவாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பல்வேறு சிக்கல் காரணமாக நீண்டகால குத்தகைப் பெறுமதி அறவீடு செய்வதில் தடைகள் ஏற்பட்டுள்ளது என உங்களுக்கு அறிவித்துக் கொள்கின்றேன். | 2024 செப்தெம்பர் 30 திகதி அளவிலும் பரிந்துரைகள் முழுமையாக செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 2. | அம்பாறை மாவட்ட செயலகத்திற்க சொந்தமான சத்தாதிஸ்ஸபுர களஞ்சிய 2015 செப்தெம்பர் 21 திகதி திருடர்களினால் திறக்கப்பட்டு பண்டங்கள் எடுத்துச் சென்றமையால் | 2023 | ஏற்பட்டுள்ள நட்டத்திற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரை பொறுப்புச் சொல்ல வேண்டியவர்களிடம் அறவீடு | விசாரணைக் குழுவின் தீர்மானம் 2023.07.06 திகதி மாவட்ட செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்த விடயங்கள் தொடர்பாக ஆரம்ப விசாரணையொன்று | 2024 செப்தெம்பர் 30 திகதி வரை பரிந்துரைகள் செயற்படுத்துதல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 850,738 தொகை என மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் 2024 மே 24 திகதியளவிலும் அது தொடர்பாக தொடர்நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | செய்வதற்கு அல்லது வேறு உரிய நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்பட வேண்டும். | மேற்கொள்ளப்பட்டு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு முடிந்திருக்காமையால் நி.பி.104(4) இறுதி விசாரணை அறிக்கை சமர்ப்பிப்பதற்கு முடியாமல் உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது | |
| 3. | 2022/2023 பெரும் போகத்தின் நெற்கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் நெல் இருப்பினை அகற்றும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த 2023 பெப்ரவரி 09 திகதிய மற்றும் இலக்கம் DRD/2023-1 கொண்ட சுற்றறிக்கையின் பிரிவு 4.2 இன் படி நெற் கொள்வனவின் போது ஏற்படக் கூடிய செயற்பாட்டுச் செலவுகள் குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்கள், சுற்றறிக்கைகள் மற்றும் ஏனைய அரச அங்கீகாரங்களுக்கு கீழ்படிய மேற்கொள்வதற்கு மாவட்ட செயலாளரினால் நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அம்பாறை மாவட்ட செயலகத்தினால் | 2023 | சுற்றறிக்கைக்கு இணங்க உண்மையாகவே மேற்கொள்ளப்பட்டிருந்த நிருவாகச் செலவுகள் மாத்திரம் முறையான அங்கீகாரத்துடன் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அம்பாறை மாவட்டத்தில் 30000 மெற்றிக் தொன் நெல் கொள்வனவு செய்ய வேண்டுமென அபிவிருத்தி நிதித் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் நெல் கொள்வனவு செய்து 24 மணித்தியாலத்திற்குள் குறிப்பிட்ட விவசாயிகளின் கணக்கிற்கு பணம் செலவு வைக்கப்பட வேண்டியிருந்தது. இது மிகவும் சிக்கலான செய்முறை ஒன்றாக காணப்பட்டதுடன் ரூபா 270 மில்லியன் தொகை பெறுமதியான நெல் இருப்பொன்று கொள்வனவு செய்யப்பட்டு விவசாயிகளுக்கு பணம் செலுத்த நேரிட்டது. நெல் ஆலை உரிமையாளர்களை தெரிவுசெய்தல், | பரிந்துரையின் படி செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

பொதுவான செயற்திட்டங்களுக்காக நிருவாக செலவுகள் ஒதுக்கும் விதத்தில் ஒட்டுமொத்த ஏற்பாட்டுத் தொகையாகிய ரூபா 3,089,000,000 தொகையில் 1% என மாவட்ட செயலகம் மற்றும் 17 பிரதேச செயலகங்களுக்காக ரூபா 30,890,000 தொகை நிருவாகச் செலவுகளுக்காக ஏற்பாடுகள் ஒதுக்கி சுற்றறிக்கைக்கு முரணாக உத்தியோகத்தர்கள் உண்மையாகவே மேற்கொண்ட செலவினை கவனத்தில் எடுக்காமல் அபிவிருத்தி நிதி திணைக்களத்தின் வாய்மொழி அறிவுரை மீது எனக் குறிப்பிட்டு அம்பாறை மாவட்ட செயலாளரின் தலைமையில் குழு ஒன்று நியமனம் செய்து அந்த குழுவின் தீர்மானத்தின் படி குறிப்பிட்ட உத்தியோகத்தர்களின் அடிப்படை சம்பளத்தின் ¼ பெறுமதிமதிக்கு சமமான தொகையொன்று அவர்கள் செயற்திட்டத்தில் ஈடுபட்டிருந்த மாதங்களின் அடிப்படையில் கூட்டுத்தொகை ரூபா 15,580,562 தொகை

அவர்களை பதிவு செய்தல், விவசாயிகளை இனங்காணல், அவர்களிடம் கொள்வனவு செய்யும் நெல்லின் எண்ணிக்கையை தீர்மானித்தல், அறிக்கைகள் தயாரித்தல், கொடுப்பனவுக்காக வங்கிக்கு செல்ல நேரிடல் இந்த கருமங்களுக்காக கடமை நேரத்திற்கு புறம்பாக கடமையாற்ற நேரிடல், தொடர்ச்சியாக வெளிக்களத்திற்கு செல்ல நேரிடல் இந்த அலுவல்களுக்காக தனிப்பட்ட கையடக்கத் தொலைபேசியினை பயன்படுத்த நேரிடல் ஆகிய விடயங்களின் மீது தலைவரான மாவட்ட செயலாளரினால் அபிவிருத்தி நிதித் திணைக்களத்தை வினவி கிடைக்கப்பெற்ற அறிவுரைகளின் படி குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு அதன் மூலம் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் மீது கொடுப்பனவு செய்யப்பட்டதுடன் கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் பிரிவுத் தலைவரின் மற்றும் பிரதேச

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிருவாகச் செலவு என 2023 ஜுலை மாதம் அளவில் செலுத்தி முடிந்திருந்தது. | | | செயலாளரின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | |
| 4. | அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்திற்கு வட்டாரத்தின் பாடசாலை ஒன்றிற்கான காணி ஒன்று தனதாக்களுக்காக மாகாண கல்வித் திணைக்களத்தினால் வழங்கியிருந்த ரூபா 6,500,000 தொகை குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்தாமல் வைப்புக் கணக்கில் 05 வருட காலம் முதல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | 2023 | குறிப்பிட்ட காலப் பகுதியினுள் வேலைகளை பூர்த்தி செய்து வைப்புக் கணக்குகளை தீர்க்க வேண்டும். | இந்தத் தொகை அட்டாளைச்சேனை அக்/அல்/அர்ஹம் பாடசாலை தொடர்பாக தனியார் காணியொன்றை உரித்தாக்கும் அலுவல்களுக்காக வைப்புச் செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட காணியின் உரித்தாக்கல் அலுவல்களுக்காக நீடித்த காலமொன்று செலவிடக்கூடிய பல கட்டங்களை அடங்கிய கருமம் ஒன்றாகும். இந்த அனைத்து கட்டங்களுக்காக வெவ்வேறாக காணி அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. மேலும் நில அளவையாளரின் வரைபு கிடைப்பதில் தாமதம் காணப்பட்டதுடன், அனைத்து கட்டங்களையும் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் கொடுப்பனவு மேற்கொண்டு குறிப்பிட்ட காணியை உரித்தாக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்படும் | 2024 செப்தெம்பர் 30 திகதி வரை பரிந்துரைகள் செயற்படுத்துதல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | என பிரதேச செயலாளர் அறிவித்திருந்தார். | |
| 5. | மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான வாகனம் ஒன்று கடந்த 22 வருடங்களை மிகையான காலம் முதல் திருத்த வேலைக்காக கராஜ் ஒன்றிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த திருத்த வேலை மேற்கொள்வதற்கு அல்லது அதனை திருப்பிப் பெற்றுக்கொள்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 | நிதியமைச்சின் கொம்ப்டோலர் ஜெனரல் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டுள்ள 2020 ஒப்தோபர் 02 திகதிய மற்றும் 05/2020 இலக்கங் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் படி பயன்படுத்த முடியாத வாகனங்களை விரைவாக அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த லொறி வண்டி துருப்பிடித்திருப்பதனால் மாவட்ட செயலகத்திற்கு எடுத்து வர முடியாத நிலையில் காணப்படுவதனால் அந்த இடத்திலேயே ஏல விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. இந்த லொறி வண்டி புனர்வாழ்வு அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தமையால் சொத்துக்கள் சுற்றறிக்கை 03/2008 இன் படி உரிமையினை மாவட்ட செயலாளரின் பெயரில் உரித்தாக்கப்பட வேண்டும். புனர்வாழ்வு அமைச்சொன்று தற்போது காணப்படாததுடன் அந்த விடய அலுவல்களை கடைபிடிக்கும் அமைச்சை இனங்காணல் கடினமாக உள்ளது. எவ்வாறாயினும் இந்த வாகனத்தை உரித்தாக்கும் அலுவல்கள் மேற்கொள்ளும் படி நீதி மற்றும் சிறைச்சாலைகள் | 2024 செப்தெம்பர் 30 திகதி வரை பரிந்துரைகள் செயற்படுத்துதல் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அமைச்சிற்கு அனுப்பப்பட்டது. | |
| 6. | 2022/2023 பெரும் போகத்தில் நெற் கொள்வனவு மற்றும் நெல் இருப்பினை அகற்றுவதற்கான நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் நெற் கொள்வனவு செய்து குறைந்த வருமானமுடையோருக்கு அரிசி வழங்கிய பின்னர் அரிசி ஆலை உரிமையாளர்களின் பொறுப்பில் காணப்பட்ட அரசாங்க நெல் இருப்பினை அரிசியாக மாற்றி விற்பனை செய்தல் தொடர்பாக அபிவிருத்தி நிதித் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்டிருந்த 2023 ஜுலை 17 திகதிய இலக்கம் DFD/MD/GPPP/PD/ Maha/2022/23 கொண்ட கடிதத்தின் படி மாவட்ட செயலகத்தின் கீழ் மீதியாகக் காணப்படும் நெல் இருப்புத் தொடர்பாக 2023 செப்தெம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலாவது டென்டரின் படி தெரிவு செய்யப்பட்டிருந்த கொள்வனவாளருக்கு அரிசை விற்பனை செய்வதற்காக 7 பிரதேச செயலகப் பிரிவுகளின் கீழ் தெரிவு செய்யப்பட்டிருந்த 24 | 2023 | அறவிடப்பட வேண்டிய அரிசியின் எண்ணிக்கையை விரைவாக அறவீடு செய்வதற்கும் மற்றும் அரிசி வழங்கப்படாத நெல் ஆலை உரிமையாளர்கள் தொடர்பாக விரைவாக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அரிசி ஆலை உரிமையாளர்களின் பொறுப்பில் மீதியாக காணப்படும் அரிசி இருப்பு அபிவிருத்தி நிதித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DFD/MD/GPPP/PD/ Maha/2022-23 மற்றும் 2023.07.17 திகதிய கடிதத்தின் படி பெறுகை அலுவல்கள் ஊடாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது. அதன் படி முதல் கட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட கொள்வனவாளர்களுக்கு அரிசி விற்பனை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் 2024.05.20 திகதி அளவிலும் குறிப்பிட்ட அரிசி ஆலை உரிமையாளர்களினால் 1,226,372.99 கி.கி. அரிசி எண்ணிக்கையொன்று வழங்க வேண்டியிருந்ததுடன் அந்த அரிசியின் பெறுமதி ரூபா 170,122,703.38 தொகையாகும். | 2024.10.02 திகதி அளவில் குறிப்பிட்ட அரிசி ஆலை உரிமையாளர்களிடம் 1,193,493.89 கி.கி. அரிசி எண்ணிக்கையொன்று வழங்குவதற்கு மீதியாக இருந்ததுடன் அந்த அரிசியின் பெறுமதி ரூபா 165,571,452.66 தொகையாகும். குறிப்பிட்ட அரிசி ஆலை உரிமையாளர்களால் அரிசி இருப்பினை வழங்கப்படாமை தொடர்பாக தற்போது அம்பாறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று செய்யப்பட்டுள்ளதுடன் குற்றப் புலனாய்வு பிரிவின் மூலம் விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |

நெல் ஆலையினால் மாவட்ட செயலகத்திற்கு செலுத்த வேண்டியிருந்த ரூபா 170,122,703 தொகை பெறுதிமதியான அரிசி 1,226,373 கிலோகிராம்கள் 2024 மே 05 திகதியளவிலும் வழங்குனர்களுக்கு வழங்கி மாவட்ட செயலகத்திற்கு பணம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.2 அனுராதபுரம் மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 4,325,791,013 | 326,268,036 | 3,999,522,977 | முனைப்பழியுள்ள |
| **2022** | 4,459,191,794 | 139,388,112 | 4,319,803,682 | முனைப்பழியுள்ள |
| **2023** | 4,565,507,795 | 167,897,602 | 4,397,610,193 | முனைப்பழியற்ற |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | நெல்லை கொள்வனவு செய்வதற்காக 2001 ஆம் ஆண்டிற்கும் 2006 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் திறைசேரியினால் வழங்கிய முற்பணங்களில் இன்னும் தீர்த்துவைக்கப்பட வேண்டிய மீதி ரூபா 32,247,247 ஆகும். | 2022 | குறிப்பிட்ட தரப்பினரிடம் பணம் அறவீடு செய்து திறைசேரிக்கு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இலங்கை கூட்டுறவு சங்கத்திடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 3,485,983 இற்கான தொகைக்கான அறிக்கையொன்று பெற்றுக்கொள்வதற்காக கமநல சேவை மாவட்டச் செயலகம் தொடர்பாக ரூபா 2,120,000 தொகை பதிவழிப்பதற்கு வேண்டப்பட்டுள்ளது. 02 கமநல அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் 03 பலநோக்கு கூட்டுறவு சங்கங்களுக்காக வழக்குத் தாக்கல் செய்வதற்கும் நொச்சியாகம பலநோக்கு கூட்டுறவு சங்கத்தை ஒழித்த பின்னர் அறவீடு செய்வதற்கும் எப்பாவல பலநோக்கு கூட்டுறவு சங்கத்திடம் | 2024 செப்தெம்பர் 30 திகதியளவில் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய மீதி ரூபா 31,187,247 தொகையாகும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அறிக்கையொன்று பெற்றுக் கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. | |
| 2 | கருத்திட்டத்துடன் தொடர்பாக நிதி அமைச்சர் மற்றும் காணி அமைச்சரினால் அமைச்சரவைக்கு 2021 ஆகஸ்ட் 27 திகதி சமர்ப்பித்து அங்கீகரத்த உத்தேசத்தின் பிரகாரம் அனுராதபுரம் மாவட்டத்தில் இயற்கை பசளை பயிர் செய்கை முறையின் கீழ் ஏற்றுமதிக்காக கற்றாளை மூலிகையின் மருத்துவ உற்பத்தி தொழிலொன்றை ஆரம்பித்தல் மற்றும் மொத்த முதலீடு மற்றும் ஆரம்ப முதலீடு முறையே அ.டொ 783 மில்லியன் மற்றும் 300 மில்லியனை பெற்றுக் கொள்வது நோக்கான போதும், அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்து 02 ஆண்டுகள் காலம் கடந்துள்ள போதும் அந்த நோக்கம் எதுவும் இடம்பெற்று இருக்கவில்லை. | 2023 | செயற்திட்டங்களின் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த செயற்திட்டத்தை செயற்படுத்துதல் தொடர்பாக பிரதேச செயலாளரின் பொறுப்பொன்று காணப்படவில்லை என கருணையுடன் அறிவிக்கின்றேன். | பரிந்துரை செயற்படுத்தி இருக்கவில்லை. |
| 3 | காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் கீழ் விவசாய நடவடிக்கைகள் மற்று வீடமைப்பு | 2022<br>2023 | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். | தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 2024 செப்தெம்பர் 30 திகதி வரை பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நடவடிக்கைகளிற்காக வழங்கியுள்ள ஒப்படைப் பத்திர உரிமையாளர்களினால் பல கம்பனிகளிற்கு தொலை தொடர்பு கோபுரங்களை நிர்மாணிக்க வர்த்தக நடவடிக்கைகளிற்கு பயன்படுத்த அந்த காணிகளின் பகுதிகளை வழங்கியுள்ள சந்தர்ப்பங்களில் 2020 பெப்ரவரி 06 திகதிய இலக்கம் 2020/02 கொண்ட காணி ஆணையாளர் நாயகத்தின் காணி அபிவிருத்தி கட்டளை சட்டத்தின் கீழ் வழங்கியுள்ள ஒப்படைப் பத்திரங்களின் பின்நடவடிக்கைகள் தலைப்பிலான சுற்றறிக்கை பிரகாரம் குறித்த ஒப்படைப் பத்திரங்களை அரசிற்கு சுவீகரித்து மேற்குறித்த சுற்றறிக்கையின் vi பிரிவின் அறுவுரை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும், 14 பிரதேச செயலக பிரிவுகளில் அமைந்துள்ள 139 தொலை தொடர்பு கோபுரங்கள் தொடர்பில் மேற்குறித்த சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | | |
| 4 | கருங்கல் தோண்டுவதற்கான அரசாங்க கட்டணத்தை அறவீடு செய்தல் சம்பந்தமாக வன பாதுகாப்பு | 2022 | குறிப்பிட்ட பணம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். | நிலுவைக் கட்டணம் செலுத்துவது தொடர்பாக தொடர்ச்சியாக எழுத்துமூலம் அறிவுருத்தல் | 2024 ஏப்ரல் 30 திகதியளவில் 17 பிரதேச செயலகங்களில் இருந்து அறவிடப்பட |

| | | | |
|---|---|---|---|
| நாயகத்தினால் வழங்கப்பட்டுள்ள 2021 பெப்ரவரி 25 ஆந் திகதிய 34/2216 ஆம் 2021 இலக்க அதிவிசேட வர்த்தமானியில் குறிப்பிட்ட கட்டணத்தை செலுத்தும் போது புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கங்கள் அகழ்தல் பணியகத்திற்கு அரசிறை செலுத்தப்பட்ட கருங்கற்கள் கியூப்களின் அளவுடன் ஒப்பிடும் போது 09 பிரதேச செயலகப் பிரிவுகளில் கருங்கற்கள் அகழ்வதற்காக அறவிட வேண்டிய அரசாங்க கட்டணம் ரூபா 147,298,661 ஆகும். | | மேற்கொள்ளப்பட்டதுடன் அறவீடு செய்வதற்காக எதிர்காலத்தில் குறிப்பிட்ட தரப்பினருடன் கலந்துரையாடி தீர்மானமொன்று அணுகுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டி மொத்த நிலுவைக் கட்டணம் ரூபா 386,411,749 தொகை ஆகக் காணப்பட்டதுடன், அதில் காணி ஆணையாளர் நாயகத்தினால் பிரதேச செயலாளர்களை விழித்த L2/1/89/சுற்றறிக்கை/2022 மூலம் கிடைக்கப் பெற்ற அறிவுரைகளின் படி பிரதேச செயலாளர்களினால் 2024 ஏப்ரல் 30 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 130,641,681 தொகையாகும். |

## 3.3 பதுளை மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 2,846,555,657 | 245,445,556 | 2,601,110,101 | முனைப்பழியுள்ள |
| **2022** | 2,877,042,385 | 199,840,103 | 2,677,202,282 | முனைப்பழியுள்ள |
| **2023** | 2,969,501,007 | 140,338,794 | 2,829,162,213 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | ரிதீமாலியத்த பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டி விபத்திற்குள்ளாகி 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 01 வருடம் 05 மாதங்கள் கடந்திருந்த போதிலும், ரூபா 6,349,333 தொகையான நட்டத்தை தீர்ப்பனவு செய்தல் தொடர்பில் நி.பி.104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 | நிதிப் பிரமாணங்களின் படிநடவடிக்கை எடுத்து நட்டம் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிப் பிரமாணங்களின் படிவிசாரணை நடாத்தப்பட்டது. | பரிந்துரையின் படி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| 2 | பதுளை மாவட்டத்தில் 160 கிராம சக்தி மக்கள் சங்கங்களிடம் ரூபா 44,898,005 ஆன நிதி முறையாக செயற்திறனாக கிராமிய சமூகததின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதறக்காக பயன்படுத்தாமல் விளைவற்ற வகையில் | 2023 | செயற்திட்டம் தொடர்பாககண்காணிப்புமற்றும் தொடர்நடவடிக்கைகுறிப்பிட்டபணம் குறிக்கோள்களுக்காகசெயற்திறனுடன் பயன்படுத்தப்படவேண்டும். | நிறுவனத்தினால் எடுக்கப்பட்டதடுத்தல் செயறபாடுகள் அறிவிக்கப்படவில்லை. | பரிந்துரைகள் செயற்படுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வங்கி கணக்குகளில் காணப்படுவது அவதானிக்கப்பட்டது. | | | | |
| 3 | ஊவா பரணகம பிரதேச செயலகத்திற்குரிய கெப் வண்டியொன்று 2010 ஆகஸ்ட் 25 ஆந் திகதி விபத்திற்குள்ளாகியிருந் ததுடன், மதிப்பிடப்பட்ட நட்டமான ரூபா 500,000 ஆன தொகை 2022 மபர்ச் 21 ஆந் திகதி வரையிலும் அறவிடப்பட்டிராததுடன், வாகனத்தை பழுதுபார்த்து ஓட்ட நிலைக்கு உட்படுத்துவதற்கு அல்லது கைத்தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காது 12 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் மாவட்ட செயலக வளாகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | 2022 | திருத்தவேலை மேற்கொள்ளல் அல்லது அப்புறப்படுத்தல் அல்லது வேறேதேனும் பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். மதிப்பிடப்பட்ட நட்டத்தை பொறுப்புச் சொல்ல வேண்டிய ஆட்களிடம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 மே 15 திகதி பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது எனவும் விபத்தினால் ஏற்பட்ட நட்டம் சேதத்திற்குரிய பொறுப்புச் சொல்லவேண்டிய சாரதி சேவையை விட்டுச் சென்றதுடன் அந்த சேதத்தை அறவீடு செய்வதற்காக சட்டஆலோசனை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | அப்புறப்படுத்தியிருந்த போதிலும் நட்டத்தை அறவீடு செய்திருக்கவில்லை. |
| 4 | 05 பிரதேசசெயலகங்களினால் பல்வேறுகடன் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் 4976 சமூர்த்திநலன்பெறுனர்களுக்குவழங்கப்பட்டகடன் பணத்தில் ரூபா 219,692,070 கடன் மீதிகாலம் கடந்திருநதும் 989 நலன்பெறுனர்களுக்குவழங்கப்பட்டகடன் பணத்தில் ரூபா 42,997,627 கடன் ஐயக் கடனாக இணங்காணப்பட்டிருந்தது. இந்நிலுவைக் கடனைறெவீடுசெய்வதற்காகசட்டரீதியானநடவ | 2021 | கடன் தவணைகள் குறிப்பிட்டகாலப் பகுதியில் அறவீடுசெய்யப்படவேண்டும். | ஹப்புத்தளைபிரதேச செயலகத்தினால் கடன் தவணைகள் அறவீடுசெய்வதற்காகநடவடிக்கைஎடுக்கப்படும் எனஅறிவிக்கப்பட்டுள்ளதுடன் ஸொரனாதொட,கந்தகெடிய, ஹாலிஎல,எல்லபிரதேசசெயலகங்களினால் பதில் அனுப்பியிருக்கவில்லை. | பரிந்துரைசெயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | டிக்கைஎடுக்கப்பட்டிருக் கவில்லை. | | | | |
| 5 | மீகஹகியுல மற்றும் பதுளை பிரதேச செயலகங்களின் கீழ் அத்துமீறிய கையேற்றல்கள் தொடர்பாக உரித்தை மீறப் பெற்றுக் கொள்வதற்காக கிடைத்திருந்த 21 வெளியேற்றும் கட்டளைகள் கிடைத்து 9 மாதங்களில் இருந்து 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அக்கட்டளைகளை செயல்படுத்தாமை காரணமாக அரசின் ஆவணங்களை முறையற்ற பயன்பாட்டுக்கு உட்படுத்துவதற்கு இடம் அளிக்கப்பட்டுள்ளமை தெரிவு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | 2023 | உரிய முறையில் நிதி ஏற்பாடுகளை மேற்கொண்டு வெளியேற்றும் கட்டளையை செயல்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக் கொள்கிறேன். பதுளை பிரதேச செயலகத்தில் அத்துமீறிய கையேற்றங்கள் தொடர்பாக ஆட்கள் பணத்தைச் செலுத்த முன் வராவிடின் உரித்தை மீளப் பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக குறிப்பிடுகின்றேன். | பரிந்துரைசெயற்படு த்தப்பட்டிருக்கவில் லை. |
| 6 | கந்தேகெட்டியமற்றும் ஹல்துமுள்ளபிரதேசசெ யலகங்களினால் வெள்ளைமிளகுஉற்பத் திசெயற˙திட்டத்திற்காக 2022 மே 20 மற்றும் 21 ஆம் திகதிகளில் தாபிக்கப்பட்டரூபா 4,555,000 ஆனமிளகுகாயவைக்கு ம் இயந்திரங்கள் 2024 மார்ச் 31 ஆம் திகதிவரைகுறைபயன்ப ாட்டில் காணப்பட்டன. | 2023 | பாரியபெறுமதி யைஉடைய இந்த இயந்திரங்களி ன் உச்சமட்டகொ ள்திறனையும் பயன்படுத்துவ தற்குநடவடிக் கைஎடுக்கவே ண்டும். | மிளகுவிளைச்சல் குறைவடைந்ததனா ல் இயந்திரத்தைபயன் படுத்திஎதிர்பார்த்தவ ாறுமிளகினைஉலர் த்துவதற்குமுடியாம ல் போனது. ஏற்றுமதிவிரிவாக்க ல் உத்தியோகத்தரினா ல் 2024 ஆண்டில் தயாரிக்கப்பட்டமாற் றுப் போகஉலர்த்தும் திட்டத்தின் படிசெயற்திட்டமுன்மொழிவுகள் | பரிந்துரைசெய்யப்ப ட்டிருக்கவில்லை. |

தயாரிக்கப்பட்டுஅந்
தஅலுவல்கள்
ஆரம்பிப்பதற்குநடவ
டிக்கைஎடுக்கப்பட்டு
ள்ளது.

## 3.4 மட்டக்களப்பு மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 2,679,582,048 | 99,513,306 | 2,580,068,742 | முனைப்பழியுள்ள |
| **2022** | 2,790,036,333 | 88,107,922 | 2,701,928,411 | முனைப்பழியுள்ள |
| **2023** | 3,001,624,714 | 89,949,459 | 2,911,675,255 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | புதிய கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்கான ஆலோசனை சேவைக்காக மட்டக்களப்பு மாவட்ட செயலாளர் மற்றும் கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளர் ஆகியோருக்கிடையில் 2014 ஒக்தோபர் 23 இல் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் (MOU) கைச்சாத்திடப்பட்டிருந்தது. எனினும், ஆலோசனை செயன்முறையில் பல்வேறு தாமதங்கள் ஏற்பட்டதால் 2015 ஒக்தோபர் 08 முதல் புரிந்துணர்வு விஞ்ஞாபனம் இடைநிறுத்தப்பட்டது. மாவட்ட செயலாளர் ரூபா 7.2 மில்லியன் கூட்டுமொத்தமான ஆலோசனை கட்டணத்தில் 40 சதவீதத்தை | 2021 | விலைகூறல் பதிவேட்டில் காணப்படுகின்ற நிபந்தனைகளை கடைபிடித்து அதன் படி கொடுப்பனவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | மத்திய கட்டிடத் திணைக்களம் மாகாண கட்டிடத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட பில் பத்திர அளவுகள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | 2024 செப்தெம்பர் 30 திகதி வரை பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆலோசனையாளரின் வேலைத் தவறைக் கருத்தில் கொள்ளாமல் ஆலோசனையாளருக்கு செலுத்தியிருந்தார். | | | | |
| 2 | கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கிரண் மேற்கு கிராம சேவையாளர் பிரிவில் பிரதேச செயலாளரின் பரிந்துரையை பெற்றுக்கொள்ளாமலும் , அப்பகுதியில் ஆற்று மணல் அகழ்விற்காக ஆற்றின் இருப்பைக் கருத்தில் கொள்ளாமலும் ஒருவருக்கு ஆற்று மணல் அகழ்வு உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேலும், கனிம மற்றும் மணல் சட்டத்தில் உள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அனுமதிக்கப்பட்ட நில எல்லைக்குள் ஆற்று மணலை மாத்திரம் அகற்றுவதற்காக மேற்படி உரிமம் செல்லுபடியாகும். எனினும், அந்த உரிமத்தைப் பயன்படுத்தி உள்நாட்டு மணல் அகழப்பட்டது. மேலும், 02 மாதங்களுக்குள் மொத்தம் 1400 மணல் கியூப்கள் எந்த அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களும் இல்லாமல் விற்பனை செய்யப்பட்டுள்ளன. | 2022 | மண் அகழ்வு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கான பரிந்துரை வழங்கள் தொடர்பாக வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுட்டிக் காட்டியுள்ள விடங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | 2024 செப்தெம்பர் 30 திகதி வரை நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 3 | கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகப் | 2022 | இந்த சட்டவிரோத மண் எடுக்கும் | சுட்டிக் காட்டியுள்ள விடங்கள் தொடர்பாக | 2024 செப்தெம்பர் 30 திகதி வரை நடவடிக்கை ஏதும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரிவிற்குட்பட்ட வள்ளி ஆறு மற்றும் மாதுரு ஓயா மற்றும் வள்ளி ஆறு ஆற்றங்கரைக்கு அருகாமையிலும், வள்ளி ஆறு ஆற்றங்கரையில் உள்ள கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட முள்ளிவட்டவான் துறையடி மற்றும் வயல் துறையடி ஆகிய பகுதிகளிலும் சட்டவிரோத மணல் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த சட்டவிரோத மணல் அகழ்வின் விளைவாக ஆற்றினை அகலப்படுத்துதல் மற்றும் ஆற்றின் இயற்கையான நீர் ஓட்டத்தை மாற்றுதல் போன்ற பல சுற்றாடல் பாதிப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன. எனினும் பொறுப்புள்ள பிரதேச செயலகங்கள் அந்த சட்டவிரோத செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கு எந்தவொரு பயனுள்ள நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை. | | அலுவல்களை நிறுத்துவதற்காக வலுவான உள்ளகக் கட்டுப்பாட்டு பொறிமுறையொன்று நிறுவப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 4 | புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகத்தால் வழங்கப்பட்ட வழிகாட்டல்களின் | 2023 | மண் அகழ்வு அனுமதிப்பத்திரத்திற்காக உள்ளகக் கட்டுப்பாட்டு | சுட்டிக் காட்டியுள்ள விடங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | 2024 செப்தெம்பர் 30 திகதி வரை நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரகாரம் வணிகமல்லாத நடவடிக்கைகளானது விற்பனை நோக்கமின்றி சுயதேவைகளுக்காக பயன்படுத்தப்படுகின்ற சிறிய அளவிலான நோக்கங்களாக விபரிக்கப்படுகின்றன. எனினும், 2022 சனவரி முதல் 2023 ஏப்ரல் 30 வரையிலான 16 மாத காலப்பகுதியினுள் 64 கியூப்கள் மணல் மற்றும் 508 கியூப்கள் மண் மற்றும் கிரவல்களை அகழ்வு செய்து கொண்டு செல்வதற்கு 04 நபர்களுக்கு ஒரு நாள் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | முறைமை நிறுவப்பட்டு வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | | |
| 5 | வழிகாட்டல் இல. 04 இன் பிரகாரம் ஒரு மாதத்திற்கு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு அனுமதிக்கப்படும் அதிகபட்ச எல்லை 02 கியூப் மணல் மற்றும் 35 கியூப் மண் மற்றும் கிரவல் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனினும், மாதமொன்றிற்கு அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச எல்லைக்கு முரணாக மீளாய்வாண்டின் போது மணல் மற்றும் கிரவல்.·. மண் அனுமதிப்பத்திரங்கள் முறையே 03 சந்தர்ப்பங்களிலும் 04 சந்தர்ப்பங்களிலும் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகத்தினால் | 2023 | மீள்புத்தாக்கப் படாத வளங்கள் மற்றும் சுற்றாடலை பாதுகாப்பதற்காக அங்கீகாரம் வழங்கியுள்ள உச்சமட்ட எண்ணிக்கையை வரையறுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுட்டிக் காட்டியுள்ள விடங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | 2024 செப்தெம்பர் 30 திகதி வரை நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டிருக்கவில்ல. |

வழங்கப்பட்டிருந்தன.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6 | கோறளைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கும்புறுமூலை கிராம உத்தியோகத்தர் பிரிவில் வீடமைப்புத் திட்டத்திற்கு அருகில் பொது நோக்கத்திற்காக ஒதுக்கப்பட்ட அரச காணியில் 50 காணித்துண்டுகளின் புதிய சுவீகரிப்பு 83 முதல் 88 வரையான இலக்க காணி கட்டளை மற்றும் காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் 20 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் காணிக் கச்சேரியை (Blocking of Diagram-BOD) நடாத்துவதன் மூலம் தெரிவு செய்யப்பட்டிருக்காத 50 நபர்களிற்கு மேற்கொள்ளப்பட்டிருந்தன. காணி கச்சேரிக்கு அழைப்பு விடுக்கும் நோக்கில் அந்த மக்களின் வாக்காளர் பட்டியல்கள் வேண்டுமென்றே கோறளைப்பற்று பிரதேச செயலகத்தின் கும்புறுமூலை கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளன. அவர்களில் பெரும்பாலானோர் அந்த காணிகளில் வசித்திருக்கவில்லை. மேற்படி 50 காணித்துண்டுகளுக்கு வேலி அமைத்து தனியாருக்கு வழங்கப்பட்டிருந்தமையு | 2023 | அரச காணிகளை பிறர் மயப்படுத்தல் தொடர்பாக உத்தியோகத்தருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி காணிகளை பிறர் மயப்படுத்துவதற்கு நடவடிக்கை வேண்டும். | சுட்டிக் காட்டியுள்ள விடங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | 2024 செப்தெம்பர் 30 திகதி வரை நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டிருக்கவில்ல. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ம், அவர்கள் வசிக்க போதுமானதாக இல்லாத தற்காலிக குடிசைகளை அமைத்திருந்தமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | | | | |
| 7 | கிழக்குப் பல்கலைக்கழக சுகாதார பராமரிப்பு விஞ்ஞான பீடத்துக்கான காணி சுவீகரிப்புச் செயன்முறை 2009 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டிருந்தது டன், 2016 ஆம் ஆண்டில் பிரதேச செயலாளரினால் விலைமதிப்பீட்டுத் திணைக்களத்தின் மதிப்பீட்டு அறிக்கை பெறப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு (LCR) மேற்படி சுவீகரிப்பின் கொடுப்பனவிற்காக நிதி ஒதுக்கீடு பெறப்பட்டிருந்தது. எனினும், சுவீகரிப்பு சட்டத்தின் 17வது பிரிவின் பிரகாரம், கையகப்படுத்தும் அதிகாரி காணி சீர்திருத்த ஆணைக்குழுவிற்கு பணம் செலுத்தியிருக்கவில்லை. இத்தகைய நிதி ஒதுக்கீடு 2017 ஆம் ஆண்டில் மாவட்டச் செயலாளரால் உத்தேசிக்கப்பட்ட நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, 2023 | 2023 | காணிகளை தனதாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | விரைவாக பதில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2024 செப்தெம்பர் 30 திகதி வரை நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்பட்டிருக்கவில்ல. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திசெம்பர் 31 வரையிலும் மேற்படி காணி கையகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 8 | 2005 ஆம் ஆண்டில் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் திரைமடு பிரதேசத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களை மீள்குடியேற்றுவதற்காக காணி சுவீகரிப்புச் சட்டத்தின் கீழ் காணிகள் சுவீகரிக்கப்பட்டிருந்தன. 1950 இன் 09 ஆம் இலக்க காணி சுவீகரிப்புச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம், மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் திரைமடு கிராம சேவையாளர் பிரிவில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களை மீள்குடியேற்றுவதற்காக காணிகள் சுவீகரிக்கப்பட்டுள்ள போதிலும் பிரதேச செயலாளரினால் சுனாமியால் பாதிக்கப்படாத அரசாங்க உத்தியோகத்தர்களிற்காக 50 காணித்துண்டுகள் சுவீகரிக்கப்பட்டுள்ளன. அந்த சுவீகரிப்பு காரணமாக, பிரதேச செயலாளரால் காணி சுவீகரிப்பு நோக்கம் மீறப்பட்டுள்ளது. | 2023 | 1950 இன் 09 ஆம் இலக்க காணிகளை தனதாக்கல் சட்டத்தின் பிரிவு 02 இன்படி குறிப்பிட்ட குறிக்கோள்களுக்காக தனதாக்கப்பட்ட காணிகள் பயன்படுத்தப்பட வேண்டும். | விரைவாக பதில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2024 செப்தெம்பர் 30 திகதி வரை நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்பட்டிருக்கவில்ல. |
| 9 | 125 ஆம் இலக்க காணி கட்டளையின் பிரகாரம் காணி அபிவிருத்தி கட்டளைச்சட்டத்தின் | 2023 | 125 ஆம் இலக்க காணிக் கட்டளையின் படி செயற்பட | விரைவாக பதில் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2024 செப்தெம்பர் 30 திகதி வரை நடவடிக்கை ஏதும் எடுக்கப்பட்டிருக்கவில்ல. |

கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு காணி அனுமதிப்பத்திரங்கள;/ காணி அளிப்புக்களுக்கு குறிப்பிட்ட படிவத்தில் (LC 12) காணிப் பதிவேடு பேணப்பட வேண்டும். அதற்கு மேலதிகமாக 126 ஆம் இலக்க காணி கட்டளையின் பிரகாரம் அரசாங்க அதிபர்/ பிரதேச செயலாளர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியினால் தவணை கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட வேண்டும். வாழைச்சேனை, கோறளைப்பற்று பிரதேச செயலகத்தினால் 30 நடுத்தர வருமான குடும்பங்களுக்கு ஒவ்வொருவருக்கும் 10 ஏக்கர் காணி வழங்கப்பட்டிருந்த போதிலும் 22 அனுமதிப்பத்திரங்கள் கணக்காய்விற்காக மாத்திரமே வழங்கப்பட்டுள்ளன. காணிப் பதிவேட்டில் அத்தகைய பதிவுகள் இல்லாததால் எஞ்சிய 8 பேருக்கு அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதா இல்லையா என்பது கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, அந்த காணிகள் காணி ஆக்கிரமிப்புக்களிலிருந்து விடுபட்டவை என்பதை

வேண்டும்.

உறுதிப்படுத்த
முடியவில்லை.

## 3.5 கொழும்பு மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 8,982,349,621 | 963,922,168 | 8,018,427,453 | முனைப்பழியுள்ள |
| **2022** | 4,764,463,110 | 463,883,095 | 4,300,580,015 | முனைப்பழியுள்ள |
| **2023** | 5,548,499,247 | 394,015,515 | 5,154,483,732 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1. | கொலன்னாவ பிரதேச செயலகம் அமைந்துள்ள காணியில் அனுமதியின்றி 11 பேர் வதித்திருந்ததுடன் அவர்களை அவ்விடத்தை விட்டு அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவித்திருந்த போதிலும் அது தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | 2021 | காணியின் தெளிவான உரிமையை பெற்றுக்கொள்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | உடைமையை திருப்பிப் பெற்றுக்கொள்வதற்கு சட்டத்தின் கீழ் ஆரம்பமாக குறிப்பிட்ட அங்கீகாரமற்ற காணிகளிலிருந்து அகன்று செல்லும் படி அங்கீகாரமற்ற வதிவோருக்கு அகன்று செல்வதற்கான அறிவித்தல் அனுப்பப்பட்டுள்ளதுடன், அதன் பின்னர் அகன்று செல்லாவிடின் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 2. | பிரதேச செயலகம் ஒன்றினை தாபிப்பதற்கு முன் பிரதேச செயலக அதிகார தொகுதிக்குட்பட்ட பிரதேசம் மற்றும் எல்லையினை நிர்ணயிக்கப்பட்டு | 2021 | பிரதேச செயலகம் நிறுவுவதற்கு முன்னர் அந்த செயலக அதிகாரப் பிரதேசத்திற்கு அடங்கக்கூடி | திம்பிரிகஸ்யாய மற்றும் பாதுக்க பிரதேச செயலகங்களுக்காக குறிப்பிட்ட எல்லைகள் தீர்மானிக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட | 2024 செப்தம்பர் 30 வரை பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மும்மொழியிலும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டிய போதிலும் 1999 மார்ச் 03 ஆந் திகதி மற்றும் 1999 மே 19 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ள முறையே திம்பிரிகஸ்யாய மற்றும் பாதுக்க பிரதேச செயலகத்திற்கு சம்பந்தப்பட்ட எல்லையினை நிர்ணயிக்கப்பட்டு தொகுதியினை தாபிக்கும் வர்த்தமானி அறிவித்தலை பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | | ய பிரிவுகள் மற்றும் எல்லைகளை தீர்மானத்து மும்மொழிகளிலும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும். | வரைவு அறிக்கை தொடர் நடவடிக்கைக்காக உள்நாட்டு விவகார இராஜாங்க அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| 3. | 2022 திசெம்பர் 31 ஆந் திகதி அளவில் கொழும்பு மாவட்ட செயலகம் தீப்பிடித்தமையால் ஏற்பட்ட சேதங்களுக்கு 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதும் இதுவரை பொலீஸ் புலனாய்வு பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன் அந்த சேதங்களை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்காமல் காணப்பட்டதுடன் தீயினால் ஏற்பட்ட சேதத்தின் பெறுமதி ரூபா 92,606,688 ஆக இருந்தது. | 2022 | நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பான விசாரணைகள் விரைவாக நடாத்தப்பட்டு அதற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களுக்கு மற்றும் ஊழியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மற்றும் அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டம் தொடர்பாக நிதிப் பிரமாணக் கோவையின் இலக்கம் 101 மற்றும் 156 பிரமாணங்களின் ஏற்பாடுகளுக் | இது தொடர்பாக விசாரணை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், வெற்றிகரமான பதிலொன்று கிடைக்காமையால் கோப்பினை வட்டாரத்தில் கோப்பிடப்பட்டுள்ளது எனவும் மற்றும் நட்டத்தை பதிவழிப்பதற்குரிய இயலுமை தொடர்பாக அறிவுரையினை அரச நிதித் திணைக்களத்திடம் கோறப்பட்டுள்ளதுடன், குற்றவாளிகளை இனங்காண்பதற்கு முன்னர் நட்டத்தை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம் இதுவரை நடாத்தப்பட்டு | பரிந்துரைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | கு இணங்க அதற்கு பொறுப்பான தரப்பினரிடம் நிரப்பிக் கொள்வதற்கு மற்றும் அதன் பின்னர் சேதத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருகின்ற குற்ற விசாரணை அலுவல்களின் துணிவினை இழக்க நேரிடக்கூடும் எனவும், விசாரணை அலுவல்களை விரைவாக பூர்த்தி செய்து குற்றவாளிகளிடம் குறிப்பிட்ட நட்டத்தை அறவீடு செய்வதற்குரிய தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்தல் மிகவும் உகந்தது என அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| 4. | கொட்டபோடவத்தவில் அமைந்துள்ள அரசின் உத்தியோகபூர்வ விடுதிக்குரிய வாடகை வருமானம் நீண்ட காலமாக அறவிடப்படாதிருந்ததுடன் நீதிமன்ற கட்டளையின் பிரகாரமும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2022 | உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களில் வதியும் வாடகையாளர்கள் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்க செயற்படுதல். | இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் இணக்கத்தின் போது வழங்கப்பட்டிருந்த மெனிகாவத்த காணிக்கு பாதிலாக மாற்றுக் காணியொன்று தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்கு சாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி சீதாவக பிரதேச செயலாளருக்கும், அந்த வழக்கின் இணக்கச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்காக உரிய நடவடிக்கைககள் எடுப்பதற்காக வீடமைப்பு | பரிந்துரையின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர் சபைத் தீர்மானத்தை மிக விரைவாக பெற்றுக்கொள்வதற்கு மற்றும் அதனை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும் படி தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பொது முகாமையாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது என. | |
| 5 | பன்முகப்படுத்தப்பட்ட மூலதன பாதீட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2021 ஆண்டு தொடர்பாக 04 பிரதேச செயலகங்களில் செயற்படுத்தப்படாத, பாதியளவில் செயற்படுத்தப்பட்ட மற்றும் இரத்துச் செய்யப்பட்ட 53 செயற்திட்டங்களில் 39 இற்காக பண்டங்கள் மற்றும் சேவைகள் பெறுவதற்கு முன்னர் அதற்குரிய உறுதிச் சீட்டுக்கள் மற்றும் காசோலைகள் தயாரிக்கப்பட்டு ரூபா 1,674,120 இற்கான செலவுகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. குறிப்பிட்ட நிறுவனங்களினால் பண்டங்கள் வழங்கியிருக்கப்படாமையால் அந்தத் தொகை மீளாய்வாண்டின் அரச வருமானத்திற்கு செலவு | 2023 | திட்டமிட்டவாறு செயற்திட்டங்கள் உரிய சட்டங்கள், விதிகள் மற்றும் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயற்படுத்த வேண்டியதுடன், பண்டங்கள் கிடைக்க முன்னர் உறுதீச் சீட்டுக்கள் தயாரித்து காசோலைகள் எழுதுதல் தொடர்பாக முறையான விசாரணை ஒன்று நடாத்தப்பட வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களை ஏற்றுக்கொள்கின்றேன் என, பண்டங்கள் மற்றும் சேவைகள் பெற்றுக் கொள்வற்கு முன்னர் அதற்குரிய உறுதிச் சீட்டுக்கள் தயாரிக்கப்படுதல் தவறொன்று என ஏற்றுக்கொள்கின்றேன் என 2021 ஆண்டில் நிலவிய கொவிட் அழிவுடன் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி நிலைமையுடன் பண்டங்களின் விலைகள் அதிகரித்தல், வழங்கல்களின் பற்றாக்குறை காரணமாக காசோலைகள் வழங்கப்படாமல் அதற்குரிய பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்குதல் | பரிந்துரையின் படி செயற்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| வைக்கப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்படாத நிலைமையொன்று உருவாகிய போதிலும் நலன்பெறுவோருக்கு பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் கருத்துடன் காசோலைகள் எழுத்தப்பட்டிருந்த போதிலும் அதற்குரிய வழங்கல்களை பெற்றுக்கொள்ள முடியாமல் போனமையால் செயற்திட்டங்கள் தொடர்பாக எழுதப்பட்ட காசோலைகளை இரத்துச் செய்து அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. |

### 3.6 காலி மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | ஊரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 4,842,705,000 | 588,448,216 | 4,254,256,784 | முனைப்பழியுள்ள |
| **2022** | 4,968,614,605 | 420,582,814 | 4,548,031,791 | முனைப்பழியுள்ள |
| **2023** | 5,151,649,363 | 362,778,719 | 4,788,870,644 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | 19 பிரதேச செயலகங்களுக்குரிய 68 சமூக அடிப்படையிலான வங்கிகள மூலம் 669,338 கடனாலிகளுக்கு கொடுப்பனவு செயப்பட்டிருந்த ரூபா 21,598 மில்லியனான கடன் தொகையில் ரூபா 505.188 மில்லியன் ஆன தொகை காலம் பிந்திக் காணப்பட்டதுடன் 3,408 கடன் பெறுனர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 160.755 மில்லியன் தொகை ஐயக்கடனாக இனங்காணப்பட்டிருநதது. அக்கடனை விரைவில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 114,088 கடன் | 2021 | வழங்கப்பட்டுள்ள கடன் தொடர்பாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காலம் கடந்த கடன்கள் மற்றும் அறவிட முடியாக் கடன் அறவீடு செய்வதற்காக வழக்குகள் மற்றும் சட்டச் செயற்பாடுகள் பல எடுக்கப்பட்டுள்ளது. கொவிட் 19 தொற்றுநோய், உரத் தட்டுப்பாடு, சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைதல், கடன் சலுகைக் காலம் வழங்கப்படல் காரணமாக அவை நிலுவைக் கடனாக காணப்படுகின்றது. | 2024 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு 69 சமுர்த்தி வங்கிச் சங்கங்களினால் 713,059 கடன் பெறுவோருக்கு ரூபா 28,283 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது டன், அவற்றில் ரூபா 704.9 மில்லியன் காலம் கடந்த கடன் தொகுதி எனவும், 4959 கடன் பெறுவோருக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 340.38 மில்லியன் தொகை அறவிட முடியாக் கடன் எனவும், ரூபா 5,091.09 மில்லியன் தொகை நிலுவைக் கடன் என இனங்காணப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பெறுனர்களுக்கு கொடுப்பனவு செயயப்பட்டிருந்த ரூபா 5,096 மில்லியன் நிலுவையான கடன் மீதிகளாக இனங் காணப்பட்டிருந்தது. | | | | |
| 2 | கொவிட் 19 தொற்று காரணமாக 19 பிரதேச செயலகங்கள் மற்றும் 68 சமூர்த்தி வங்கிகள் மூலம் ரூபா 483.56 மில்லியன் நலனாலிகளுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதி வரை அப்பணத்தை மீள் நிரப்பப்பட்டிருக்கவில்லை. | 2021 | மீளளிப்புச் செய்யப்பட வேண்டிய தொகையினை விரைவாக மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சமூர்த்தி வங்கிக்கு சொந்தமான நிதியங்களில் இருந்து ரூபா 483.56 மில்லியன் தொகையொன்று திறைசேரியில் இருந்து சமூர்த்தி திணைக்களத்திற்கு மீளளிப்பு செய்யும் அடிப்படையில் நலன் பெறுவோருக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும், இதுவரை திறைசேரியில் இருந்து எந்த மாவட்டதிற்கும் அந்தப் பணம் மீளளிப்புச் செய்யப்படவில்லை | 2024 செப்தம்பர் 30 திகதி அளவிலும் ரூபா 483.56 மில்லியனிற்கான தொகை மீளளிப்பு செய்திருக்கவில்லை. |
| 3 | காலி மாவட்ட செயலகத்தில் 2000 ஆசனங்களுடனான கேட்போர் கூடமொன்ற நிர்ாணிப்பதற்கு ரூபா 2,656.877 மில்லியன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் வேலைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் ரூபா 874.785 மில்லியன் கொடுப்பனவு செய்யப் பட்டிருந்த பட்டியல் மற்றும் கையிலுள்ள | 2021 | உடன்படிக்கைக்கு இணங்க வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | இந்த கணக்காய்வு ஐயவினா, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டவாறு உள்நாட்டு விவகார அமைச்சுக்கு அனுப்பும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. | 2024 செப்தம்பர் 30 திகதி வரை பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பட்டியல் காணப்படுவதுடன் பௌதீக முன்னேற்றம் 15 சதவீதமும் அளவிலான குறைந்த மட்டமாகும். பூர்த்தி செய்யப்பட வேண்டிய வேலைகளுக்கு செலுத்த வேண்டிய தொகை ரூபா 238.953 மில்லியனாக இருந்தது. | | | | |
| 4 | 19 பிரதேச செயலகப் பிரிவுகள் தொடர்பாக பதிவுசெய்யப்பட்ட 228 கிராமசக்தி மக்கள் சங்கங்களில், 214 மக்கள் சங்கங்கள் 2021 திசெம்பர் 31 வரை செயலற்ற நிலையில் இருந்த அந்தச் செயலற்ற சங்கங்களின் வங்கி வைப்புத்தொகையாக ரூபா 98.383 மில்லியன் மீதி செயலற்ற நிலையில் உள்ளது. திட்ட நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக அனைத்து சங்கங்களின் அரச வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 104.240 மில்லியன் பயனற்ற நிலையில் இருந்தது. | 2021 | நிகழ்ச்சித் திட்டத்தின் குறிக்கோளை செயற்படுத்து தல் பல வருட காலம் முதல் பூர்த்தி செய்யப்படாதிருந்த காரணத்தினால் மற்றும் அதற்கு முறையான அறிவுரைகள் கிடைக்கப் பெறாமையால் செயற்படாத வங்கி மீதிகள் தொடர்பாக காலத்திற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | அமைச்சினால் இதற்காக சங்க செயற்பாடுகள் தொடர்பாக எதிர் காலத்தில் கொள்கைசார் தீர்மானமொன்று எடுக்கப்படும். அதன்படி, இந்த சங்கங்களை உயிர்ப்பித்து செயற்படுத்துவதற்கான இயலுமை காணப்படுகின்றது. | தற்போது 228 சங்கங்களில் 226 சங்கங்கள் செயற்படாத மட்டத்தில் காணப்படுவதுடன், அந்த செயற்படாத சங்கங்களின் வங்கிகளில் வைப்பு என ரூபா 109.35 மில்லியன் தொகை மீதியொன்று விளைவற்று காணப்பட்டது. |
| 5 | தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 2.3.1 உப பந்தியின் பிரகாரம் ரூபா 30,175 இனை விட சம்பளத்தை பெறும் பதவிநிலை உத்தியோகத்தர்களுக்கு 1991 சதுர | 2021 | தாபனக் கோவையின் ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும். | மாவட்டத்தின் பிரதான பதவியணி உத்தியோகத்தரின் உத்தியோகபூர்வ வாசஸ்தளமாக காணப்படுவதனால் அதன்படி, பொருந்தக்கூடிய விதமாக வரைபுகள் தயாரிக்கப்பட்டுள்ளது. மாவட்ட | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அடிக்கு மேற்படாத அளவில் அரசின் வீடு வழங்கப்பட வேண்டிய போதிலும் அதற்கு முரணாக 10,015 சதுர அடி ஆன வீடொன்று நிர்மாணிக்கப் பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் ஏப்ரல் முதல் 2021 திசெம்பர் வரை மாவட்ட செயலாளர் உத்தியோகபூர்வ விடுதிக்கான பராமரிப்பு செலவினம் மாத்திரம் ரூபா 1.504 மில்லியன் மாத்திரமாக இருந்தது. | | | செயலாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தளத்தின் 2020 ஏப்ரல் முதல் 2021 திசெம்பர் வரை நீர், மின்சார வீதவரி மற்றும் பாதுகாப்புக் கட்டணமாக ரூபா 1,504,688 இற்கான செலவொன்று மேற்கொள்ளப்பட்டி ருந்ததுடன், அவற்றில் ரூபா 1,361,662 தொகை செலவிடப்பட்டிருந்த து பாதுகாப்புச் சேவைக்காகவே என கருணையுடன் அறிவிக்கின்றேன். | |
| 6 | பட்டகன்வில மாவட்ட செயலக உத்தியோகபூர்வ விடுதியின் முன்னால் கேபியன் தடுப்பு சுவர் நிர்மாணத்திற்காக ரூபா 8.025 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. கேபியன் தடுப்பு சுவர் நிர்மாணத்திற்கு அண்மித்து உத்தியோகபூர்வ விடுதி அமைந்துள்ள காணியில் ஏற்பட்டிருந்த மண்சரிவின் பின்னர் 2018 மே 15 ஆந் திகதி கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் இடப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந் ததுடன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது , அதில் குறிப்பிடப்பட்ட பரிந்துரைகளுக்கு அமையாமல் கேபியன் சுவர் நிர்மாணித்தமை காரணமாக 2019 | 2021 | ஏற்பட்டிருந்த சேதம் தொடர்பாக முறையான விசாரணை ஒன்று மேற்கொண்டு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத் தர்களிடம் சேதத்தினை மீளளிப்புச் செய்ய வேண்டும். | கட்டிட ஆய்வு நிலையத்தின் அறிக்கையின் படி மாவட்ட செயலாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தளம் காணப்படும் காணியில் நீர் வடிந்து செல்வதற்காக வடிகால் முறைமையொன்று தயாரிப்பதற்காக பரிந்துரைக்கப்பட்டிரு ந்த போதிலும், அப்போது கேபியன் மதில் நிர்மாணிக்கும் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந் தது. மேற்கூறிய NBRO அறிக்கையின் பரிந்துரையின் படி வடிகால் முறைமை அமைப்பதற்கான அலுவல்கள் மாவட்ட | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டி ருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஒக்தோபர் 24, 25 ஆகிய இரண்டு நாட்களில் சுவரின் பகுதியொன்று உடைந்து விழுந்து சுவருக்கு சேதம் ஏற்பட்டிருந்தது. | | | செயலாளரின் உத்தியோகபூர்வ வாசஸ்தள நிர்மாண வேலையுடன் மேற்கொள்ள வேண்டியிருந்ததெனவும் அதன்படி, வடிகால் முறைமை நிர்மாணித்தல் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிர்மாண வேலை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் சந்தர்ப்பத்தில் கடும்மழை காரணமாக மண் இடிந்து மதிலின் ஒரு பகுதி சேதமடைந்திருந்தது. | |
| 7 | குறித்த கேபியன் மதில் விழுந்தமையால் அதனை உரிய நிலைக்கு கொண்டு வருவது தொடர்பாக 2020 ஏப்ரல் 10 ஆந் திகதி ரூபா 486,000 தொகையை அறவிட்டு தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அறிக்கைக்கு இணங்க மற்றும் அதன் பரிந்துரைகளின் பிரகாரம் சுவரை மீண்டும் கட்டியெழுப்பும் செயற்பாடு கேபியன் சுவருக்கு சேதம் ஏற்பட்டு 2 வருடங்கள் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலமொன்று கடந்திருந்த போதும் பூர்த்தி செய்யப் பட்டிருக்கவில்லை. | 2021 | ஏற்பட்ட சேதம் தொடர்பாக முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப் பட்டு பொறுப்புச் செல்ல வேண்டிய உத்தியோகத் தர்களிடம் மீளளிப்பு செய்துகொள்ள வேண்டும். | மதிலை உரிய நிலைக்கு ஆக்குவதற்காக பல தடவைகள் ஒப்பந்தக்காரர்களுக்கு அறிவிக்கப்பட்டது. ஆனால் அவர் 2022 ஜனவரி மாதத்தில் வேலையை ஆரம்பித்திருந்ததுடன், கேபியன் மதிலின் ஒரு பகுதி மாத்திரம் மீண்டும் சரி செய்யப்பட்டிருந்தது. | அமைச்சு மட்டத்தில் 03 உத்தியோகத்தர்கள் அடங்கிய விசாரணைக் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டு நி.பி. 104 இற்கு இணங்க முறையான விசாரணையொன்று நடாத்தி 03 பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மீதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | 2004 திசெம்பர் 26 ஆந் திகதி ஏற்பட்ட சுனாமி அனர்தத்தினால் இடம்பெயர்ந்த நபர்களுக்கு கோனாபினுவெல பிரதேச செயலகத்தினால் 26 வீட்டு நலனாலிகளுக்கு மானியப் பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2021 | இதுவரை கொடுப்பனவுப் பத்திரம் வழங்கப்பட்டிருக்காத குடும்பங்களுக்காக விசாரணைகள் நடாத்தி தகைமையுடைய நபர்களுக்கு கொடுப்பனவுப் பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2022 மார்ச் 03 திகதி மேற்கொள்ளப்பட்ட நடமாடும் சேவையின் கீழ் தற்போது வதிவர்களை அலுவலகத்திற்கு அழைத்து 2008/04 சுற்றறிக்கையின் படி ஆரம்ப விசாரணை நடாத்தப்பட்டடுள்ளது. அவர்களுக்கு கொடுப்பனவுப் பத்திரம் தயாரிப்பதற்கான அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதன் அதனை விரைவாக பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பேன். | ஒரு கொடுப்பனவு பத்திரம் உரிமையாளர் ஒருவருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், மேலும், 04 கொடுப்பனவுப் பத்திரங்கள் மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்தது. |
| 9 | 2004 திசெம்பர் 26 திகதி ஏற்பட்டிருந்த சுனாமி பேரழிவினால் இடம் பெயர்ந்தவர்களுக்கு காணி உறுதிகள் வழங்கும் போது அம்பலங்கொட பிரதேச செயலக அதிகார பிரதேசத்தின் 319 வீடுகள் பெறுவோர்களில் 2022 திசெம்பர் 31 திகதி வரை 105 பேர்களுக்கு மாத்திரமே காணி உறுதிகள் வழங்கப்பட்டிருந்தன. | 2022 | இந்த அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட வேண்டும். | மீதியான காணி உறுதிகளை வழங்குவதற்காக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 2024 செப்தம்பர் 30 திகதியில் உள்ளவாறு 138 பேருக்கு காணி உறுதிகள் வழங்கியிருக்கவில்லை. |
| 10 | வாடகை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக 36 வாடகையாளர்களுக்குரிய கோவைகள் ஹிக்கடுவ பிரதேச செயலகத்தின் மூலம் தென் மாகாண காணி | 2023 | விரைவாக குத்தகை தொகையை அறவீடு செய்து அரசுக்கு வருமானம் ஒன்றை அறவீடு | குத்தகையாளர் இருவர் தொடர்பாக குத்தகை அங்கீகாரக் கடிதங்கள் காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திலிருந்து | 2024 செப்தம்பர் 30 திகதியில் உள்ளவாறு 08 குத்தகையாளர்களிடம் மாத்திரம் வரி அறவீடு செய்யப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆணையாளருக்கு அனுப்பப்பட்டு கணக்காய்வுத் திகதியான 2023 செப்தெம்ர் 21 ஆந் திகதி வரையிலும் 01 வருடம் முதல் 06 வருடங்கள் வரையிலான கால வீச்சினை கடந்திருந்த போதிலும் அந்த அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. மேலும் காணி ஆணையாளர் நாயகத்தின் 2021 ஒக்தோபர் 22 ஆந் திகதிய இலக்கம் 2021/06 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் மொத்த அண்ணளவான மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு குறித்துரைத்த சதவீதத்தின் பிரகாரம் வருடாந்த வாடகைத் தொகை கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | கிடைத்திருந்ததுடன் , மீதியான 34 குத்தகையாளர்கள் தொடர்பாக காணி ஆணையாளர் நாயகத் திணைக்களத்திற்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுளளது என. | |
| 11 | றத்கம பிரதேச செயலகத்திற்காக புதிய கட்டடம் ஒன்றை வாடகைக்கு எடுக்கும் போது அரசாங்க மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் ரூபா 250,000 தொகைக்கு மாதாந்த மதிப்பீட்டு வாடகை வழங்கப்பட்டிருக்கும் போது அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் பிரதேச செயலாளரால் நியமிக்கப்பட்ட குழு ஒன்றினால் வழங்கப்பட்ட | 2023 | அரச பெறுமதி மதிப்பீட்டை வெளிப்படுத்தாமல் இந்த அலுவல் மேற்கொள்ளப்பட்டதென கணக்காய்வில் அவதானிக்கப்பட்டமையால் இது தொடர்பாக முறையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அரச மதிப்பீட்டுப் பெறுமதிக்கு கட்டிடத்தை வழங்குவதற்கு முடியாமையால் பக்கசார்பற்ற குழுவொன்று நியமனம் செய்து குத்தகை தொகையை மீண்டும் மதிப்பீடு செய்து குறிப்பிட்ட கட்டிடம் குத்தகைக்கு எடுக்கப்பட்டதென அறிவிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு குத்தகையாளருடன் | விசாரணை ஒன்று மேற்கொண்டு முறையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. |

| | |
|---|---|
| வாடகைப் பெறுமதியை அடிப்படையாகக் கொண்டு மாதாந்த வாடகை ரூபா 325,000 வீதம் 04 வருடகாலத்திற்காக வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. | நடைபெற்ற பரஸ்பர இணக்கப்பாட்டின் மீது பழைய கட்டிடத்திலிருந்த அகற்றப்பட்டிருந்த பிரிக்கும் பொருட்கள் புதிய கட்டிடத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது. |

### 3.7 கம்பஹா மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 5,809,732,879 | 250,042,338 | 5,559,690,541 | முனைப்பழியற்ற |
| **2022** | 6,525,777,851 | 1,945,310,899 | 4,580,466,952 | முனைப்பழியற்ற |
| **2023** | 7,196,572,495 | 1,031,319,122 | 6,165,253,373 | முனைப்பழியற்ற |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | மரணம் குறித்த அறிவிப்பில் தாமதம், ஓய்வூதிய சுற்றறிக்கைகளை கடைபிடிக்காமை மற்றும் பிற காரணங்களால் கம்பஹா மாவட்டத்திலுள்ள 13 பிரதேச செயலகங்களும் 2023 திசெம்பர் 31 ஆம் திகதியன்று ஓய்வூதியம் பெற்றுக் கொண்டிருந்த 419 ஓய்வூதியர்களுக்கு மொத்தமாக ரூபா 40,518,538 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. | 2021 2022 2023 | மிகைக் கொடுப்பனவு விரைவாக திருப்பி அறவீடு செய்வதற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2024 நவம்பர் 30 திகதிக்கு முன்னர் அறவீடு செய்வதற்கு அல்லது குறிப்பிட்ட தரப்பினரை அறிவுறுத்தி அறவீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | 2024 ஜூலை 31 திகதியில் உள்ளவாறு அளவில் மேலும் ரூபா 2,407,045 இற்கான மீதியொன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. |
| 2 | 2014 ஜூலை 15 ஆம் திகதி மஹர பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பெட்டகத்திலிருந்து பணம் காணாமல் போனமை தொடர்பில் நிதிப்பிரமாணம் 104(4) இன்படி நடைபெற்ற இறுதி விசாரணை அறிக்கையின்படி, 04 | 2021 2022 2023 | நட்டத்தை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அறவீடு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளாமை | 2014 ஆண்டில் மஹர பிரதேச செயலகத்தில் ஏற்பட்டிருந்த நிதி மோசடி தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவிடப்பட வேண்டிய நட்டத்தில் ரூபா | 2024 செப்தம்பர் 30 திகதியில் உள்ளவாறு, நட்டத்தில் ரூபா 84,550 இற்கான தொகை மாத்திரம் அறவீடு செய்யபட்பட்டுள்ளதுடன் மீதித் தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அதிகாரிகளிடமிருந்தும் ரூபா 270,561 சமமாகப் பெறப்பட வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டது. 2020 செப்டெம்பர் 22 ஆம் திகதி உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் கடிதத்திலிருந்து உரிய சேகரிப்புக்கான பரிந்துரை மற்றும் அங்கீகாரம் மற்றும் இழப்பை மீட்பதற்காக 2023 நவம்பர் 23 திகதிய பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் நட்டத்தை வசூலிப்பதற்கான உத்தரவு பிரகாரம் 2023 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் அரசுக்கு ஏற்பட்ட நட்டமான ரூபா 1,082,245 மோசடிக்கு காரணமான தரப்பினரிடமிருந்து 2023 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் அறவிடப்பட வேண்டும் என கட்டளையிடப்பட்டிருந்த போதிலும், அத்திகதியில் ரூபா 42,275 மட்டுமே வசூலிக்கப்பட்டடிருந்தது | | தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகக த்தர்களுக்கு எதிராக நிதிப் பிரமாணங்க ளுங்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 42,275 இற்கான தொகையொன்று அறவிடப்பட்டுள்ளது டன், மீதித் தொகையை அறவீடு செய்வதற்காக குறிப்பிட்ட உத்தியோகதர்களு க்கு மற்றும் அவர்கள் கடமையாற்றும் நிறுவனங்களுக்கு தொடர்ச்சியாக அறிவுருத்தல் மேற்கொள்ளப்பட்டு ள்ளது. | ல்லை. |
| 3 | மினுவாங்கொடை பிரதேச செயலகத்தினால் 2011 பெப்ரவரி 10 முதல் 2013 ஜூலை வரையான காலப்பகுதியில் | 2021<br>2022<br>2023 | மேல் மாகாண பிரதான செயலாளரின் இலக்கம் WP/ADM/09-34/F1/101 | மேல் மாகாண பிரதான செயலாளரின் இலக்கம் CSWP/ADM/09-34/F1/101 மற்றும் 2021 ஜூலை 26 | 2024 செப்தம்பர் 30 திகதி அளவிலும் குறிப்பிட்ட அறவீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டி ருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பெறப்பட்ட செலுத்தப்படாத பொது உதவித் தொகை ரூபா 1,441,400 பெண் உத்தியோகத்ததர் ஒருவரால் தவறான முறையில் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் 104(4) அறிக்கையின் பிரகாரம் அதே தொகை மற்றும் 2 சதவீதம் மிகைக் கட்டணம் அறவிடுமாறு பிரதம செயலாளரின் 2021 யூலை 26 ஆந் திகதிய கடிதத்தின் படி அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தாலும், 2023 நவம்பர் 08 ஆந் திகதி வரை ரூபா 84,840 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது | | மற்றும் 2021 ஜுலை 26 திகதிய கடிதத்தின் படி ரூபா 1,470,268 இற்கான தொகை சமமான 03 தவணைகளில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | திகதிய கடிதத்தின் படி ரூபா 1,470,268 இற்கான தொகை சமமான 03 தவணைகளில் அறவீடு செய்யப்பட வேண்டும் என அப்போதைய மாவட்ட செயலாளரின் இலக்கம் கம்/திலே/05/மினு/முவ மற்றும் 2021 ஆகஸ்ட் 06 திகதிய கடிதத்தின் மூலம் ஜாஎல பிரதிச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த பெண் உத்தியோகத்தர் தற்போது ஒய்வு பெற்றுள்ளார். அறவீடு செய்வதற்குரிய தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| 4 | மீரிகம பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 8,202,635 செலவில் நிர்மாணிக்கப்பட்ட 10 சேவை பியச கட்டிடங்கள் பகுதியளவு நிறைவ செய்யப்பட்டு பயன்படுத்தப்படாமல் உள்ளன. | 2022 2023 | நிர்மாண வேலையை பூர்த்தி செய்து ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படுத்த வேண்டும். | அனைத்து சேவை இல்லங்களும் மற்றும் உத்தியோகபூர்வ இல்ல அலுவலகங்களின் குறைபாடுகளை பூர்த்தி செய்வதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு உள்நாட்டு விவகார அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட மதிப்பீடுகள் 2024 ஆண்டு பாதீட்டு முன்மொழிவுகள் என உட்படுத்தப்பட்டுள் | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | ளது எனவும், அந்த அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருந் தது. என கருணையுடன் தெரிவித்துக்கொள்க ின்றேன். | |
| 5 | மினுவாங்கொடை நாலந்தா ஆண்கள் பாடசாலையில் ஒரு குழாய்க் கிணறு நிர்மாணிக்கப்பட்டு நீர்ப்பம்பியினைப் பொருத்தி நீரினைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 800,714 செலவு செய்யப்பட்டதன் பின்னர் செயற்திட்டம் முழுமையாக கைவிடப்பட்டதன் காரணமாக அப்பணம் விளைவற்ற | 2022 | உடன்பட்டிருந் த கால எல்லையுள் செயற்திட்டத் தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. | நீர் மாதிரிப் பரிசோதனையின் பின்னர் விரைவாக குழாய்க் கினறுகள் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின் றது. | நீர் மாதிரிப் பரிசோதனையின் பின்னர் தோல்வியடைந்த செயற்திட்டமொன்று என இனங்காணப்பட்டுள் ளது. |
| 6 | மஹர பிரதேச செயலகத்தின் சபிரிகமக் திட்டத்தின் கீழ் 2020 ஆம் ஆண்டு ரூபா 481,086 செலவில் நிர்மாணிக்கப்பட்ட உறுவல மேற்கு விவசாய உபகரண களஞ்சிய வளாகம், பணிகள் நிறைவடையாத காரணத்தினால் குறித்த நோக்கத்திற்காக பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. மேல் தளச் சுவர்களை ப்ளாஸ்டெரிங் செய்தல் மற்றும் படிக்கட்டுகளுக்கு ஒரு கைப்பிடியை வழங்குதல் போன்ற பணிகளை நிறைவு செய்யாமையால் உத்தேச நோக்கங்களக்கு பயன்படுத்த முடியாது | 2023 | நிர்மாண வேலையை பூர்த்தி செய்து ஆக்கபூர்வமா ன கருமங்களுக் கு பயன்படுத்த வேண்டும். | செயற்திட்டத்தை முழுமையாக பூர்த்தி செய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாட்டுத் தொகை போதியளவாக காணப்படவில்லை. செயற்திட்டத்திற்கா க அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாட்டுத் தொகையின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள வேலைப் பகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டம் அந்த ஆண்டிலேயே பூர்த்தி செய்யப்பட்டதுடன், வேலை பூர்த்தி செய்யப்படாத | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டி ருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காணப்பட்டது. | | | பகுதிகளுக்கான ஏற்பாடுகள் ஒதுக்கப்படவில்லை. | |
| 7 | 2022 ஆம் ஆண்டு மஹர பிரதேச செயலகப் பிரிவின் கிரிக்கித்த கிழக்கு சேவை பியசவிற்கு 03 அறைகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 290,478 செலவிடப்பட்ட போதிலும் கட்டிடத்தின் ஜன்னல் கதவுகள் இடப்பட்டு பாவனைக்கு உகந்ததாக மாற்றப்படவில்லை. | 2023 | நிர்மாண வேலையை பூர்த்தி செய்து ஆக்கபூர்வமான கருமங்களுக்கு பயன்படுத்த வேண்டும். | குறிப்பிட்ட செயற்திட்டத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட ஏற்பாட்டுத் தொகையின் கீழ் மதிப்பீடு செய்யப்பட்ட வேலைப் பகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. | பரிந்துரைகள் செயற்படுத்தப்படவில்லை. |
| 8 | கம சமக பிளிசந்தர நிகழ்ச்சித் திட்டம் 2022 இன் கீழ் அத்தனகல்ல பிரதேச அலுவலகம் 367 நாகொட கிராம உத்தியோகத்தர் பிரிவின் விளையாட்டு மைதானத்தின் அருகே அமைந்துள்ள காணியில் பல்நோக்கு கட்டிடம் ஒன்றினை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,200,000 தொகையில் ரூபா 336,821 செலவிடப்பட்டு 10 தூண்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு இடை நடுவே நிறுத்தப்பட்டிருந்தது | 2023 | உடன்படிக்கைக் காலப் பகுதியினுள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. | செயற்திட்டத்தின் பெறுமதி ரூபா 1,200,000 தொகையாகும். பூர்த்தி செய்யப்பட்ட வேலைப் பகுதியாகிய 10 கொங்கிரீட் தூண்கள் நிர்மாணிப்பதற்காக ரூபா 336,821 இற்கான தொகையொன்று செலுத்தப்பட்டுள்ளது. இரண்டாம் காலண்டுக்கான பணம் ஒதுக்கப்படாமையால் மீதி வேலைகளை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் உள்ளது என அறிவிக்கின்றேன். | ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையால் மீதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 9 | வத்தளை பிரதேச செயலகத்தின் தேல வடக்கு கர்ப்பிணி பிணியாய்வு கட்டிடத்தில் மற்றும் வாசிகசாலை | 2023 | விரைவாக ஏற்பாடுகளுக்கு விண்ணப்பித்து செயற்திட்டத்தை பூர்த்தி | கட்டிடம் அத்திவாரம் இடப்பட்டு செங்கல்லினால் கூரை மட்டம் வரை நிர்மானிக்கப்பட்டுள் | பரிந்துரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கட்டிடத்தினை நிர்மாணித்தல் 2020 ஆம் ஆண்டின் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் கிடைத்த ரூபா 500,000 தொகையான நிதியேற்பாடு மற்றும் 2021 ஆம் ஆண்டில் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் கிடைத்த ரூபா 400,000 தொகையான நிதியேற்பாடுகளில் முறையே ரூபா 491,091 மற்றும் ரூபா 388,242 பயன்படுத்தப்பட்டு ,ந்த கட்டிடத்தில் அத்திவாரம் இடப்பட்டு செங்களால் கூரை வரையிலும் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டு செயல் திட்டத்தினை நிறைவு செய்யாது கைவிடப்பட்டமையால் செலவிடப்பட்ட மொத்த தொகையும் விளைவற்ற செலவினமாகி உள்ளமை அவதானிக்கப்பட்டது. | | செய்து பயன்படுத்தக் கூடிய நிலைமைக்கு ஆக்க வேண்டும் என. | ளது. ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையால் தற்போது வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளது. ஏற்பாடுகள் பெற்றுக்கொண்டு வேலைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| 10 | 2021 சௌபாக்கியம் உற்பத்தி கிராமங்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அத்தகல்ல பிரதேச செயலகத்திற்கு தங்க ஆபரணங்கள் மற்றும் பித்தளை உற்பத்தியாளர்களுக்கு பயன்படுத்துவதற்கும், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கும் ரூபா 2,925,000 செலவினம் மேற்கொள்ளப்பட்டு | 2023 | சொத்துக்களை பயன்படுத்தக் கூடிய நிலைமைக்கு ஆக்கி ஆக்கபூர்வமாகப் பயன்படுத்த வேண்டும் என. | பிரதேச கூட்டிணைந்த குழுவிற்கு எழுத்துமூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதற்கு பதிலாக சில மாதங்களினுள் நீர் மின்சக்தியுடனான முழுமையான கட்டிடம் தயாரித்துத் தருவது என அத்தனகல்ல பிரதேச | 2024 செப்தம்பர் 30 திகதி அளவிலும் குறைந்த மட்ட உட்கட்டமைப்பு வசதிகள் ஆகிய நீர், மின்சாரம் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அத்தனகல்ல பிரதேச சபைக்கு சொந்தமான போனேகல பிரிவில் விளையாட்டு திடலுடனான காணியில் 02 மாடிகளை கொண்ட இடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை அவ்வாறே ஆக குறைந்த உட் கட்டமைப்பு வசதிகளான நீர் மின்சாரம் ஆகியவற்றை பெற்றுக் கொள்ள முடியாது இருந்தது. | | | கூட்டிணைந்த குழுவினால் இணக்கப்பாடு தெரிவித்திருந்தன என அறிவிக்கின்றேன். | |
| 11 | அத்தனகல்ல பிரதேச செயலகத்தின் செயல்திட்ட இலக்கம் ATT/RIDP/16/146/3/2017 இன் பகுதி அளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த தொழில்சார் பயிற்சி நிலையத்தின் பணிகளை நிறைவு செய்வதற்காக "2020 சபரி கமக் நிகழ்ச்சி திட்டம்" இன் கீழ் ரூபா 1,980,171 செலவிடப்பட்டிருந்தது. குறித்த பல்நோக்கு கட்டிடத்தின் திட்டத்தின் பிரகாரம் 2023 ஜூலை மாத அளவில் உடற்பயிற்சி நிலையம் ஒன்றினையும் அதனை அண்மையதாக 03 அறைகளையும் சுவர் எழுப்பி கூரை நிறைவு செய்யப்பட்டுள்ள போதிலும் பயன்பாட்டிற்கு எடுக்கக்கூடிய | 2023 | உடன்படிக்கை காலப் பகுதியினுள் செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. | கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் - 2017 மற்றும் சபிரிகம நிகழ்ச்சித் திட்டம் - 2020 இன் கீழ் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டிலும் மாகாண சபை நிகழ்ச்சித் திட்டம், பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்படி நிலவுகின்ற குறைபாடுகள் சரி செய்யப்படவுள்ளது. எதிர் காலத்தில் குறிப்பிட்ட நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்து செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின் | 2024 செப்தம்பர் 30 திகதி அளவில் உடற்பயிற்சி மையம் பயன்படுத்தக் கூடிய மட்டத்திற்கு குறிப்பிட்ட நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| நிலையில் குறித்த நிர்மாண பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்காத காரணத்தால் செலவிடப்பட்ட பணம் விளைவற்ற செலவினமாகி உள்ளமை. | றது. |

## 3.8 ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 5,978,609,705 | 243,734,676 | 5,734,875,029 | முனைப்பழியுள்ள |
| **2022** | 20,959,895,066 | 130,259,276 | 20,829,635,790 | முனைப்பழியுள்ள |
| **2023** | 6,274,665,277 | 73,929,848 | 6,200,735,429 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் வீதியின் பாதம் 100 மில்லிமீற்றர் தடிப்பில் ABC இடப்பட வேண்டிய போதிலும் 90 மில்லிமீற்றர் தடிப்பில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 07 பிரதேச செயலகங்களில் ஒப்பந்தக்காரர்களுக்கு உரிய நியமத்தில் மேற்கொள்ளாத வீதிகளுக்காக திட்டம் தயாரிக்கப்பட்டு ரூபா 4,112,657 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 2021 | மதிப்பீட்டுக்கு இணங்க செயற்பட வேண்டும். | எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக அறிவிக்கப்படவில்லை. | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 2 | அம்பலந்தோட்ட பிரதேச செயலகப் பிரிவின் கணிய அனுமதிப்பத்திர தாரரின் அறிக்கையின் பிரகாரம் அகழப்பட்ட மொத்த கருங்கல் அளவு 173,586.2 கியுப்களாக இருந்ததுடன் வனச் சட்டத்தின் பிரகாரம் அனுமதிப்பத்திர | 2021 | வனாந்தர கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட 1600/18 இலக்கம் கொண்ட 2009 மே 06 திகதிய அதிவிஷேட வர்த்தமானி | சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுரையின் படி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது என . | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தாரரிடமிருந்து அறவிடப்பட வேண்டிய மொத்தம் ரூபா 173,586,200 ஆன அரசின் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. எனினும் அனுமதிப்பத்திரதாரரால் அகழப்பட்ட மொத்த கருங்கல் கியுப் அளவு எவ்வளவு என்பது தொடர்பாக இனங் காண்பதற்கு விசேட அறிக்கையொன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்கு இணங்க மேலும் அறவிடப்பட வேண்டிய அரசின் கட்டணங்கள் அளவு இனங் காணப்பட வேண்டுமென அவதானிக்கப்பட்டது. | | அறிவித்தலின் பந்தி 10(1) இற்கு இணங்க செயற்பட வேண்டும். | | |
| 3 | புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்க பணியகத்தின் மூலம் விநியோகிக்கப் பட்டிருந்த அகழ்வு அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளுக்கு இணங்காமல் அம்பாந்தோட்டை மாவட்ட செயலகத்தினால் வெடிபொருட்கள் அனுமதிப்பத்திரங்களின் கீழ் 2011 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை 27,100 மின் டெடினேடர் முறையற்ற வகையில் வழங்கப்பட்டிருந்தன. | 2021 | புவிச் சரிதவியல் அளவைகள் மற்றும் சுரங்கங்கள் பணியகத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்த அகழ்வு அனுமதிப்பத்திரத்தின் நிபந்தனைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | எடுக்கப்பட்ட நடவடிக்கை தொடர்பாக அறிவிக்கப்படவில்லை. | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 4 | 2019 ஜனவரி 11 திகதிய 19/0549/101/030 இலக்கம் கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் | 2022 | தாமதமின்றி குறிப்பிட்ட காலப் பகுதியில் கடனை திருப்பி | குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு சமர்ப்பித்து அரிசி ஆலை உரிமையாளர்களுக்கு எதிராக சட்ட | 2024 செப்தம்பர் மாதம் வரை கடன் அறவீடு செய்யப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரகாரம் சிறு மற்றும் மத்திய அளவிலான நெல் ஆலை உரிமையாளர்களுக்கு கடன் சலுகை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 06 மாத சலுகைக் காலத்தின் பின்னர் திருப்பிச் செலுத்துவதற்காக 10 தரப்பினருக்கு வழங்கியிருந்த ரூபா 38,000,000 இற்கான கடன் தொகையில் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 22,638,517 தொகை நிலுவையாக காணப்பட்டது. | | அறவீடு செய்ய வேண்டும். | செயற்பாடுகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| 5 | லுனுகம்வெஹெர பிரதேச செயலக ஆலவலக கட்டிடத் தொகுதியை நிர்மாணித்தல் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக நிர்மாண ஒப்பந்த நிறுவனம் ஒன்றின் மூலம் பொறியியல் மதிப்பீட்டினை விட குறைவான ரூபா 113,816,772 எனும் விலை வழங்கப்பட்டிருந்ததுடன், தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மூலம் அந் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட விலைமனு தரமற்றதெனக் குறிப்பிட்டு அவ் விலைமனு நிராகரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், அது 2006 அரச | 2023 | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் படி பெறுகை செய்முறையின் மூலம் எதிர் பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் நிறைவேற்றப் படுகின்றதென உறுதிப்படுத்தும் முறையில் செயற்பட வேண்டியதுடன், ஏற்பட்டுள்ள நட்டம் ஒப்பந்த வேலைகள் வழங்கிய பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் | நடவடிக்கைகள் அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | நட்டத்தை அறவீடு செய்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.8(ஈ) பிரிவின் பிரகாரம் விலைமனுவினை நிராகரிக்கும் அளவிலான பாரிய காரணம் ஒன்றல்லாதிருந்ததனாலும், 7.9.2 (க) பிரிவின் பிரகாரம் விலைமனுக்களில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பாகன தெளிவினைப் பெற்றுக்கொள்ளும் முகமாக விலைமனுதாரரிடம் வேண்டுகோல் விடுக்க முடியுமாக இருந்த போதும், அவ்வாறின்றி அவ் விலைமனு நிராகரிக்கப்பட்டு பொறியியல் மதிப்பீட்டினை விட 11.5 வீத அதிக விலையுடன் கூடிய ரூபா. 127,587,772 தொகையினை வழங்கியிருந்த ஒப்பந்த நிறுவனத்திற்கு வழங்கியமையின் மூலம் அரசிற்கு ரூபா. 13,771,092 நட்டம் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | அறவீடு செய்ய வேண்டும். | | |
| 6 | அங்குனுகொலபெலெஸ்ஸ புதிய பிரதேச செயலக கட்டிடத்தினை நிர்மாணித்தல் - கட்டம் II. பொறியியல் மதிப்பீட்டுத் தொகையான ரூபா. 202,233,895 இற்கு மேலதிகமாக 11.6 வீத விலை அதிகரிப்புடன் மத்திய பொறியியல் | 2023 | அமைச்சரவையினால் பரிந்துரைக்கப்பட்ட விலை அதிகரிப்பு எல்லையை மிகைத்து அமைச்சரவை அங்கீகாரம் மற்றும் பெறுமை குழுவின் | நடவடிக்கைகள் அறிவிக்கப்படவில்லை. | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சேவை தனியார் நிறுவனத்தின் மூலம் வழங்கப்பட்ட ரூபா. 224,616,800 விலைகளின் அடிப்படையில் நேரடியாக அந் நிறுவனத்திடம் ஒப்படைப்பதற்கான அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப்பெற்றிருந்தது. அவ்வாறிருந்தும், ஒதுக்கப்படும் திருத்தப்பட்ட நிதியின் அடிப்படையில் மீளத் தயாரிக்கப்பட்ட ரூபா. 58,658,156 ஆகிய பொறியியல் மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் 30.5 வீத விலை அதிகரிப்புடன் ரூபா. 76,604,246 தொகைக்கு மத்திய பொறியியல் சேவை தனியார் நிறுவனத்திற்கு பிரதேச செயலாளரினால் ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்த போதும், அதற்கான பெறுகைகள் குழுவினதும் அமைச்சரவையினதும் பரிந்துரை பெறப்பட்டிருக்கவில்லை | | அங்கீகாரம் பெற்றுக்கொள்ளாமல் சாட்டுவதற்கு நடவடிக்கை எடுத்த தரப்பினர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | | |
| 7 | 2006 அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.4 (அ) பிரிவின் பிரகாரம் பெறுமதி குறைந்த, உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியுமான பொருட்கள், ஏற்றுக்கொள்ளப்பட்ட விவரக்குறிப்புகளைக் கொண்ட பெறுமதி | 2023 | செயற்திட்டத்திற்காக கொள்வனவு செய்யும் போது 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் அறிவுரைகளின் படி மிகவும் பொருத்தமான பெறுகை | பெறுகை வழிகாட்டல் கோவையை கடை பிடித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் படி அறிவுறுத்தல். | முறையான விசாரணை ஒன்று நடாத்தி பெறுகை வழிகாட்டல் கோவையை மீறிய உத்தியோகத்தர் தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | குறைந்த பொருட்களை கொள்வனவு செய்வதற்கு சந்தை ஒப்பீட்டு விலை முறைமை பயன்படுத்தப்பட முடியுமாக இருந்த போதும், திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்தின் மூலம் 2022ஆம் ஆண்டு மொத்தம் ரூபா. 5,265,824 பெறுமதியான 118 நீர் பம்புகள் கொள்வனவு செய்யப்படும் பொதும், மாவட்ட செயலகத்தினால் இளைஞர் விவசாய தொழில் முயற்சியாளர் முன்னோடி திட்டத்திற்காக மொத்தப் பெறுமதி ரூபா. 63,787,698 கொண்ட பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்ட போது தேசிய போட்டி அடிப்படையிலான விலை மனுக் கொரலின்றி சந்தை ஒப்பீட்டு விலை முறைமை பயன்படுத்தப்பட்டு விலை கோரப்பட்டிருந்தது. | | முறையொன்று தெரிவு செய்ய வேண்டியதுடன், வழிகாட்டல் கோவையின் அறிவுரைகளை மீறல் மேற்கொண்ட உத்தியோகத்தர் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | | |
| 8 | 2020 மார்ச் 25 ஆம் திகதிய அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிற்சேர்க்கை இல. 35இன் பிரகாரம் மாவட்ட மற்றும் பிரதேச பெறுகைகள் குழுவின் பொருள் பெறுகை நடவடிக்கைகளுக்கான அதிகார எல்லைகள் | 2023 | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் படி உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டும். | லுனுகம்வெஹர பிரதேச செயலகத்தினால் இனிமேல் இந்த எல்லைகள் தொடர்பாக மிகவும் கவனத்துடன் செயற்படுவதற்கு தேவையான அறிவுரைகள் விடய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது | லுனுகம்வெஹர பிரதேச செயலகத்தினால் மாத்திரம் தேவையான அறிவுரைகள் விடய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய நிறுவனங்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முறையே ரூபா. 10 மில்லியன் மற்றும் ரூபா. 1 மில்லியனாக இருந்த போதும் மாவட்ட செயலகம் மற்றும் லுனுகம்வெஹெர, கடுவன மற்றும் பெலிஅத்தை பிரதேச செயலகங்களின் மூலம் அவ்வெல்லைகளைத் தாண்டி 22 சந்தர்ப்பங்களில் ரூபா. 72,079,992 பெறுமதியான உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | | | என. | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 9 | மாகம் ருஹுனுபர நிருவாகக் கட்டடத் தொகுதியின் 2023/2024 வருடங்களுக்கான சுத்திகரிப்பு சேவை வழங்கும் நடவடிக்கைகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் தென் மாகாண பிரதி தொழில் ஆணையாளர் மூலம் பரிந்துரைக்கப்பட்ட, குறைந்தபட்ச விலை சமர்ப்பித்திருந்த ஒப்பந்தக்காரரின் விலைமனு நிராகரிக்கப்பட்டு 2006 அரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.9.2 பிரிவுடன் தொடர்பான பெறுகைகள் செயற்பாட்டுக் கோவையின் 7.9.2 (ஓ) பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் பிரகாரம் செயற்படாது, மூன்றாவது குறைந்த விலையினை | 2023 | 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளின் படி உத்தியோகத்தர்கள் செயற்பட வேண்டும். | நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பெறுகை வழிகாட்டல் கோவையிற்கு முரணாக செயற்பட்டதனால் ஏற்பட்டிருந்த நட்டத்தை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சமர்ப்பித்திருந்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டதன் காரணமாக ரூபா. 1,871,829 நட்டம் ஏற்பட்டிருந்தது. | | | | |
| 10 | அம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தின் மூலம் சௌபாக்யா உற்பத்திக் கிராம வேலைத்திட்டம் 2021 இன் கீழ் கேலியபுர மட்பாண்டத் தொழிலாளர் சங்கத்திற்காக ரூபா. 769,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரத்தின் விதந்துரைகள், பயனாளிகளின் தேவைகளோடு பொருந்தாததன் காரணமாகவும் மற்றும் மீண்டும் மீண்டும் பழுதடைந்ததன் காரணமாகவும் 2023 யூலை மாதம் தொடக்கம் அவ்வியந்திரம் பயன்பாட்டிலிருந்து ஒதுக்கப்பட்டிருந்தது.இதன் காரணமாக திட்டத்தின் நோக்கம் நிறைவேறாதிருந்ததுடன், இயந்திரத்திற்காக செலவிடப்பட்ட ரூபா. 769,000 தொகை பயனற்ற செலவாக அவதானிக்கப்பட்டது. | 2023 | செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட காலத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். | உடன்படிக்கைக் காலம் முடிவடைந்திருந்ததால் திருத்த வேலைக்கான மதிப்பீடு வழங்குனரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது எனவும், அது தொடர்பாக நிர்மாண வேலையில் ஈடுபட்டுள்ள சங்கங்களுடன் கலந்துரையாடி தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | இயந்திரம் செயற்படாத நிலையில் காணப்பட்டது. செயற்திட்டத்தின் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| 11 | 2022/2023 பெரும்போகத்தின் போது அரசின் நெல் கொள்வனவு செய்தல் மற்றும் நெல் இருப்பினை வெளியேற்றல் வேலைத்திட்டத்துடன் | 2023 | நெல் கொள்வனவு தொடர்பாக திறைசேரிச் செயலாளரின் அறிவுரைகளுக்கு இணங்க செயற்பட | நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை. | 2024 செப்தம்பர் 30 திகதி அளவிலும் இந்த பதிவழித்தல் தொடர்பாக முறைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொடர்பான திரைசேரி செயலாளரின் DFD/2023-1 இலக்கமும் 2023 பெப்ரவரி 09 திகதியும் கொண்ட சுற்றறிக்கையின் 2.3.5 பிரிவின் பிரகாரம் 08 பிரதேச செயலகங்களின் மூலம் நெல் இருப்பின் உண்மையான ஈரலிப்பு சதவீதத்திற்குப் பதிலாக மொத்த நெல் இருப்பின் ஈரலிப்பு சதவீதம் 22 என தீர்மாணிக்கப்பட்டிருந்தது. இதனடிப்படையில், கொள்வனவு செய்யப்பட்டிருந்த ஒவ்வொரு 100 கிலோ ஈரமடைந்த நெல்லிலிருந்தும் 12.5 கிலோ வீதம் அதாவது 10,340,983 கிலோ நெல்லிலிருந்து 1,292,623 கிலோ நெல்லினை ஈரலிப்பிற்காக நீக்கிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன், அவ்வாறு நீக்கப்பட்டிருந்த நெல்லின் கொள்வனவுப் பெறுமதி ரூபா. 113,750,824 ஆகவிருந்தது. | | வேண்டும். | | |
| 12 | 10 பிரதேச செயலகங்களின் மூலம் ஓய்வூதியம் பெறுவோர் 29 பேருக்கு மேலதிகமாக செலுத்தப்பட்ட கூட்டுத்தொகை ரூபா. 6,025,880 தெகையில் ரூபா. 3,407,938 ஓய்வூதியத் தொகையானது 2023 | 2023 | மிகைக் கொடுப்பனவு அறவிடப்பட வேண்டும். | பிரதேச செயலகங்களில் மிகையாக ஓய்வூதியக் கொடுப்பனவு செய்தலை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. | 2024.07.31 திகதியில் உள்ளவாறு 06 ஓய்வூதியம் பெறுவோர்களிடம் மிகை கொடுப்பனவு அறவீடு செய்யப்பட்டுள்ளது. மீதியான 23 பேர்களிடம் மேலும், ரூபா 2,757,730 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திசம்பர் 31ஆம் திகதியன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. | | | | இற்கான தொகையொன்று அறவிடப்பட வேண்டியிருந்தது. |
| 13 | அம்பாந்தோட்டை நிருவாகக் கட்டிடத் தொகுதிக்கு அருகில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 12 அரச வீடுகளுக்காக மாவட்ட செயலக பிரதான நீர் இணைப்பிலிருந்து வழங்கப்பட்ட நீருக்காக 01 முதல் 09 வரையிலான கால இடைவெளியுடன் தொடர்பான 2023 யூன் 13ஆம் திகதியன்று கூட்டுத்தொகை ரூபா. 1,905,190 நீர்க் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2023 | உரிய முறையில் நீர்க் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். | அறிவிக்கப்படவில்லை. | நீர்க் கட்டணம் 2024 செப்தம்பர் மாதம் வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| 14 | அம்பாந்தோட்டை பிரதேச செயலகத்தின் மூலம் செயற்படுத்தப்பட்டிருந்த அம்பாந்தோட்டை வர்த்தக வலயத்திற்கான காணியை பெற்றுக் கொள்வதற்காக குடியிருப்பாளர்கள் 112 பேருக்கு வீடுகளும், 07 பேருக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் காணிகளும் வழங்கப்பட்டு சுமார் 17 வருடங்கள் கடந்திருந்த போதும், அச் சொத்துக்களுக்கு உரிமை கோருவதற்கான முறையான ஆவணங்கள் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | ஆதனங்களுக்காக உரிமைப் பத்திரம் வழங்கப்பட வேண்டும். | அறிவிக்கப்படவில்லை. | 2024 செப்தம்பர் மாதம் வரை காணி உரிமையாளர்களுக்கு தடையற்ற உரித்துறுதிப் பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15 | திஸ்ஸமஹாராம பிரதேச செயலகத்தில் 2019, 2020, 2022 மற்றும் 2023 ஆம் வருடங்களில் காணி பதிவுக் காரியாலயங்கள் மூலம் இனங்காணப்பட்ட 35 விண்ணப்பதாரர்களுக்காக தயாரிக்கப்பட்டிருந்த அனுமதிப் பத்திரங்கள் மற்றும் கொள்வனவு விலையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்த 08 அனுமதிப்பத்திரங்கள் 2023 நவம்பர் 06 ஆம் திகதி வரை அனுமதிப்பத்திர உரிமையாளர் களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணமாக அரசிற்கு சேர வேண்டிய வருமானம் கிடைக்காது போயுள்ளமை அவதானிக்கப்பட்டது. | 2023 | வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்களை குறிப்பிட்ட அனுமதிப்பத்திரதாரர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணி அனுமதிப்பத்திரம் மற்றும் கொள்வனவு விலை அனுமதிப்பத்திரம் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு எடுத்துச் செல்லுமாறு கிராம உத்தியோகத்தர்களின் மூலம் நலன் பெறுவோருக்கு அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | கொள்வனவு விலையின் மீது தயாரிக்கப்பட்டிருந்த அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.9 களுத்துறை மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 3,484,342,608 | 467,133,878 | 3,017,208,730 | முனைப்பழியுள்ள |
| **2022** | 3,228,190,024 | 345,324,668 | 2,882,865,356 | முனைப்பழியுள்ள |
| **2023** | 3,324,642,778 | 205,871,887 | 3,118,770,891 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | மாவட்ட செயலகத்தின் விராந்தைக்கு நிலக்கல் பிடிப்பதற்கு உரிய ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவு செய்வதற்கு ரூபா 4,810,840 ஆன கையிலுள்ள பற்றுச் சீட்டுக்கள் கொடுப்பனவு செய்வதற்கு இருப்பதாக திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் 2022 மார்ச் 28 ஆந் திகதி வரை நிலக்கல் பிடித்தல் இடம் பெறாதிருந்தமை அவதானிக்கப்பட்டது | 2021 | முறைசாரா கொடுக்கல் வாங்கல்களை அங்கீகரித்த, பரிந்துரைத்த மற்றும் சான்றுபடுத்திய உத்தியோகத்தர் தொடர்பாக முறையான விசாரணை நடாத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து அரச நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருப்பின் அதனை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும | உத்தியோகத்தர்களின் வேலைப்பழு காரணமாக தாமதமான கையில் தேங்கிய பில் பத்திர அறிக்கையின் இந்த விடயம் உட்படுத்தப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | மதுராவெல பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்தின் work station அமைத்தல் ஒப்பந்தத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்படாது இருக்கும் போதும் வாகன நிறுத்துமிட செயற்திட்டம் மற்றும் மோட்டார் வாகன போக்குவரத்து அலுவலகத்திற்காக மின்பிறப்பாக்கியொன்றை வழங்கிப் பொருத்தும் செயற்திட்டம் மாவட்ட செயலகத்தால் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதும் அச் செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய தொகைகளாக முறையே ரூபா 5,000,000 ரூபா 4,878,665 மற்றும் ரூபா 3,602,880 கையிலுள்ள பற்றுச்சீட்டு கொடுப்பனவு செய்ய இருப்பதாக திறைசேரிக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. | 2021 | முறைசாரா கொடுக்கல் வாங்கல்களை அங்கீகரித்த, பரிந்துரைத்த மற்றும் சான்றுபடுத்திய உத்தியோகத்தர் தொடர்பாக முறையான விசாரணை நடாத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்து அரச நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டிருப்பின் அதனை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | மதுராவல பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடம் திறத்தல் தொடர்பாக முக்கியத்துவம் வழங்கப்பட்ட கருமம் ஒன்றென அறிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய 02 செயற்திட்டங்களை செயற்படுத்துதல் இரத்துச் செய்யப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 3 | மத்துகம பிரதேச செயலகத்தில் இடம்பெற்றிருந்த ரூபா 7,022,668 ஆன ஓய்வூதிய மோசடி வெளிப்படுத்தப்பட்டு மாவட்ட செயலகத்தினால் 2021 மே 1 ஆம் திகதி ஆரம்ப பரிசோதனை ஒன்று நடத்தப்பட்டிருந்த போதும் இவ் ஓய்வூதிய மோசடி தொடர்பாக தகவல்கள் | 2021 | உள்ளகக் கட்டுப்பாடு வலுப்படுத்தப்பட வேண்டும் எனவும் மற்றும் பணம் துஷ்பிரயோகம் செய்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க | ஓய்வூதிய மோசடி தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் ஓய்வூதியத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படுகின்றதென அறிவிக்கப்பட்டுள்ளது. | ஓய்வுதியத் திணைக்களத்தினால் குறிப்பிட்ட உத்தியோகத்தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று விசாரணை ஒன்று தற்போது நடாத்தப்பட்டு வருகின்றது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை | | ஒழுக்காற்றுச் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | | |
| 4 | மத்துகம பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்தின் இரண்டாம் தளத்தினை விரிவுபடுத்தும் ஒப்பந்தத்துடன் தொடர்புடையதாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.<br><br>2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு இவ்வேலைத் திட்டத்தின் மொத்த பௌதீக செயன்முன்னேற்றம் 50 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்பட்டாலும் நூறு 100 சதவீதமான வேலைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன என்பதைத் குறிப்பிட்டு ரூபா 6,716,962 ஆன உறுதிச் சீட்டுக்கள் தயாரிக்கப்பட்டு 2021 திசெம்பர் 31 ஆம் திகதி ரூபா 2,000,025 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 4,716,937 தொகை செலுத்துவதற்கு உள்ள மற்றுமொரு உறுதிச்சீட்டு தயார்படுத்தப்பட்டு அது செலுத்தப்பட வேண்டிய பட்டியலாக திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | 2021 | தெளிவற்ற ரேட்கள் மற்றும் பிழையான தகவல்கள் அடங்கிய பதிவேடுகள் மீது கொடுப்பனவு செய்வதற்காக அங்கீகாரம், பரிந்துரை மற்றும் சான்றுபடுத்திய அனைத்து உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபனக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க விசாரணைகள் நடாத்தி குறிப்பிட்டவாறு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், மிகையாக செலுத்திய பணத்தை அறவீடு செய்ய வேண்டும் எனவும். | கட்டிடத்தின் எதிர் கால உளமையை கவனம் செலுத்தி புதிய நிர்மாண வேலைகள் விரைவாக ஆரம்பிக்கப்பட்டதெனவும், மூலப் பொருட்கள் கட்டுப்பாடு, விலைத் தளம்பல்கள் காரணமாக ஓரளவு தாமதம் ஏற்பட்டதெனவும், 2022 ஜூன் 02 திகதி அளவில் நிர்மாண வேலைகள் வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளதெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 6. மாவட்டச் செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களின் 20 காணிகளின் பெறுமதி ரூபா 334,395,000 மீளாய்வாண்டின் நிதிநிலைமைக்கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்த போதும் அவற்றில் ரூபா 202,870,000 பெறுமதியான 13 காணிகளின் உரித்தாக்கப்பட்ட சட்டரீதியான ஆவணங்கள் காணப்பட்டிருக்கவில்லை. | 2023 | காணிகளின் சட்ட ரீதியான உரிமையை உரித்தாக்குவதற்கு விரைவான வேலைத் திட்டமொன்று ஈடுபடுத்தப்பட வேண்டும். | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் காணிகளை உரித்தாக்கும் அலுவல்கள் பூர்த்தி செய்யப்படாமல் தொடர்ந்தும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்ற காணிகள் தொடர்பாக உத்தியோகத்தர்கள் குழுவொன்று நிறுவப்பட்டு சேகரிக்கப்படும் சரியான தகவல்களின் படி விரைவாக வழங்கப்பட்டு பூர்த்தி செய்யப்படும் என. | உரிமையை பெற்றுக் கொள்வதற்கு அல்லது உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 7. மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட 132 காணி அனுமதிப் பத்திரங்கள் உரிய நபர்களுக்கு வழங்கப்படாமல் கண்டாவளை பிரதேச செயலகத்தில் தேக்கி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | 2023 | சட்டத்திற்கு இணங்க செயற்பட்டு குறிப்பிட்ட நபர்களுக்கு உரித்து உறுதிகள் விரைவாக வழங்கப்பட வேண்டும். | காணிகள் உரித்துகள் குறிப்பிட்ட நபர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குறிப்பிட்ட நடவடிக்கைகள் இது வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 8. கரைச்சி பிரதேச செயலகத்தால் குத்தகைக்கு வழங்கப்பட்ட காணிகளுக்கு 2005 தொடக்கம் 2023 வரை வருடாந்த குத்தகை நிலுவை மற்றும் குற்றப்பணம் | 2023 | சுற்றறிக்கைக்கு இணங்க நடவடிக்கை எடுத்து நிலுவை வாடகை அறவீடு செய்யப்பட வேண்டும். | இந்த தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | நிலுவைத் தொகை அறவீடு செய்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ரூபா 3,129,750 அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 9. | பல்வேறு அமைச்சுகள் மற்றும் நிகழ்ச்சி திட்டத்தின் நிதிப் பங்களிப்பில் வெல்லஉற்பத்தி, பதநீர் அடைத்தல், கள் அடைத்தல், பழங்கள் மற்றும் மரக்கறிகளை பதனிடல், பப்பட உற்பத்தி, தேங்காய் எண்ணெய் உற்பத்தி மற்றும் பொதியிடல் தொடர்பான கைத்தொழில் நடவடிக்கைகளிற்கு மாவட்டச் செயலகத்தினால் ரூபா 62.64 கூட்டுத்தொகைக்கு கொள்வனவுசெய்யப்பட்ட இயந்திர உபகரணத் தொகுதிகள், கட்டிட புனர்நிர்மாணம் மற்றும் உற்பத்தி நிலையம் என்பன 04 கூட்டுறவுச் சங்கங்களுக்கும் 02 கிராம அபிவிருத்தி சங்கங்களுக்கும் 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் கையளிக்கப்பட்டிருந்தும் அவை 5 ஆண்டுகளுக்கு மேல் பயன்படுத்தப்படாமல் செயலற்ற நிலையில் காணப்படுகிறது. | 2023 | குறிப்பிட்ட செயற்திட்டத்தை உயிர்ப்பிப்பதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்த வேண்டும். | நாளாந்தம் மூலப் பொருட்கள் கிடைத்தல் போதியளவாக காணப்படாமை, உற்பத்தி செலவு மிகையாக இருத்தல், சந்தையில் சந்தர்ப்பம் காணப்படாமை, முவ்வழுத்த மின்சாரம் காணப்படாமை, உற்பத்தி பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் நிறுவப்பட்டிருந்த கட்டிடத்தில் இடவசதிகள் போதியளவாக காணப்படாமை ஆகிய காரணங்களால் செயற்பாடுகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 10 | பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தால் குடியிருப்பதற்கு வீடு இல்லை என இனங்காணப்பட்ட | 2023 | கொள்கைசார் தீர்மானம் எடுப்பதற்கு அனுப்பப்பட்டு மீண்டும் விசாரணை | அரசினால் வழங்கப்பட்ட நிரந்தர வீடுகளில் 55 வீடுகள் மருத்துவ காரணங்களுக்காக | இது வரை இந்த வீடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மக்களுக்கு ரூபா 31,590,000 பெறுமதியில் அமைக்கப்பட்ட 55 எண்ணிக்கையான வீடுகளில் கடந்த 1 தொடக்கம் 4 வருடங்களாக மக்கள் குடியிருக்காமல் அவ்வீடுகளை சுற்றி பற்றைகள் வளர்ந்து பயன்பாடற்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. | | மேற்கொண்ட பின்னர் நலன்கள் தேவையான நபர்களுக்கு வீடுகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செல்லல், உதவியாளரின்றி தனியாக சீவித்தல், மேற்படிப்புக்காக வெளிநாடு செல்லல் ஆகியோர் இதில் அடங்கியதுடன் அவர்கள் மீண்டும் வந்த பின்னர் குடியமர்வர் என. | |
| 11 | கண்டாவளை சமுர்த்தி வங்கியில் காசுப் பெறுவனவு புத்தக பௌதீக இருப்பிற்கும் அச்சிடப்பட்ட இருப்பிற்குமிடையே 200 காசுப் பெறுவனவு புத்தகங்கள் பற்றாக்குறையாக காணப்பட்டது. இது தொடர்பில் சமுர்த்தி வங்கிச் சங்க நெறிப்படுத்தல் கையேடு 12 இன் பந்தி 3.6 இன் பிரகாரம் சமுர்த்தி முகாமையாளர் மற்றும் தொடர்புடைய தரப்பினர்களிடமிருந்து காசுப் பெறுவனவு புத்தகங்கள் காணாமல் போனமை தொடர்பாக புத்தகமொன்றிற்கு ரூபா 25,000 விகிதம் மொத்தமாக ரூபா 5,000,000 தொகை அறவிடப்பட வேண்டியுள்ளது. | 2023 | இந்த விடயம் தொடர்பான அதிகாரம் அளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டு முறையான விசாரணை மேற்கொள்ளப்பட்டு சட்ட விதிகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல் மேற்கொள்ள வேண்டும். | இந்த விடயம் தொடர்பாக மாவட்ட செயலகத்திற்கு அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மாவட்ட செயலகம் இவ் விடயத்திற்கான கணக்காய்விற்கு பதில் அளித்தல் பொருத்தமாக காணப்படாது என. | 2024 செப்தெம்பர் 30 திகதி வரை பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டு இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 12 | 2001 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 18/2001 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமல் மாவட்ட செயலகம் மற்றும் 04 பிரதேச செயலகங்களில் 05 வருடங்களுக்கு மேலாக இடமாற்றம் இன்றி 315 அரசாங்க உத்தியோகத்தர்கள் ஒரே சேவை நிலையத்தில் தொடர்ந்தும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | 2023 | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சேவைக் காலத்தை கவனத்தில் எடுத்து இடமாற்றத்திற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 3.13 குருநாகலை மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 4,751,615,349 | 769,850,291 | 3,981,765,058 | முனைப்பழியற்ற |
| **2022** | 4,782,087,167 | 535,005,154 | 4,247,082,013 | முனைப்பழியுள்ள |
| **2023** | 4,907,454,850 | 266,123,702 | 4,641,331,148 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | இப்பாகமுவ பிரதேச செலயகத்தினால் 2013 ஆண்டின் போது செயற்படுத்தப்பட்ட அம்பன்பொல நீர்ச் செயற்திட்டம் மற்றும் இலக்கம் 425 கடுபொத யுனிட் 03 நீர்த்திட்ட செயற்திட்டத்தின் மீதியான வேலையை பூர்த்தி செய்வதற்காக முறையே ரூபா 1,979,418 தொகை மற்றும் 3,959,328 தொகை 2020 ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்த போதிலும், நீர் மூலவளத்திலிருந்து தொட்டி வரை நீர்க் குழாய் விரித்தல் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமை, நீர்த்தொட்டி முதல் நுகர்வோர் வரை நீரை எடுத்துச் செல்வதற்கு குழாய் முறைமை ஒன்று தயாரித்திருக்காமை, மின்சாரம் பெற்றுக் கொள்ளாமை ஆகிய | 2023 | செயற்திட்டம் ஆக்கபூர்வமாக குறிக்கோள்கள் நிறைவேற்றக் கூடிய முறையில் எதிர்பார்த்த நலன்கள் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு செயற்படுத்த வேண்டும். | சமூக நீர் வழங்கள் திணைக்களத்தின் மூலம் இந்த செயற்திட்டத்தின் தொடர் நடவடிக்கை அலுவல்கள் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ளது என. | செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாத நிலைமையில் காணப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விடயங்கள் காரணமாக செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படாமை யால் செலவிடப்பட்ட தொகை விளைவற்றது என மாறியிருந்தது. | | | | |
| 2 | கொட்டவெஹர பிரதேச செயலக தொகுதிக்கு சொந்தமான மொன்னேகுலம சேவா பியச அலுவலகத்திற்கு இணைந்த அஞ்சல் அலுவலகம் மற்றும் கூட்டுறவு கட்டிடத்தை நிர்மாணிக்க ரூபா 1,000,000 மதிப்பீட்டின் கீழ் ரூபா 970,000 செலவில் நிர்மாணப் பணிகள் கொங்கிரீட் தூண்களை தயாரிக்க மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டு இருந ்ததுடன் இந ் நிர்மாணப் பணிகள; முடிவடைந்து ஓராண்டளவு கடந்திருந ்த போதும், கட்டிடம் மற்றும் அன்மித்த நிலம் காடுகளால் மூடப்பட்டு கொங்கிரீட் தூண்களிற்கு இடப்பட்டுள ்ள கம்பிகள ் துருவுடன் துருப்பிடித்த வன்னம் இருந்தன. | 2022 | நிர்மாண வேலைச் செயற்திட்டங்கள் செயற்திறனுடன் குறிக்கோள்களை நிறைவேற்றக் கூடியவாறு செயற்படுத்த வேண்டும். | கிராம குழுவின் போது நிகவரெட்டிய பலநோக்கு கூட்டுறவு சங்கம் இணங்கியவாறு தற்போது இரண்டு செயற்திட்டங்களின் ஒன்றித்த நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் அதே நிலைமையில் காணப்பட்டது. |
| 3 | 2014 ஆண்டின் போது பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ரூபா 9,627,428 இற்கான ஏற்பாடுகள் மீது செயற்படுத்தப்பட்டிருந் | 2023 | நிர்மாண வேலைச் செயற்திட்டங்கள் செயற்திறனுடன் குறிக்கோள்க | கிராம குழுவின் போது நிகவரெட்டிய பலநோக்கு கூட்டுறவு சங்கம் இணங்கியவாறு தற்போது இரண்டு செயற்திட்டங்களின் | நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் அதே நிலைமையில் காணப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | த வாரியபொல கலுகமுவ பாதையில் கொன்னவ பாலத்தில் இருந்து பம்புனுகொடுவ சந்தி வரை நீர்க் குழாய் நீடித்தல் செயற்திட்டம் ரூபா 4,746,457 இற்கான ஏற்பாடுகள் மீது செயற்படுத்தப்பட்ட பம்முனுகொடுவ சந்தியில் இருந்து நிம்மாகம வரை நீர்க் குழாய் நீடித்தல் செயற்திட்டத்திற்காக தேசிய நீர் வழங்கள் வடிகாலமைப்பு சபைக்கு 2014 ஆண்டில் பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும், 10 வருடங்களுக்கு அண்மித்த காலம் முதல் இந்த இரண்டு செயற்திட்டங்கள் மூலமும் பொது மக்களுக்கு நீர் பெற்றுக்கொள்ள முடியாமையால் செலவிடப்பட்ட ரூபா 14,373,885 இற்கான தொகை விளைவற்றுக் காணப்பட்டது. | | ளை நிறைவேற்றக் கூடியவாறு செயற்படுத்த வேண்டும். | ஒன்றித்த நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| 4 | குளியாப்பிட்டிய (மேற்கு) பிரதேச செயலகப் பிரிவை சேர்ந்த வடுகெதர கிராம உத்தியோகத்தர் பிரிவில் வடுகெதர நீர்ச் செயற்திட்டத்திற்காக 2014 ஆண்டில் மாகாண எழுச்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 1,990,000 இற்கான ஏற்பாடுகள் | 2023 | செயற்திட்டம் திட்டமிடப்பட்ட வாறு வேலைகளை பூர்த்தி செய்து குறிப்பிட்ட நலன்பெறுவே ாருக்கு பயன்பெறக் கூடியவாறு செயற்திட்டங் களின் நலன்கள் வழங்குவதற் | 2014 ஆண்டில் செயற்படுத்துவதற்காக ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 381,997 இற்கான தொகையொன்று 2015 ஆண்டிற்கான தொடர் வேலையாளர் மாற்றப்பட்டதுடன், அபிவிருத்தி | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஒதுக்கப்பட்டிருந்ததுடன், நிர்மாண அலுவல்கள் மேற்கொள்வதற்காக குறிப்பிட்ட ஒப்பந்த நிறுவனம் ஆகிய கூட்டுறவு சங்கத்திற்கு ரூபா 381,998 தொகை செலுத்தியிருந்ததுடன், தொழிநுட்ப உத்தியோகத்தரின் பரிந்துரையின்மையால் மேலும் ரூபா 1,589,208 இற்கான தொகையொன்று குறிப்பிட்ட நிறுவனத்திற்கு செலுத்த வேண்டியிருந்தது. நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு சுமார் 8 வருடங்கள் கடந்திருந்த போதிலும் மின்சார இணைப்பு மற்றும் நீர்ப்பம்பு வழங்கியிருக்காத காரணத்தினால் நீர்த் தட்டுப்பாட்டினை சுமார் 150 வறிய குடும்ப மக்கள் கடினமான சிரமத்திற்கு முகங்கொடுத்திருந்ததுடன் செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்ட பணம் விளைவற்றுக் காணப்பட்டது. | | கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அலுவல்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் செயற்திட்டத்தின் மீதியான வேலைகள் பிரதேச சபையின் பொது நிதியை பயன்படுத்தி பூர்த்தி செய்வதற்கு பிரதேச சபையினால் இணக்கப்பாடு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது என. | |
| 5 | ரிதீகம பிரதேச செயலகப் பிரிவில் 2022 ஆண்டில் கிராமத்துடன் நேய கலந்துரையாடல் ரூபா 20 மில்லியனிற்கான நிகழ்ச்சித் திட்டின் கீழ் ரூபா 960,874 | 2023 | செயற்திட்டம் நிறைவேற்றும் போது எதிர்பார்க்கும் நலன்களை பெற்றுக் கொள்ளக் கூடியவாறு நிறைவேற்றப் | பாடசாலை அபிவிருத்தி சங்கம் ஒன்றிற்கு இந்த பக்கச்சுவரை மீண்டும் மீளமைக்கும் படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளதுடன் தடுத்து வைத்தல் | பாதுகாப்பு பக்க மதில் மீண்டும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இற்கான செலவில் தெலம்புகல்ல பாடசாலை விளையாட்டு மைதானத்தில் எல்லையில் அமைந்துள்ள கால்வாயை சுத்தம் செய்து நிர்மாணிக்கப்பட்டிருந்த பாதுகாப்பு சுவர் முழுமையாக அகன்றிருந்ததுடன் இதன் காரணமாக செலவிடப்பட்டிருந்த பணம் விளைவற்ற செலவொன்றாக மாறியிந்தது. | | பட வேண்டும். | பணம் இது வரை திருப்பிச் செலுத்தப்பட்டிருக்க வில்லை. | |
| 6 | குருநாகல் மாவட்டத்தில் 30 பிரதேச செயலகங்களில் மூலவள உருத்தோற்றத்தின் படி, 4,744 தற்காலிக வீடுகள், 6,596 அங்கீகாரமற்ற வதிவோர், 3,908 மின்சாரமற்ற வீடுகள், 17,372 பாதுகாப்பற்ற கிணறுகள் 33,513 பாதியளவு நிரந்தர வீடுகள், 3,818 கிடங்குக் கழிவறைகள் 7,654 கழிவறைகளின்றிய வீடுகள், 4,505 வதிவதற்கு வீடொன்று இல்லாத குடும்பங்கள் காணப்பட்ட போதிலும் மாவட்டத்தில் அபிவிருத்தி செயற்திட்டங்கள் செயற்படுத்தும் போது இந்த சிக்கல்களுக்கு தீர்வு பெறக் கூடியவாறு | 2022 2023 | மாவட்டத்தினுள் காணப்படுகின்ற சிக்கல்களுக்கு தீர்வொன்றென செயற்திட்டம் திட்டமிடப்பட்டு ஆக்கபூர்வமாக செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறிப்பிட்ட வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக நிர்மாண வேலை நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்த போதிலும் போதியளவு எண்ணிக்கையான செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திட்டங்கள் தயாரித்து ஏற்பாடுகளை பயன்படுத்துதல் மீது கவனம் செலுத்தியிருக்கவில்லை. | | | | |
| 7 | கிரிபாவ பிரதேச செயலக தொகுதியில் ஜயன்திபுர கிராம உத்தியோகத்தர் பிரிவில் ராஜாங்கன யாய 04 இல் அமைந்துள்ள கலாஓய தீவில் 49.6122 ஹெக்டயார் காணியில் (124.0305 ஏக்கர்) ஒரு பகுதியை 07 அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் மற்றும் மதகுரு ஒருவரினாலும் அனுமதியின்றி கைப்பற்றி பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்ததுடன், அவ்வாறே இக்காணி வன பாதுகாப்பு திணைக்களத்தின் கீழ் ஒதுக்குக் காணியாக பெயரிட தீர்மானிப்பதற்காக இணைந்த பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு ஓராண்டிற்கும் அதிக காலம் கடந்துள்ள போதும், அதன் மூலம் சரியான தீர்வுவொன்று கிடைத்திருக்கவில்லை. | 2022 | அங்கீகாரமற்ற வதிவோர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 07 அங்கீகாரமற்ற வதிவோருக்கு எதிராக 07 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் வழக்கு அலுவல்கள் முடிவடையும் வரை காணி தொடர்பான அலுவல்கள் மேற்கொள்ளல் நிறுத்தப்பட்டுள்ளது. | வழக்கு அலுவல்கள் முடிவடைந்திருக்கவில்ல. |
| 8 | கிரிபாவ பிரதேச செயலக தொகுதியில் சந்தகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மாதர் கிளினிக்கை பொருளாதார | 2022 | விளைவற்றுக் காணப்படுகின்ற உபகரணங்கள் தொடர்பாக பொருத்தமான | சந்தகல பிணிஆய்வு நிலையம் அமைந்துள்ள பகுதிக்கு 4 கி.மீ. தூரத்தில் சோலேவெவ மேலும் பிணிஆய்வு | நிர்மாண வேலைகள் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 1,150,000 தொகையால தயாரித்து அதற்கு வழங்கியிருந்த கதிரைகள் உள்ளிட்ட உபகரணங்களும் எவ்வித பிரயோசனத்திற்கும எடுக்காது குறித்த மாதர் கிளினிக் கைவிடப்பட்டிருந்தது. | | நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | நிலையமொன்று காணப்படுவதனால் இந்த இடத்தை பாரம் நிறுக்கும் நிலையம் ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருந்தது. | |
| 9 | குருணேகல பிரதேச செயலக தொகுதியின் கீழுள்ள குருணேகல நகர எல்லையினுள் அமைந்துள்ள அரசிற்கு சொந்தமான மிகப் பெறுமதியான 26 சொத்துக்களை குருணேகல மாநகர சபைக்கு ஒப்படைக்குமாறு கோரியிருந்ததுடன், அவற்றை முறையாக ஒப்படைத்திருக்கவில்லை. அவ்வாறே இச் சொத்துக்களில் அநேகமானவை வர்த்தக நோக்கில் சுவீகரிக்க கோரியிருந்ததுடன், இவற்றை நீண்ட கால குத்தகை அடிப்படையில் ஒப்படைத்து அரசிற்கு வருமானத்தை இது தொடர்பில் உரிய கவனம் செலுத்தி இயிருக்கவில்லை. | 2021, 2022 | அரசுக்கு சொந்தமான ஆதனங்களை சாட்டுதல் செய்யும் போது அது தொடர்பாக கண்டறிந்து சாட்டுதல் செய்ய வேண்டிய ஆதனங்களை மாத்திரம் முறைப் பிரகாரம் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | குருநாகல் மா நகர சபைக்கு உரித்தாக்கப்படக் கூடிய ஆதனங்களை உரித்தாக்குவதற்கும் ஏனைய நீண்டகால ஆதனங்களை குத்தகைக்கு கொடுப்பதற்குரிய இயலுமை காணப்படுவதால் அதற்காக தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 10 | பமுனாகொடுவ பிரதேச செயலக தொகுதியில் வலகம பத்துவ கோரளே 1201-வேதண்ட கிராம உத்தியோகத்தர் பிரிவில் திக்வெஹெர | 2021, 2022 | அரசுக்கு ஏற்பட்டுள்ள நட்டம் குறிப்பிட்ட தரப்பினர்களிடம் அறவீடு செய்வதற்கு | தொடர்பாடல் செலுத்துகை தூண்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ள பகுதி நீண்டகால குத்தகை அடிப்படையில் | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கிராமத்தில் இலக்கம் 47/19/1 மு.பி.கு 1326 கொண்ட வரிபடத்தின் இலக்கம் 54 கொண்ட கொஸ் கெலய எனும் காணித் துண்டை ஒப்படைப் பத்திர உரிமையாளரினால தனியார் தொலைத் தொடர்பு கோபுரம் ஒன்றை நிர்மாணிக்க 2009 ஆண்டில் கம்பனியொன்றிற்கு வழங்கியிருந்ததால், காணி ஆணையாளர் நாயகத்தின் 2018 ஜுலை 16 திகதிய இலக்கம் 2007/3(iii) சுற்றறிக்கை பிரகாரம் குறித்த பகுதியை மீண்டும் பிரதேச செயலாளரிற்கு சுவீகரித்திருக்காத காரணத்தால் ரூபா 1,015,000 ஆன கணக்கிட்ட நட்டமொன்று அரசிற்கு ஏற்பட்டிருந்தது | | நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறிப்பிட்ட கம்பனிக்கு உரித்தாக்குவதற்கும் தற்போது இந்த காணி அரசுக்கு உரித்தாக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | |
| 11 | 03 பிரதேச செயலக தொகுதிகளிற்குரிய கடந்த 03 ஆண்டு காலத்தினுள் காட்டு யானை சேதத்திற்காக கூட்டுத் தொகை ரூபா 10,574,971 ஆன ஆதனம், உடல் ரீதியான மற்றும் உயிர் சேதமாக இழப்பீட்டுத் தொகை வழங்கியிருந்த போதும், கடந்த காலப் பகுதிக்குரியதாக அபிவிருத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது காட்டு யானை பிரச்சினைக்கு தீர்வு | 2021, 2022 | அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது காட்டுயானை தொல்லைகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | அண்மைக் காலத்தில் அபிவிருத்தி திட்டங்கள் சமர்ப்பிக்கும் போது அதன் தலைமைத்துவம் அரசியல் அதிகாரிகளிடம் காணப்படல் மற்றும் சிக்கல் தன்மையுள்ள செயற்திட்டங்கள் நிறைவேற்றும் போது போதியளவு பணம் ஒதுக்கப்படாமையின் காரணமாக இந்த நிலைமை காணப்பட்டதுடன், | பரிந்துரைகள் போதியளவு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| பெற்றுக் கொள்ளக் கூடிய அபிவிருத்தி கருத்திட்டத்தின் பக்கம் கவனம் செலுத்தி இருக்கவில்லை. | காட்டுயானை தொல்லையை கட்டுப்படுத்துவதற்காக சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.14 மாத்தறை மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 2,777,521,508 | 442,095,110 | 2,335,426,398 | முனைப்பழியுள்ள |
| **2022** | 3,114,183,397 | 294,173,158 | 2,820,010,239 | முனைப்பழியுள்ள |
| **2023** | 3,126,992,902 | 199,279,597 | 2,927,713,305 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1. | கூட்டுத்தொகை ரூபா 69,576,920 தொகைக்கான 2 வருடங்களை மிகைத்துள்ள 290 வைப்புக்களுக்குரிய மீதிகள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அவற்றில் ரூபா 8,110,371 தொகைக்கான 22 வைப்புக்கள் 5 வருடங்களை மிகைத்தவை ஆகும். | 2021 | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். | போதியளவு கட்டுநிதிகள் காணப்படாமை, செயற்திட்டம் தொடர்பான கோப்புக்கள் குறைபாடுகளின் காரணத்தினால் உறுதிச் சீட்டுக்கள் சமர்ப்பிக்கப்படாமை போன்ற காரணங்களினால் இந்த வைப்புத் தொகைகள் தீர்க்க முடியாமல் இருந்தன என அறிவிக்கப்பட்டது. | வைப்புக்களின் ரூபா 3,821,418 இற்கான 17 வைப்புக் கணக்கு மீதிகள் தொடர்ந்தும் தீர்க்கப்பட வேண்டிக் காணப்பட்டது. |
| 2. | கோட்டேகொட மாசி மற்றும் கருவாடு உற்பத்தி கைத்தொழில் கட்டிடம் நிர்மாணிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த ரூபா 6,000,000 தொகையில் 02 கட்டங்களின் கீழ் இந்த செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 2021 திசெம்பர் 16 திகதிய 2 கிராம அபிவிருத்தி | 2021 | இந்த அலுவல்களை விரைவாக பூர்த்தி செய்து பொது மக்களுக்கு பயன்படுத்தக் கூடிய நிலைமைக்கு ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நாட்டில் நிலவிய நெருக்கடி நிலைமை காரணமாக சந்தையில் நிர்மாண வேலைப் பண்டங்களுக்கான தட்டுப்பாடொன்று ஏற்பட்டமையும் காலம் போதியளவாக காணப்படாமையும் 2022 ஆண்டின் தொடர் | 2024 செப்தம்பர் 30 திகதி வரை நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சங்கங்களுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2022 பெப்ரவரி 23 திகதி கணக்காய்வு பௌதீக பரிசோதனை வரை கட்டிடத்தின் அத்திவாரம் வரை 24 கொங்கிரீட் தூண்கள் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அந்த தூண்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த கம்பிகள் துருப்பிடித்து இருந்ததென அவதானிக்கப்பட்டது. கணக்காய்வுச் சந்தர்ப்பம் வரையும் ஒப்பந்த வேலையை பூர்த்தி செய்வதற்காக காலநீடிப்பு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | செயற்திட்டம் ஒன்று என இதுவரை அங்கீகாரம் கிடைத்திருக்காமையால் நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டது. | |
| 3. | அகுரெஸ்ஸ பிரதேச செயலகப் பிரிவில் 368B தொல மாவத்தை கிராம உத்தியோகத்தர் பிரிவின் எரனவிலஹேன எனும் அரசாங்கக் காணியில் நடாத்தப்பட்டு வரும் கற்சுரங்கம் அனுமதிப்பத்திரம் அல்லது அங்கீகாரப்பத்திரம் ஏதும் இன்றி மூன்று மாதங்களுக்கு அண்மித்த காலம் நடாத்தப்பட்டிருந்த போதிலும் உரிய பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வுப் பரிசோதனைக்கு ஆளாகிய 2022 ஜூன் | 2021 | இது தொடர்பாக பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களின் கவனத்திற்கு கொண்டுவரப்படுவதுடன், இது தொடர்பாக குறிப்பிட்ட தரப்பினரை அறிவுறுத்தி முறையான நடவடிக்கைகள் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | புவிச் சரிதவியல் அளவைகள் மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு இது தொடர்பாக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டிருந்தது. | பொறுப்புச் சொல்ல வேண்டிய நிறுவனங்கள் தொடர்பாக முறைப் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், கற்சுரங்கம் செயற்படாத நிலைமையில் காணப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மாதம் வரையும் அந்த கருங்கல் அகழ்வு அலுவல்களுக்காக புவிச் சரிதவியல் அளவை சுரங்கப் பணியகம் மூலம் தொழில்துறை அகழ்வு அனுமதிப்பத்திரமும் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமும் மாவட்ட வெடிபொருட்கள் கட்டுப்பாட்டாளரினால் வழங்கப்படும் வெடி மருந்து அனுமதிப்பத்திரமும் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. கணக்காய்வு பரிசோதனை சந்தர்ப்பத்திலும் அந்த இடத்தில் கருங்கல் அகழ்வு செய்தல் மேற்கொள்ளப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டதுடன் கல் அறைக்கும் இயந்திரம் ஒன்றும், 02 எக்ஸவேட்டர்களும் மற்றும் கொம்பிரஷர் இயந்திரம் ஒன்றும் காணப்பட்டதுடன் கருங்கல் ஆலை செயற்பாட்டு நிலையில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | | | | |
| 4. | கிராமப்புர மற்றும் பாடசாலை விளையாட்டு, உட்பட்டமைப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் மூலம் செயற்படுத்திய கிராமிய மைதானங்களை அபிவிருத்தி செய்யும் கருத்திட்டத்தின் கீழ் திக்வெல்ல, அதுரலிய மற்றும் வெலிபிடிய | 2023 | செயற்திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றக் கூடியவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். | குடிநீர், கழிவறை வசதிகள், ஆடைகள் மாற்றுவதற்கான இடவசதிகள் காணப்படாமை மற்றும் கிரிகட் விளையாடுவதற்கு போதியளவு இடவசதிகள் காணப்படாமை, ஆகிய | 03 விளையாட்டுத் திடல்களும் குறிக்கோள்சார் கருமங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரதேச செயலக பிரிவில் கூட்டுத் தொகை ரூபா 4,286,251 செலவில் 03 மைதானங்களை அபிவிருத்தி செய்திருந்ததுடன் மைதானங்கள் நோக்கத்திலான பணிகளிற்கு பயன்படுத்தப்படாது விளைவற்று நிலவின. | | | காரணங்களினால் இந்த விளையாட்டுத் திடலின் குறிக்கோளை நிறைவேற்றுவதில் சிக்கலொன்று ஏற்பட்டுள்ளது என. | |
| 05. | வெலிகம் பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் கும்பல்கம் சிவப்பு மற்பாண்டம் சார்ந்த உற்பத்தி கிராமமொன்றை ஆரம்பித்து நலன் பெறுனர் ஒருவருக்கு ரூபா 75,000 வீதம் 19 நலன் பெறுனர்களிற்கு கூட்டுத் தொகை ரூபா 1,425,000 பெறுமதியான நிர்மாண பொருட்கள் வழங்கப்பட்டு இருந்த போதும், பௌதீக பரீட்சிப்பின் போது நலன்பெறுனர்கள் அந்த பொருட்களை நோக்கத்திலான பணிகளிற்கு பயன்படுத்தி இருக்கவில்லை. | 2023 | செயற்திட்டத்தின் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றிக் கொள்ளப்பட வேண்டும். | மூலப் பொருட்களை பெற்றுக்கொள்வதில் காணப்படுகின்ற சிரமங்கள் காரணமாக கைத்தொழில் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதுடன், நலன் பெறுவோருக்கு வேலைத் தளங்களை நிர்மாணிப்பதற்காக வழங்கியிருந்த பண்டங்களை பயன்படுத்தி வீட்டுக்கு அண்மையில் நிர்மாண வேலைகளை மேற்கொண்டு வேறு கருமங்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது என. | 19 நலன் பெறுவோரில் ஒரு நலன் பெறுவோர் மாத்திரம் நிர்மாணிக்கப்பட்ட பகுதியில் மட்பாண்டக் கைத்தொழில் ஈடுபட்டுள்ளார். |
| 6. | அதுரலிய, முலடியன மற்றும் திஹகொட 03 பிரதேச செயலங்களின் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் முறையே பதிக் உற்பத்தி, கருவா கலற்றுதல் மற்றும் மூங்கில் சார்ந்த அபிவிருத்தி கருத்திட்டங்களிற்காக | 2023 | தொடர் நடவடிக்கை உரிய முறையில் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், குறிப்பிட்ட அனைத்து நலன் | எதிர் காலத்தில் இந்த நிலைமைகளை தவிர்த்துக் கொள்வதற்காக தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என. | 13 நலன் பெறுவோர் பத்திக் உற்பத்தியில் ஈடுபட்டுள்ளனர் என.<br>கருவா பேல் பண்ணும் 18 இயந்திரங்கள் பயன்படுத்தப்படாமல் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 83 நலன்பெறுனர்களிற்கு ரூபா 5,566,376 பெறுமதியான 611 உபகரண உருப்படிகள் குறித்த பணிகளிற்காக பயன்படுத்தாது விளைவற்று நிலவின. மேலும் அதுரலிய முலடியன பிரதேச செயலத்தின் மூலம் பதிக் உற்பத்திக்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 524,480 பெறுமதியான இரசாயன டய் வகைகள் உற்பத்தி நடவடிக்கைகளிற்கு பயன்படுத்தாது காலாவதியாகி இருந்தன. | | பெறுவோரையும் பத்திக் கைத்தொழிலுக்க தொடர்புபடுத்துவதற்காக ஊக்குவிக்க வேண்டும். | | காணப்பட்டிருந்தமையால் பிரிவில் அதே கைத்தொழிலில் ஈடுபடும் நலன் பெறுவோருக்கு வழங்கும் படி வேண்டப்பட்டுள்ளது. பிரம்பு சார்ந்த உற்பத்திகள் மேற்கொள்வதற்காக கட்டிடத்திற்கு தேவையான மின்சாரம், நீர், கழிவறை வசதிகள் காணப்படாமையால் கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. |
| 7. | 2008 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 2008$04 ஆம் இலக்க காணி காணி ஆணையாளர் சுற்றறிக்கை பிரகாரம் காணிகளை முறைமையாக்க பஸ்கொட பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் 22 கிராம் உத்தியோகத்தர் பிரிவுகளில் கடந்த 04 ஆண்டுகளினுள் காணிக் கச்சேரிகளை நடாத்தியிருக்காததுடன் 1070 பர்சஸ்களிற்குரிய 10 வதிவாளர்களின் நீண்ட கால குத்தகை பத்திரத்தை தயாரிக்க கடந்த 03 ஆண்டுகளினுள் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 | விரைவாக நீண்ட கால குத்தகை உறுதி தயாரிக்கப்பட்டு குத்தகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறிப்பிட்ட நிறுவனங்களில் இருந்து அங்கீகாரம் கிடைத்த பின்னர் சாட்டுதல் மேற்கொள்ளப்படும் என. | 2024 செப்தம்பர் மாதம் வரை சாட்டுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | கிரிந்த புஹுல்வெல்ல, கம்புருபிடிய, மாலம்பட ஆகிய பிரதேச செயலக பிரிவுகளில் 79 வதிவாளர்கள் அரச காணிகளை அனுமதியின்றி பயன்படுத்திய போதும் அவற்றை கடந்த 02 ஆண்டுகள் முதல் 16 ஆணடுகள் வரை முறைமையாக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2023 | அங்கீகாரம் விரைவாக பெற்றுக்கொண்டு சாட்டுதல் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | காணி ஆணையாளரின் அங்கீகாரம் கிடைத்த பின்னர் சாட்டுதல் அலுவல்கள் மேற்கொள்ளப்படும் என. | 2024 செப்தம்பர் மாதம் வரை முறைப்படுத்திருக்கவில்லை. |
| 9. | முலடியன பிரதேச செயலக அதிகார பிரிவிற்குட்பட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவென்றில் மூடப்பட்ட பாடசாலையொன்றை நவீனமயமாக்கி அந்த பாடசாலையினும் கருவா உற்பத்திக்கு தேவையான பயிற்சி பாடநெறியை நடாத்துதல் மற்றும் அதற்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்ய ரூபா 6,905,652 செலவில் குறித்த கட்டிடத்தை நவீனமயமாக்கி உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அதற்கு அன்மித்த இடமொன்றில் அரசினால் கருவா ஆராய்ச்சி நிலையமொன்றை நடாத்தி செல்வதால் இந்த கட்டிடம் மற்றும் உபகரணங்கள் குறை பயன்பாட்டுடன் காணப்பட்டன. | 2023 | குறிப்பிட்ட கட்டிடத்தை பொறுத்தமான அலுவல்களுக்காக பயன்படுத்த வேண்டும். | நாட்டில் நிலவிய சிக்கல் தன்மை மீது ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையும் பலோல்பிடியவில் பயற்சி நிலையமொன்று காணப்படுதல் போன்ற காரணங்களினால் எதிர்பார்த்தவாறு பயற்சி பாடநெறிகள் நடாத்த முடியவில்லை என. | 2024 செப்தம்பர் மாதம் வரை முறைப் பிரகாரம் பயன்படுத்தப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10. | சேளபாக்கி உற்பத்தி கிராம நிகழ்சித் திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக திஹகொட பிரதேச செயலக பிரிவில் படுவிட 1 கிராம உத்தியோகத்தர் பிரிவில் 8.78 பர்சஸ் காணியை அரசிற்கு சுவீகரிக்காது ரூபா 2,903,630 செலவில் சேவைகள் கூடமொன்றை நிர்மாணித்துள்ள போதும் காணியை அரசிற்கு சுவீகரிக்காததால் உட்கட்டமைப்பு அபிவிருத்தி எனும் நோக்கம் அடையப்பெறவில்லை. | 2023 | காணிகள் தனதாக்கல் விரைவுபடுத்தப் பட வேண்டும். | தனதாக்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என. | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 11. | இரண்டு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் சேவையாற்றும் சமுர்த்தி அலுவலர்களினால் சமுர்த்தி பெறுனர்களின் பெயர் பட்டியலை நாளாதுவரை ஆக்காததால் 1995 முதல் 2016 மார்ச் 21 திகதி வரை விஹாரையில் மற்றும் பிரிவெனவில் கடமையில் இருக்காத மதகுருமார்களிற்கு சமுர்த்தி நிவாரணமாக ரூபா 1,264,610 கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | 2023 | மிகை கொடுப்பனவுத் தொகையினை விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். | ஆரம்ப விசாரணை மேற்கொண்டு பணம் அறவீடு செய்யப்படும் என. | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 12. | 2007 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரையான காலத்தினுள் வெலிபிடிய பிரதேச செயலாளர் உத்தியோகபூர்வ இல்லத்தை | 2023 | அரச அத்தியவசியமான செலவுகளுக்காக பொருளாதார | உத்தியோகபூர்வ வாசஸ்தளத்தில் எவரும் வதியவில்லை என. | 2024 செப்தம்பர் மாதம் வரை உத்தியோகபூர்வ வாசஸ்தளத்தில் எவரும் வதிந்திருக்கவில்லை |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நிர்மாணித்தல் மற்றும் திருத்த வேலைகளிற்காக ரூபா 11,816,497 செலவிட்டிருந்த போதும் அந்த உத்தியோகபூர்வ இல்லம் கடந்த 16 வருடங்களாக எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாது விளைவற்று காணப்பட்டது. | | ரீதியாக ஈடுபடுத்துவதற்கு அழுத்தம் செலுத்தப்பட வேண்டும். | | ல. |
| 13. | திக்வெல்ல பிரதேச செயலகத்திற்கு உரிய அட்டவணைப் படுத்திய உத்தியோகபூர்வ இல்லமொன்று 2022 ஆண்டில் ரூபா 722,975 செலவில் திருத்தி 15 மாதங்கள் கடந்திருந்த போதும் உத்தியோகபூர்வ இல்லம் குறைபயன்பாட்டுடன் நிலவியது. பெண் உதவி பிரதேச செயலாளர் ஒருவருக்கு தனியார் வீடொன்றை வாடகை அடிப்படையில் பெற்று குடியிருந்த மேற்குறித்த காலத்திற்கு ரூபா 300,000 உத்தியோகபூர்வ இல்ல படியொன்று செலுத்தப்பட்டிருந்தது. | 2023 | உத்தியோகத்தர்களுக்காக ஒதுக்கப்பட்ட அரசாங்க வீடுகள் காணப்படும் போது தனிப்பட்ட வாடகை வீடுகளுக்காக அரச பணம் செலவிடப்படக் கூடாது. | இந்த உத்தியோகபூர்வ வாசஸ்தளத்தில் உத்தியோகத்தர் எவரும் வதிவதற்கு விருப்பம் இல்லை என | 2024 செப்தம்பர் மாதம் வரை எவரும் குடியிருக்கவில்லை. |
| 14. | கம்புருபிடிய பிரதேச செயலக பிரிவில் கதார கிராம் உத்தியோகத்தர் பிரிவில் அரசிற்குரிய வெலிஹேனகொட குட்டிய எனும் காணியின் 20 பர்சஸ காணித் துண்டொன்றை 2004 ஆண்டில் மற்றும் விடியல் கிழக்கு கிராம் உத்தியோகத்தர் பிரிவில் அரசிற்குரிய ஹெக்டயார் 0.0365 | 2023 | குறிப்பிட்ட கம்பனியில் இருந்து நிலுவை குத்தகை அறவீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | அங்கீகாரம் இன்றி கைப்பற்றல் தொடர்பாக சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக காணி ஆணையாளர் நாயகத்திடம் விடயங்களை விசாரித்து கடிதமொன்று | குறிப்பிட்ட கம்பனிக்கு இந்த குத்தகை தொகையை செலுத்தும் படி அறிவித்திருந்த போதிலும் 2024 செப்தம்பர் மாதம் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. |

| | |
|---|---|
| ஆன காணியொன்றின் பகுதியொன்றில் தொலைபேசி கம்பனி ஒன்றினால் அனுமதியின்றி கைப்பற்றி தொலை தொடர்பு கோபுரம் நிர்மாணிக்கப்பட்டு இருந்தது. அனுமதியற்ற நிர்மாணம் தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்காததுடன் கணக்காய்வு திகதி 2023 நவம்பர் 24 திகதி வரையும் குறித்த கம்பனியிடமிருந்து எவ்வித குத்தகையும் அறவிட்டிருக்கவில்லை. | அனுப்பப்பட்டது எனவும் மற்றும் உதவி பிரதேச செயலாளர் தலைமையில் குழுவொன்றின் மூலம் பெறப்பட்ட அண்ணளவான பெறுமதி மதிப்பீட்டின் மீது தொலைபேசிக் கம்பனிக்கு குத்தகை செலுத்தும் படி அறிவிக்கப்பட்டதென. |

### 3.15 மாத்தளை மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 2,794,480,115 | 139,165,309 | 2,655,314,806 | முனைப்பழியுள்ள |
| **2022** | 2,789,816,872 | 87,156,688 | 2,702,660,184 | முனைப்பழியுள்ள |
| **2023** | 2,922,165,391 | 71,750,180 | 2,850,415,211 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கை ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கை | அறிக்கை திகதியில் உள்ளவாறு பரிந்துரையின் செயற்படு நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1. | வயம்ப கால்வாய் செயற்திட்டத்திற்காக காணியை கையேற்கும் போது கலேவல பிரதேச செயலக பிரிவின் தண்டுயாய கிராம சேவையாளர் பிரிவின் காணித் துண்டொன்றின் பெறுமதி மாகாண பிரதான பொறியியலாளரால் முதலாவது வயல் காணியொன்றாக கருதி ரூபா 91,000 ஆன அபிவிருத்தி பெறுமதியொன்று இழப்பீடாக தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் பல சந்தர்ப்பங்களில் மதிப்பீட்டுப் பெறுமதியை மாற்றியதன் பேரில் இறுதியில் ரூபா 2,905,800 தொகை கொடுப்பனவு செய்தற்கான அடிப்படை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில் | 2021 | முறையான விசாரணை ஒன்று மேற்கொண்டு மிகை கொடுப்பனவு மேற்கொள்ளப் பட்டிருந்தால் அதனை பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்ய வேண்டும். | காணி அமைச்சினால் விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படல். | 2024 செப்தம்பர் 30 திகதி அளவிலும் விசாரணை அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை. |

லை.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2. | மாத்தளை பிரதேச செயலக பிரிவில் 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை 06 கட்டிட செயற்திட்டங்கள் மறறும் விளையாட்டரங்கொன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 5,975,482 செலவிடப்பட்டிருந்த போதும் மேலும் பூர்த்தி செய்ய வேண்டிய பகுதிகள் காணப்பட்டமையால் நிர்மாண செயற்திட்டங்களை பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் இருந்தது. அதன் காரணமாக அதற்காக செலவிடப்பட்ட பணம் விளைவற்று காணப்பட்டது. | 2021 | செயற்திட்டங்களின் வேலைப் பகுதிகள் பூர்த்தி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். | 03 செயற்திட்டங்கள் பயன்படுத்துவற்கு நடவடிக்கை மேற்கொள்ளல். | 2024 செப்தம்பர் 30 திகதி அளவிலும் 02 கோயில்களின் புணரமைப்பு மற்றும் விளையாட்டுத் திடலொன்று குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. |
| 3. | கலேவல பிரதேச செயலக பிரிவின் மொரகொல்ல கிராம சேவையாளர் பிரிவில் இரண்டு மாடி சுயதொழில் நிலையக் கட்டிடமொன்றை நிர்மாதணிப்பதற்குரிய திட்டத்தின் பிரகாரம் முன்னைய ஆண்டின் திசெம்பர் 30 ஆந் திகதி அளவில் வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நவம்பர் 22 ஆந் திகதி வரையிலும் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 | கட்டிடத்தின் வேலைகளை பூர்த்தி செய்து பயன்படுத்த வேண்டும். | பிரதேச சபையினால் நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டு பேணிச் செல்லல் தொடர்பாக முன்மொழிவொன்று மேற்கொண்டிருத்தல். | 2024 செம்தம்பர் 30 திகதி அளவிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4. | சௌபாக்கிய உற்பத்தி கிராம செயற்திட்டத்திற்குரிய உக்குவல பிரதேச செயலக பிரிவில் சேதனப் பசளை உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் செயற்திட்டத்தின் கீழ் சேதனப் பசளை உற்பத்திக்காக ரூபா 1,000,000 ஆன நிர்மாணப் பொருட்கள் 10 நலனாலிகளுக்கு வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2022 சனவரி 26 ஆந் திகதி வரையிலும் குறித்த நிர்மாணம் பூர்த்தி செய்து சேதனப் பசளை உற்பத்தி ஆரம்பிக்கப் பட்டிருக்கவில்லை. | 2021 | நிர்மாண வேலைகளை பூர்த்தி செய்து எதிர்பார்த்த நலன்களை பெற்றுக்கொள் வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | புதிய நலன் பெறுவோர் 03 பேரை சேதனப் பசளை உற்பத்திக்காக தொடர்புபடுத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | 2024 செப்தம்பர் 30 திகதி அளவில் 03 உற்பத்தியாளர்களி னால் உற்பத்தி அலுவல்கள் நிறுத்தப்பட்டிருந்த து. |
| 5. | 2022 ஏப்ரல் 07 ஆம் திகதி வரையில் ரூபா 2,608,000 செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந் த போதும் மேலும் மேற்கொள்ள வேண்டிய வேலை பகுதிகள் காணப்படுவதன் காரணமாக மிளகு தயாரிக்கும் நிலைய கட்டிடம் விளைவற்று காணப்பட்டது | 2022 | நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு குறிக்கோள் சார் கருமங்களுக்க ாக பயன்படுத்தப்ப ட வேண்டும். | மீதி வேலைப் பகுதிகளை பூர்த்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்டிருந் த ரூபா 3.17 மில்லியனிற்கான மதிப்பீடு அங்கீகாரத்திற்காக அனுப்பப்படல். | 2024 செப்தம்பர் 30 திகதி அளவிலும் நிர்மாண வேலை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வில்லை. |
| 6. | வாழ்வாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் லக்கல பிரதேச செயலக பிரிவுகளில் மினி ரன்கெட்டிய பைகள் மற்றும் சப்பாத்து உற்பத்தியாளர்கள் சங்கத்துக்கு 2022 ஒக்தோபர் 03 ஆந் | 2022 | குறிப்பிட்ட இயந்திரங்களை ள பயன்படுத்தக் கூடியவாறு தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொ ாடுக்க வேண்டும். | பேக் தயாரிப்பது தொடர்பான பயிற்சி வழங்குதல் மற்றும் மிளகு விளைச்சலை அதிகரிப்பது தொடர்பான பயிற்சியொன்று வழங்குதல். | 2024 செப்தம்பர் 30 திகதி அளவில் பயன்படுத்தியிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 88,900 ஆன அச்சிட்டு இயந்திரம் மற்றும் 02 கிராம சேவையாளர் பிரிவுகளின் நலனாளிகளுக்காக 2022 ஒக்டோபர் 03 ஆந் திகதி மற்றும் 20 ஆந் திகதிகளில் வழங்கப்பட்டிருந்த ரூபா 1,100,000 ஆன 04 மிளகு அரைக்கும் இயந்திரங்கள் மற்றும் 04 மிளகு தூளாக்கும் இயந்திரங்கள் (Pepper Thresher ) 2023 பெப்ரவரி 24 பரிசோதனை திகதி வரையிலும் பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை | | | | |
| 7. | 2023 செப்தம்பர் 19 ஆந் திகதிய 2023/04 ஆம் இலக்க பாதுகாப்பு அமைச்சு சுற்றறிக்கையின் 1 ஆம் பந்தி 2024 ஆம் ஆண்டிற்காக மாவட்டத்தில் அனைத்து சுடுகலன்கள் அனுமதிப்பத்திரங்களை 2023 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னர் புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென் அறிவிக்கப்பட்டிருந்த போதும் கலேவல, தம்புள்ள மற்றும் அம்பன்கங்க கோரள பிரதேச செயலக பிரிவுகளின் 60 நபர்கள் 2024 பெப்ரவரி மாதம் வரையிலும் சுடுகலன் | 2023 | சுற்றறிக்கை அறிவுரைகளின் படி செயற்பட வேண்டும். | கிராம உத்தியோகத்தர் மூலம் சுடுபடை கலன்கள் பயன்படுத்துவர்களுக்கு அறிவுறுத்தல் மேற்கொள்ளல். | 2024 செப்தம்பர் 30 திகதி அளவில் சுற்றறிக்கை அறிவுரையின் படி அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | | | |
| 8. | பிரிந்தவெல சமூர்த்தி சமுதாய வங்கியின் 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மேற்கொள்ளப் பட்டிருந்த ரூபா 4,590,500 ஆன நிதி மோசடி தொடர்பாக 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் பரிசோதனை நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு எதிர்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | விசாரணை அலுவல்களை விரைவாக பூர்த்தி செய்து பொருத்தமான தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விசாரணையின் தற்போதைய நிலைமை தொடர்பான தகவல்களை வழங்கும் படி சமூர்த்தி பணிப்பாளர் நாயகத்திடம் வேண்டப்பட்டுள்ளது என. | 2024 செப்தம்பர் 30 திகதி வரை விசாரணை அலுவல்கள் பூர்த்தி செய்திருக்கவில்லை. |
| 9. | ரந்தொட்ட பிரதேச செயலக பிரிவில் அனர்த்தங்களுக்கு உள்ளானவர்களை மீள் குடியேற்றுவதற்காக வீடுகளை நிர்மாணிப்பதற்காக 2018 – 2021 காலப்பகுதியில் ரூபா 5,400,000 ஆன மானியங்களை பெற்றுக்கொண்ட 06 நலனாலிகள் இறுதிவரை நிர்மான நடவடிக்கைகள் பூர்த்தி செய்து மீள் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | ஏற்பாட்டுத் தொகையில் எதிர்பார்த்த முன்னேற்றத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறிப்பிட்ட நிர்மாண வேலைகள் மேற்கொள்ளும் வரை தவணைப் பணம் விடுவிக்கப்படாமை. | 2024 செப்தம்பர் 30 திகதி அளவில் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு மீள்குறியேற்றல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 10. | கைத்தொழில் அமைச்சிலிருந்து 2022 ஒக்தோபர் 27 ஆந் திகதி கிடைத்த ரூபா 15,904,651 தொகையை பயன்படுத்தி அம்புல்அம்பே கைத்தொழில் பேட்டையின் வேலி நிர்மாணத்தின் I ஆம் கட்ட வேலைகள் 2022 திசெம்பர் 29 ஆந் திககி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதும், மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை வேலை பூர்த்தி செய்யப்படாமல் ரூபா 6,774,590 ஆன எஞ்சிய தொகை வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.<br>வேலி நிர்மாணத்தின் II ஆம் கட்டத்தில் 38.6 மீற்றர் நீளமான வேலி நிறைவேற்றப்படாமல் அதற்காக ரூபா 127,380 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.<br>வேலி நிர்மாணத்தின் தேவைப்பாடு சரியாக இனங்கண்டு மொத்த கிரய மதிப்பீடு தயாரிக்காமல் 02 ஆம் கட்டத்தின் கீழ் வேலி நிர்மாணம் காரணமாக முதலாவது கட்டத்தின் கீழ் வேலி நிர்மாணித்த காரணத்தினால் முதலாவது கட்டத்தின் கீழ் கைத்தொழில் பேட்டையின் உள்ளக ரீதியாக 340 மீற்றர் நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,700,000 தொகை சிக்கனமற்ற | 2023 | சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொண்டு தேவைப்பாட்டினை சரியாக இனங்கண்டு கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியதுடன், முறையான கண்காணிப்புடன் குறிப்பிட்ட காலப் பகுதியினுள் மதிப்பீட்டு நியமங்களின் படி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு நிறைவேற்றப்பட்ட வேலைகளுக்காக கொடுப்பனவு செய்ய வேண்டும். | அவதானிப்புக்கள் தொடர்பாக தம்புள்ள பிரதேச செயலாளரிடம் தகவல்கள் வேண்டப்பட்டுள்ளது என. | பரிந்துரைக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செலவினமொன்று இருந்தது. | | | | |
| 11. | உக்குவெல பிரதேச செயலகத்தின் புதிய கட்டிட நிர்மாணம் (B பகுதி 6 ஆம் கட்டம்) செயற்திட்டத்தில் 19 வேலை விடயத்தில் ஆரம்பிக்கப்பட்டோ இருக்காதிருக்கையில் நிறைவேற்றப்படாத 04 வேலை விடயங்களுக்காக நிறைவேற்றியதாக பட்டியல் பரிந்துரைக்கப்பட்டு ரூபா 1,585,976 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இச் செயற்திட்டத்தின் செயலாற்றல் பிணை 2024 சனவரி 15 ஆந் திகதி முடிவடைந்திருந்ததுடன் 2023 திசெம்பர 11 ஆந் திகதி வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய திகதியாக இருந்த போதும் 2024 பெப்ரவரி 05 ஆந் திகதி வரை வேலைகள் பூர்த்தி செய்யாமையால் ரூபா 814,165 ஆன தாமதக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்க வில்லை. | 2023 | முறையான மேற்பார்வையின் கீழ் குறிப்பிட்ட காலப் பகுதியில் மதிப்பிடப்பட்ட நியமங்களின் படி பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளுக்காக கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத் தீர்மானத்தின் படி குழுவொன்று நியமனம் செய்து அறிக்கையொன்று அழைத்தல். | பரிந்துரைக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. |
| 12. | உக்குவெல பிரதேச செயலகத்தின் புதிய கட்டிடத்தின் “மேலதிக வேலைகள் பூர்த்தி செய்தல்” திட்டத்தின் 11 வேலை விடயங்களுக்காக ரூபா 1,504,218 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும். அவ்வேலை | 2023 | முறையான மேற்பார்வையின் கீழ் குறிப்பிட்ட காலப் பகுதியில் மதிப்பிடப்பட்ட நியமங்களின் படி பூர்த்தி செய்யப்பட்ட வேலைகளுக்கு | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தீர்மானத்தின் படி குழுவொன்று நியமனம் செய்து அறிக்கையொன்று அழைத்தல். | பரிந்துரைக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விடயங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. செயலாற்றல் பிணை 2024 ஜனவரி 31 ஆந் திகதி காலாவதியாகியிருந்ததுடன் 2023 சனவரி 28 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதும் 2024 பெப்ரவரி 05 ஆந் திகதி வரை வேலைகள் பூர்த்தி செய்யப்படாமையால் ரூபா 164,717ஆன தாமத கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | கொடுப்பனவு செய்யப்பட வேண்டும். | | |
| 13. | மாத்தளை மாவட்டத்தில் 11 சமூர்த்தி சமுதாய வங்கிகளில் தெரிவுப் பரிசோதனையின் போது 2023 ஜூன் 30 ஆம் திகதியில் உள்ளவாறு 176 நல்னாலிகளுக்கு வழுங்கப்பட்டிருந்த ரூபா 19,347,350 ஆன கடன் அளவில் ரூபா 10,274,194 நிலுவை கடன் மீதி காணப்பட்டதுடன் அந்நலனாலிகளிடம் இருந்து 09 மாதங்கள் முதல் 15 மாதங்கள் வரையான காலப்பகுதியில் எவ்வித தவணையும் அறவிடப்பட்டு இருக்கவில்லை | 2023 | நிலுவைக் கடனை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | கடனை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கும் படி முகாமையாளர்களுக்கு அறிவுரை வழங்குதல். | 2024 செப்தம்பர் 30 திகதி அளவில் 113 நபர்களிடம் அறவிடப்பட்டிருக்காத மீதி ரூபா 7,712,192 தொகையாகும். |
| 14. | 2020 மே 17 ஆம் திகதியமற்றும் DSD/HO/MF/2020/05 ஆம் இலக்கமற்றும் 2021 பெப்ரவரி 17 ஆந் திகதிய 2021/02 ஆம் | 2023 | சுற்றறிக்கையின் படி மீளளிப்பு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீளளிப்பு பெற்றுக்கொள்வதற்கு சமூர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திடம் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. | 2024 செப்தம்பர் 30 திகதி அளவிலும் மீளளிப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை. |

இலக்கசமூர்த்திபணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் சமூர்த்திதிணைக்களத்தினால் மீளளிப்புஅடிப்படையில் சமுர்த்திசமுதாயவங்கியில் இருந்துகுறைந்தவருமானம் பெறும் குடும்பங்களுக்கு 2020 ஆம் ஆண்டின் போதுரூபா 357,309,399 கூட்டுத்தொகையானநலன்கள் கொடுப்பனவுசெய்யப்பட்டிருந்தபோதும் மீளாய்வாண்டின் இறுதிதிகதிவரையிலும் அத்தொகையைமீளளிப்பதற்குநடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கவில்லை

## 3.16 மொனராகலை மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 2,503,418,783 | 92,036,934 | 2,411,381,849 | முனைப்பழியுள்ள |
| **2022** | 2,512,904,502 | 174,788,696 | 2,338,115,806 | முனைப்பழியற்ற |
| **2023** | 2,533,329,686 | 99,514,576 | 2,433,815,110 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களத்தினால் மின்சார வேலிகளை பராமரித்தல் மற்றும் பின்தொடர் செயற்பாடுகளுக்குரிய மின்சார வேலிகளை அண்மித்து காவலர் கூடங்களை அமைப்பதற்காக 2020 மார்ச் மாதம் 08 ஆந ் திகதி ரூபா 36,451,618 ஆன நிதிஏற்பாடு ஒதுக ் கீடு செய்யப்பட்டிருந்ததுடன் செயற்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 05 பொதிகளாக ஒதுக்கீடு செய்து தெரிவுசெய்யப்பட்ட இரண்டு ஒப்பந்தக்காரர்களுடன் 1/2/3 ஆம் இலக்க பொதிகள ் மற்றும் 5 இன் கீழ் ரூபா 25,009,958 இற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. 2022 மார்ச் 22 ஆந ் | 2021 | மதிப்பீட்டு வேலைப் பகுதிகள் உடன்படிக்கை காலப் பகுதியினுள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | இந்த நிர்மாண வேலைக்குரிய தடுத்து வைத்தல் பணமும் உட்பட அனைத்து கொடுப்பனவுகளும் தற்போது செலுத்தப்பட்டுள்ளது எனவும் மற்றும் வைப்புக் கணக்கில மீதியாக காணப்படும் அந்த ரூபா 33,572 இற்கான தொகை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டது. இரத்து செய்யப்பட்ட பெகேஜ்களுக்குரிய தடுத்து வைத்தல் பணம் மற்றும் செயலாற்றுகை பிணை முறித் தொகை 2023 மார்ச் 13 திகதி வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன் எனவும் செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திகதி வரையிலும் இந நிர்மாண செயற்பாடுகள் பூர்த்தி செய்வதற்கோ செயற்திட்டத்தின் உடன்படிக்கை காலம் நீடிக்கப்பட்டிருக்கவில்லை | | | | |
| 2 | சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் 2020 சனவரி 03 ஆந் திகதிய சுற்றாடல் சுற்றறிக்கையின் இலக்கம் 01/2020 இன் பிரகாரம் 2009 இன் 66 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தில் திருத்தப்பட்ட 1992 இன் 33 ஆம் இலக்க சுரங்கம் மற்றும் கனிய பொருட்கள் அதிகாரச்சட்டத்தின் 28 ஆம் பிரிவிற்கு இணங்காத வகையில் சரளைக் கற்களை அகழும் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாதிருக்கும் போது, வெல்லவாய மற்றும் மொனராகலை பிரதேச செயலகங்களுக்குரிய 2 செயற்திட்டங்களுக்காக ரூபா 2,228,190 செலுத்தப்பட்டிருந்தது. | 2022 | சுற்றறிக்கைக்கு இணங்க குறிப்பிட்ட வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். | அவதானிப்புக்களை ஏற்றுக் கொள்கின்றேன். இழக்கப்பட்ட வருமானத்தை அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இழக்கப்பட்ட வருமானம் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 3 | மஹாவலி, கமத் தொழில், நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சின் சிறிய அளவிலான விவசாய தொழில்முயற்சி பங்குபற்றல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வெஹெர யாய ரன்லிய தொழில் | 2022 | எதிர்பார்த்த குறிக்கோள் சார் கருமங்களுக்காக ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | செயற்திட்டத்தை செயற்படுத்தும் பொறுப்பு சிறு அளவிலான விவசாய தொழில் முயற்சிகள் பங்களிப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்கு சொந்தமானதாகும். | கச்சான் பதப்படுத்தல் நிலையம் குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்தப்பட்டு இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முயற்சி அபிவிருத்தி மன்றத்திற்கு 2020 ஒக்தோபர் 14 ஆந் திகதி ரூபா 1,925,569 உடன்படிக்கை செய்யப்பட்ட பெறுமதிக்கு நிலக்கடலை செயன்முறைப்படுத்தும் நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந் தும் 2022 நவம்பர் 15 ஆந் திகதியளவில் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | | | | |
| 4 | மொனராகல பிரதேச செயலகத்தினால் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் அமுல்ப்படுத்தப்பட்ட சௌபாக்கிய உற்பத்திக கிராமங்கள நிகழ்சித்திட்டங்களின் கீழ கோமாரிகா பயிர்ச் செய்கை செயற்திட்டத்திற்காக ரூபா 3,776,390 செலவு செய்யப்பட்டிருந்தது. கோமாரிகா நாற்றுக்களை கொள வனவு செய்து பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 1,697,090 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் கோமாரிகா இலை உற்பத்தியின் விளைச்சலை அறுவடை செய்யும் காலம் வந திருந்தும இலைகளின் விளைச்சலை கொள்வனவு செய்வதற்கு கொள வனவாளர்கள் இல | 2022 | சந்தை ஆய்வொன்றுடன் செயற்திட்டங்கள் இனங்காண வேண்டும். | வாடிக்கையாளர்களை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளும் படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | கொள்வளவாளர்கள் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதற்கான எழுத்துமூல சான்றுகள் காணப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | லாமையாலும் சிறந்த விளைச்சல இல்லாமையாலும் விவசாயிகள் பயர்செய்கையை கைவிடுவதற்கு விரும்பியிருந்தார்கள மேலும் பங்கசு நோய்களின் போது கோமாரிகா இலைகள் அழிவடைந்து போகின்ற தன்மை காணப்பட்டது என அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் அறிக்கைகள் மற்றும் வெளிக்கள கணக்காய்வு பரீட்சிப்புக்களின் போது அவதானிக்கப்பட்டது. | | | | |
| 5 | மரபுரீதியான மற்றும் கிராமிய கைத்தொழில் கிராமங்களை அபிவிருத்தி செய்யும் ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்டம் - 2021 இன் கீழ் மொனராகல பிரதேச செயலகத்தினால் கொலன்வின்ன பன் கைத்தொழில் கிராமத்தை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 2,390,641 செலவு செய்யப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் கீழ் ரூபா 853,000 மதிப்பீட்டில் பன் கைத்தொழிலாளர்களின் தயாரிப்புக்களை சந்தைப்படுத்தும் நிலையத்தை நிர்மாணிப்பதற்காதகத் திட்டமிடப்பட்டிருந்தும் கணக்காய்வுத் திகதியான 2022 திசெம்பர் 20 ஆம் | 2022 | குறிப்பிட்ட காணிப் பகுதி ஒதுக்கப்பட்டு ஏற்பாடுகளை உச்ச செயற்திறனுடன் பயன்படுத்தல் மேற்கொள்ள வேண்டும். | இந்த வேண்டுகோளை விரைவாக நிறைவேற்ற முடியாது என நில அளவைத் திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திகதி வரை உரிய காணியை அளவீடு செய்வதற்காக வேண்டுகோள் விடுத்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. மேலும், வேலைத்தளங்களை நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் கீழ் செவிப்புலன் கருவிகளை வழங்கிய நலனாளிகளில் நிர்மாணம் தொடர்பில் 2022 திசெம்பர் 20 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட மாதிரிப் பரிசோதனையின் போது 4 நலனாளிகளின் நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 6 | மொனறாகல மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெரும் குடும்பங்களுக்காக 30,283 உணவு பொதிகள் பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 3,513,127 தொகை மாவட்ட செயலகத்தினால் செலவிடப்பட்டு இருந்ததுடன் நிதி பொருளாதார நிரந்தர மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் ஆலோசனை பிரகாரம் உணவு பாதுகாப்பை குறைந்த வருமானம் வருமான குடும்பங்களின் குடும்ப அலகுகளை தெரிவு செய்யும் 11 நியதிகளின் கீழ் மேற்கொள்ளப்பட | 2023 | நலன்பெறுவோர் தெரிவு செய்யும் போது அதற்காக பொருத்தமானது என சான்றுபடுத்துவதற்கான சான்றுகள் சமர்ப்பிக்க வேண்டும். | குறிப்பிட்ட தகவுதிறன்களின் நலன்பெறுவோர் தெரிவு செய்தல் மேற்கொள்ளப்பட்டது. | நலன்பெறுவோர் தெரிவு செய்யப்பட்டவர்களின் தகவுதிறன்களின் சரியான தன்மை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்த போதும் 30,283 நலனாளிகள் தெரிவு செய்யும்போது பயன்படுத்தப்பட்டிருந்த நியதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | | | | |
| 7 | செவனகல பிரதேச செயலாளர் பிரிவில் இல்லாமல் போன செரமிக் கைத்தொழிலை மேம்படுத்தல் நோக்கில் 2014 ஆம் ஆண்டில் கொவுல்ஆற செரமிக் கிராமம் ஆரம்பிக்கப்பட்ட தேசிய கைப்பணிச் சபையின் கிராமிய மற்றும் பாரம்பரிய கைத்தொழில் கிராம அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளின் போது 6 செயற்திட்டங்களுக்காக ரூபா 4,187,281 தொகை செலவிடப்பட்டு இருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் செயற்திட்டத்திலிருந்து எதிர்பாக்கப்பட்ட நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | 2023 | செயற்திட்டம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் ஊடாக தொடர்நடவடிக்கை மேற்கொண்டு நலன்பெறுவோருக்கு எதிர்பார்த்த நலன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் மூலம் பெயர் குறிப்பிடப்பட்ட தொழில் முயற்சியாளர்களை தொடர்புகொண்டு எதிர்கால நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | பரிந்துரை செய்யப்பட்டிருக்கவில்லை. . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8 | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் ரூபா 49,099,014 வைப்புச் செய்யப்பட்டு 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வைப்புக்கள் விடுவிக்கப்பட வேண்டிய போதிலும் மாவட்ட செயலகம் மற்றும் 07 பிரதேச செயலகங்களுக்குரிய வைப்புக்கள் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 | 02 ஆண்டுகளை மிகைத்துள்ள வைப்புக்களை இனங்கண்டு ஆதனவழிப்பு செய்வதற்கு நவடிக்கை எடுக்க வேண்டும். | பல்வேறு காரணங்களினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் ஆதனவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பேன். | ஆதனவழிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 9 | வெல்லவாய பிரதேச செயலாளர் பிரிவில் உமாஓய அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் கைப்பற்றப்பட்டிருந்த 03 காணிகளுக்கான பிரதான மதிப்பீடு கிடைக்கப்பெறும் வரை காணிகளைக் கையேற்பதற்கான முற்பணமாக 2013 ஆம் ஆண்டு பயனாளிகள் இருவருக்கு ரூபா. 850,000 செலுத்தப்பட்டிருந்ததுடன், 2014 திசம்பர் 04 ஆம் திகதி அக் காணித் துண்டுகளின் பிரதான மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா. 1,350,000 டின தீர்மானிக்கப்பட்டு 2015 பெப்ரவரி 09 ஆம் திகதி 2013 ஆம் ஆண்டு செலுத்தப்பட்ட முற்பணத் தொகை கழிக்கப்படாது மொத்த மதிப்பீட்டுத் | 2023 | நிதி மோசடி மேற்கொள்ளப் படக் கூடாததுடன் மிகையாக செலுத்தப்பட்ட பணம் திருப்ப அறவீடு செய்யப்பட வேண்டும். | திணைக்களத்தினால் விசாரணையொன்று மேற்கொள்ளப்படுவதுடன் இறுதியறிக்கை விரைவாக சமர்ப்பிப்பேன். | 13 வருடங்கள் கடந்திருந்த போதிலும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொகையாகிய ரூபா. 1,350,000 செலுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா. 850,000 தொகையினை அறவீடு செய்வதற்காக வெல்லவாய மாவட்ட நீதிமன்றில் 2018 நவம்பர் 19 ஆம் திகதி M11836 இலக்க வழக்கு தொடுக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதியன்று 08 வருடங்கள் கடந்திருந்த நிலையிலும் ரூடுதலாக செலுத்தப்பட்ட ரூபா 850,000 தொகையினை அறவீடு செய்வதற்கு முடியாது போயிருந்தது. அதனடிப்படையில் அக் கொடுப்பனவை மேற்கொண்ட பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிட மிருந்து குறித்த தொகையினை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. | | | | |
| 10 | மொனராகலை மாவட்டத்தின் 05 பிரதேச செயலக பிரிவுகளுடன் தொடர்பான 1995 முதல் 2023 வரையிலான நீண்ட காலமாக குத்தகை அடிப்படையில் 30 பயனாளிகளிடமிருந்து | 2023 | அறவிடப்பட வேண்டிய நீண்டகால குத்தகைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | குத்தகை அறவீடு செய்வதற்காக குறிப்பிட்ட வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ள துடன் குத்தகை செலுத்துவதை புறக்கணிப்பவர்களு க்கு குத்தகை | 2024 செப்தெம்பர் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 98,780,125 இற்கான நீண்டகால குத்தகைத் தொகை அறவீடு செய்யப்பட வேண்டிக் காணப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அறவிடப்பட வேண்டிய ரூபா. 116,517,935 தொகை மீளாய்வாண்டின் திசம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | | | அங்கீகாரத்தை இரத்துச் செய்து காணியின் உரிமையை அரசிற்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |
| 11 | மொனராகல மாவட்ட செயலகத்தின் மாவட்ட விலை நிர்ணயக் குழுவினால் 2023 இறுதிப்பகுதிக்காக மேற்படி பணியில் ஈடுபடுத்தக்கூடிய 2 WEEL அல்லது 4 WEEL வாகனங்களை பெற்றுக்கொள்ள கூறுவிலைகளை நிர்ணயிக்காது உடன்படிக்கையின் பிரகாரம் வழங்குநர்களுக்கு ரூபா 21,960,000 செலுத்தப்பட்டிருந்தது. அந்த பணியில் ஈடுபடுத்தக்கூடிய நிலையில் காணப்பட்ட பதுளை மாவட்ட செயலகத்தினால் 2023 இறுதிப்பகுதிக்காக தீர்மானிக்கப்பட்டிருந்த விலைகளுக்கமைய கெப் வண்டிகளை ஈடுபடுத்தியிருந்த 572 தடவைகளுக்கு உரிய உள்ளபடியாக ஓட்டத்தில் ஈடுபடுத்திய 28,984 கிலோ மீட்டர்களுக்காக அனைத்து கட்டணங்களும் உள்ளடங்களாக செலுத்த வேண்டிய தொகை ரூபா 3,970,909 ஆகும். அதற்கமைய மாத அடிப்படையில் | 2023 | ஓடிய கிலோ மீற்றர்களுக்காக ரூபா 758 தொகை செலுத்தப்பட்டுள்ளதுடன், மிகை மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. சரியாக சமரப்பீடு தயாரிக்கப்பட வேண்டியுள்ளதுடன் மிகைக் கொடுப்பனவு மேற்கொள்ளல் தொடர்பாக பொருத்தமான வாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மாவட்ட விலைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட கூறுவிலைகளை பயன்படுத்துவதற்கு முடியாது. | ஓடிய கிலோ மீற்றர் எண்ணிக்கைக்காக ரூபா 758 தொகை வீதம் கொடுப்பனவு செய்து செயற்திட்டம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வாகனங்கள் உள்ளபடியாக பயன்படுத்திய கிலோ மீட்டர்களுக்காக செலுத்த நடவடிக்கை எடுக்காது மாத அடிப்படையில் அசாதாரணமான வீதங்கள் உள்ளடக்கப்பட்டு சிக்கனமற்ற முறையில் செயற்பட்டு ரூபா 17,989,091 மிகைக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந் தது. | | | | |
| 12 | மொனராகலை மாவட்டத்தின் 11 பிரதேச செயலக பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 110 சமூர்த்தி குடும்பங்கள் தொடர்பாக பரிசோதனை செய்தபோது 08 வருடங்கள் முதல் 28 வருடங்கள் காலமாக சமூர்தி நலன்களை பெற்று கொள்ளப்பட்டிருந்ததுட ன் தற்போது அஸ்வசம நலன் உரித்தும் கிடைக்கப் பெற்றிருந்த போதும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அவர்களின் வறுமை ஒழித்து பொருளாதாரத்தினை கட்டியெழுப்பு வதற்காக அரச உத்தியோகத்தர்கள் உட்பட நலனாளிகளுக்கும் முடியாது இருந்தது. | 2023 | நலன்பெறுவோ ரின் பொருளாதாரத் தை முன்னேற்றுவத ற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஒவ்வொரு நபரினதும் தனிப்பட்ட காரணங்களினால் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாதுள்ளது. | சமூர்த்தி நலன்பெறுவோரின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு முடியாமல் உள்ளது. |

## 3.17 நுவரெலியா மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 2,609,232,167 | 266,382,289 | 2,342,849,878 | முனைப்பழியுள்ள |
| **2022** | 2,673,297,155 | 210,511,673 | 2,462,785,482 | முனைப்பழியுள்ள |
| **2023** | 2,791,108,348 | 166,331,366 | 2,624,776,982 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | அரசின் வீடமைப்பு கட்டம் I இன் கீழ் மாவட்ட செயலக உத்தியோகத்தர் களுக்காக ரூபா 4,044,166 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் அந்நடவடிக்கைககள் பூர்த்தி செய்யப்படாமை காரணமாக 2022 மார்ச் வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. அதன் பிரகாரம் செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | 2021 | தேவையான ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டு நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | இரண்டு மாடிக் கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ஏற்பாடுகள் பெற்றுக்கொள்வதற் காக சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், 2021 ஆண்டிற்காக ரூபா 5 மில்லியன் தொகை மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக அந்தத் தொகைக்கு ஏற்ப தரை மாடியில் முடியுமான அளவு நிர்மாண வேலைகள் நிர்மாணிக்கப்பட்டது. 2022 ஆண்டிற்காக ரூபா 5 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தை மயால் இந்த ஆண்டிலும் தரை மாடியின் வேலை பூர்த்தி செய்யப்பட்டு முதலாம் மாடியின் | 2024 செப்தம்பர் 30 திகதி வரை நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்படவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | பகுதியொன்று நிறைவேற்றுவதற்காக மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு ஏற்பாடுகள் வேண்டப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| 2 | அனர்த்த நிவாரண சேவைகளின் கீழ் மீள்குடியேற்ற நிகழ்ச்சிகளின் செயன் முன்னேற்றம் நூற்றுக்கு 100 எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதும் கொத்மலே பிரதேச செயலகத்தின் மண்சரிவினால் மீள்குடியேற்றப்பட வேண்டிய 105 குடும்பங்களுக்காக 105 வீடுகளை அமைப்பதற்காக ரூபா 126,000,000 ஆன நிதிஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நிர்மாணிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 | செயற்திட்டத்தை பூர்த்தி செய்து அந்த எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 98 வீடுகளில் 40 தொகை உடன்படிக்கையின் படி ஒரு வீட்டுக்கு ரூபா 2 இலச்சத்திற்கான வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. தோட்ட வீடமைப்பு கூட்டுறவு சங்கத்துடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அமைச்சின் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | 2024 செப்தம்பர் 30 திகதி வரை செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 3 | 2022 மே 04 ஆந் திகதிய DMC/miti/Pro/Nuwara eliya/2021/01 ஆம் இலக்க அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் மூலம் வலப்பனை கங்கார கொள்ள பெயருடைய கிராமத்தில் கற்கள் | 2022 | ஏற்பாடுகள் பெற்றுக்கொண்டு முறையான மேற்பார்வை ஒன்றின் கீழ் வேலைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிர்மாண வேலையை பூர்த்தி செய்து கொள்வதற்காக தேவையான ஏற்பாடுகளை வழங்கும் படி முன்மொழிவொன்று குறிப்பிட்ட அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | 2024 செப்தம்பர் 30 திகதி வரை செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விழும் அனர்த்தத்தை குறைக்கும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகளை இடைநிறுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததுடன் மேற்படி செயற்திட்டத்திற்காக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 18,912,660 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமை காரணமாக எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் பெறுபேறுகளை அடைவதற்கு முடியாது இருந்தது. | | | | |
| 4 | மண் சலிவு அபாயத்துக்குட்பட்ட வலயமாக 2017 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டு இருந்த அம்கமுவ பிரதேச செயலக பிரிவிற்குரிய ஹட்டன் சமணலகம என்ற இடத்தில் இருந்த 12 குடும்பங்களை அந்த இடத்தில் இருந்து வெளியேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டு அதில் 06 குடும்பங்களுக்காக அரசின் காணி ஒன்றில் வீடுகளை நிர்மாணிப்பதற்கு ரூபா 6,300,000 ஆன நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் 06 வருடங்கள் கடந்து | 2023 | குறிப்பிட்ட செயற்திட்டத்தை விரைவாக பூர்த்தி செய்து குடியேற்றும் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். | அகற்றுவதற்கு உத்தேசித்துள்ள குடும்பங்களுடன் கலந்துரையாடி ஆபத்தான இடங்களிலிருந்து அகற்றுதல் மற்றும் நிர்மாணிக்கப்படும் புதிய வீடுகளில் குடியமர்த்துவதற்காக தேவையான அலுவல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | 2024 செப்தம்பர் 30 திகதி வரை குடியமர்த்துதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இருந்த போதும் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன் இடை நடுவில் விடப்பட்டிருந்தது | | | | |
| 5 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சின் நிதி ஏற்பாட்டின் பேரில் தொடம்கும்புற அனர்த்த செயற்பாட்டு நிலையத்தை பாதுகாப்பு நிலையம் ஒன்றாக மேம்படுத்துவதற்காக 2020 ஆகஸ்ட் 31-ஆம் திகதி ரூபா 940,500 தொகை ஹங்குரன்கெத பிரதேச செயலகம் செலவிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் குறித்த கட்டிடம் எவ்வித பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | 2023 | சொத்துக்கள் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்பட வேண்டும். | குறைபாடுகளை சரி செய்து திருத்த வேலைகளை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | 2024 செப்தம்பர் 30 திகதி அளவிலும் பயன்படுத்தக் கூடியவாறு தயாரித்திருக்கவில்லை. |
| 6 | அரசு வழங்கும் ரூபா 4 இலட்சம் தொகையில் நலனாளியால் கொள்வனவு செய்யப்பட்ட காணி ஒன்றில் அரசினால் வழங்கப்பட்ட நிதி உதவி அடிப்படையில் வீடு ஒன்றை நிர்மாணிக்கும் சந்தர்ப்பத்தின் கீழ் அனர்த்த நிவாரண சேவைகள் பிரிவினால் 05 பிரதேச செயலக பிரிவுகளில் ஆபத்தாக | 2023 | ஆபத்தான பிரதேசங்களில் இருந்து வதிவோர்களை அகற்றி மீள்குடியேற்றம் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். | இடர் பணிப்பாளர் நாயகத்திற்கு உரிய தகவல்கள் அனுப்பப்பட்டுள்ளது என. | பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்துதல் 2024 செப்தம்பர் 30 திகதி வரை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | இனம் கண்ட 159 குடும்பங்களுக்காக வீடுகளை மீள் குடியேற்றுவதற்கு திட்டமிடப் பட்டிருந்த போதும் அதில் 115 குடும்பங்கள் அவ்வாறு மீள் குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே அரசினால் வழங்கப்பட்ட காணி ஒன்றில் அரசின் நிதி ஏற்பாடுகளின் கீழ் வீடுகளை நிர்மானிக்கும் வேலை திட்டத்தின் கீழ் அனர்த்த நிவாரண சேவை பிவினால் நுவரெலியா மாவட்டத்தில் 970 குடும்பங்களை தற்போது குடியிருக்கும் இடத்தில் இருந்து அகற்றப்பட்டு பாதுகாப்பான இடத்தில் குடியிருப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் அதில் 798 குடும்பங்களுக்காக பாதுகாப்பான இடத்தை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | | | |
| 7 | அம்பகமுவ பிரதேச செயலக பிரிவில் மண் சரிவு மற்றும் அதி ஆபத்தான நிலைமையில் காரணமாக 2019 ஆம் ஆண்டு வெளியேற்றப்பட்டு இருந்த 04 குடும்பங்களுக்குள் கலுகல்ல மில்லகஹமுள்ள பிரதேசத்தில் அவர்களால் | 2023 | ஆபத்தான பிரதேசங்களில் இருந்து வதிவோர்களை அகற்றி மீள்குடியேற்றம் விரைவுபடுத்த வேண்டும். | நிர்மாண வேலைகளின் முன்னேற்றத்தின் படி தவணை கொடுப்பனவு விடுவித்தல் தொழில்நுட்ப உத்தியோகத்தரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்டுகின்றது என. | 2024 செப்தம்பர் 30 திகதி வரை பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கதவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கொள்வனவு செய்யப்பட்ட காணி ஒன்றில் வீட்டை நிர்மாணிப்பதற்காகவும் காணி கொள்வனவிற்காகவும் ரூபா 2,700,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 மே் திகதி வரை நிர்மாண நிர்மாணங்கள் ஆரம்ப கட்டத்தில் காணப்பட்டதுடன் செயன்முன்னேற்றம் 30 சதவீதம் அளவிலான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | | | | |
| 8 | ஜனாதிபதி செயலக நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் கிராம சக்தி மக்கள் செயற்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டின் போது ஹங்குரன்கத பிரதேச செயலகப் பிரிவில் ரூபா 6,900,000 தொகை செலவிடப்பட்டு விதை போஞ்சி களஞ்சியப்படுத்துவதற்காக கட்டிடம் ஒன்றும் குளிர் அறையொன்றும் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் நோக்கத்துக்குட்பட்ட செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | 2023 | செயற்திட்டங்களின் குறிக்கோள்களை நிறைவேற்றப்படக் கூடியவாறு செயற்திட்டங்களை திட்டமிடல் மற்றும் செயற்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டும். | தற்போது விதை போன்ஜியின் விலையின் படி மீள் கொள்வனவு செய்தல் மேற்கொள்வதற்கு தேவைப்படவில்லை எனவும் எதிர் காலத்தில் விதை போன்ஜி விலை உறுதியற்ற அவ்வாறான சந்தர்ப்பத்தில் குறைந்தளவு 10,000 கிலோ விதை போன்ஜி கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | செயற்திட்டம் செயற்படு நிலையில் காணப்படவில்லை. |

### 3.18 பொலன்னறுவை மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 2,898,814,757 | 553,195,622 | 2,345,619,135 | முனைப்பழியுள்ள |
| **2022** | 994,112,902,2 | 426,000,766 | 2,568,112,136 | முனைப்பழியற்ற |
| **2023** | 3,068,106,751 | 330,999,040 | 2,737,107,711 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | 04 பிரதேச செயலக அதிகாரப் பிரதேசங்களின் 74 கெமீதிரிய மக்கள் கம்பனிகளில் 49 கம்பனிகள் செயற்பாடற்றவை என தகவல்கள் அறிவிக்கப்பட்டிருந்ததுடன் அக்கம்பனிகளின் வங்கி கணக்குகளில் ரூபா 24,728,866 பணம் விளைவற்றுக் காணப்பட்டது. | 2022 | சங்கங்களின் செயற்பாடுகள் மட்டத்தில் நடாத்திச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் தேவையான தகவல்கள் அடங்கிய தரவு முறைமையொன்று நாளதுவரையாக பேணிச் செல்ல வேண்டும். | செயற்படாத சங்கங்களின் நிதியம் செயற்படு சங்கங்களுக்கு மாற்றுவதற்கு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என அறிவிக்கப்பட்டிருந்தது. | பரிந்துரைகளை செயற்படுத்தி இருக்கவில்லை. |
| 2 | 2009 மே 06 ஆந் திகதி 1600/18 ஆம் இலக்கம் மற்றும் 2021 பெப்ரவரி 25 ஆந் திகதிய 2216/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பிரகாரம் அரசின் காணிகளில் கணியப் பொருள் அகற்றுதல் பண சேகரிப்பாக 2017 ஆம் ஆண்டு முதல் 2021 | 2023 | காணி பயன்படுத்தும் கட்டணம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | 2017 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான காலப் பகுதிக்குரிய நிலுவைக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு முறையான வேலைத் திட்டமொன்று செயற்படுத்தியிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 137.54 மில்லியன் தொகை பொலன்னருவ மாவட்டத்தின் 04 பிரதேச செயலகளில் பேணிச் சென்ற அனுமதிப்பத்திரங்களை கருங்கள் 40 வேலைத்தளங்களிலிருந்து அறவிடப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 3 | 2021 சிறு போகத்தின் போது பொலன்னருவ மாவட்ட செயலகத்தின் மூலம் செயற்படுத்தப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர அளவிலான அரிசி ஆலை உரிமையாளர் ஊடாக விவசாயிகளிடந்து நெல்லை கொள்வனவு செய்து கொள்வனவு செய்யப்பட்ட நெல் இருப்பினை அரிசியாக்கி மீண்டும் அரசுக்கு கையளிக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் போது திம்புலாக்கல, தம்மன்கடுவ, லங்காபுர, எலஹர மற்றும் ஹிங்குரக்கொட பிரதேச செயலகங்கள் ஊடாக கொள்வனவு செய்யப்பட்ட நெல்லுக்காக 2021 ஜூலை 22 ஆந் திகதிய DFD/Paddy/2021-3 ஆம் இலக்க திறைசேரி செயலாளரின் சுற்றறிக்கையின் 7(1) பிரிவின் பிரகாரம் ரூபா 215 மில்லியன் பெறுமதியான 2.18 | 2023 | சுற்றறிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். | நாட்டில் நிலவிய பொருளாதார சிக்கல் நிலைமை மத்தியில் நெல் குற்றுதல் உடன்பட்ட தொகைக்கு மேற்கொள்ள முடியாது என நெல் ஆலை உரிமையாளர்கள் கூறியிருந்ததுடன் எவ்வாறாயினும் நெல் ஆலை உரிமையாளர்களிடம் நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என அறிவிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆகஸ்ட் 31 திகதியில் உள்ளவாறு தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூபா 188.73 மில்லியன் தொகையாகும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மில்லியன் கிலோகிராம் அரிசியை அரசாங்கத்திற்கு வழங்குவதற்கு நெல் ஆலை உரிமையாளர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | | | | |
| 4 | 2021 சிறு போகத்தின் போது சிறு போகத்தின் போது சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 19 ஆலை உரிமையாளர்கள் ஊடாக 294 விவசாயிகளிடம் நெல்லை பெற்றுக் கொள்ளாமல், நெல் பெற்றுக் கொண்டதாக மேற்பாவை நடவடிக்கை செய்த அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் குறித்த படிவம் தயாரிக்கப்பட்டு நெல்லுக்காக ரூபா 87.46 மில்லியன் மற்றும் பொதியிடும் உரைகள் மற்றும் தையல் கூலியாக ரூபா 7.68 மில்லியன் 05 பிரதேச செயலகங்கள் மூலம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | 2023 | முறையான விசாரணையெயான்று நடாத்தி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உத்தியோகத்தர்களினால் வஞ்சணை செயற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை எனவும் விவசாயிகளுக்கு போலியாக பணம் செலுத்தப்பட்டிருக்கவில்லை எனவும் அறிவிக்கப்படுவதுடன் இது தொடர்பான முறையான விசாரணை ஒன்று நடாத்தி ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுப்பதற்கு செயற்படுகின்றது என அறவிக்கப்பட்டுள்ளது. | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 5 | பொலன்னருவ மாவட்ட செயலகத்தை நிர்மாணிப்பதற்காக 02 கட்டங்களின் கீழ் உடன்படிக்கை செய்யப்பட்டு 2023 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ரூபா 1,030.84 மில்லியன் செலவிடப்பட்டு இருந்தது செயற்திட்ட நடவடிக்கைகளை | 2023 | செயற்திட்டம் நிறைவேற்றும் போது பொருளியல்சார், செயற்திறனுடனான ஆக்கபூர்வமான முறையில் எதிர்பார்த்த குறிக்கோள்கள் | இந்த செயற்திட்டத்தின் பெறுகை அலுவல்கள் உள்நாட்டு விவகார அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டது எனவும் II ஆவது கட்டம் 2020/2021 ஆண்டுகளின் | 2024 நவம்பர் 21 திகதியளவிலும் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விரைவுபடுத்துவதற்காக இரண்டாம் கட்டத்திற்கு வழங்குநர் தெரிவு செய்தல் பெறுகை செயற்பாட்டிற்கு புறம்பாக மேற்கொள்ளப்பட்டிருந்த போதும் எதிர்பார்த்த நிர்மாண காலம் 05 ஆண்டுகளால் தாமதமாகி இருந்தது. | | நிறைவேற்றப் படக் கூடிய முறையில் செயற்படுத்த வேண்டும். | போது ஏற்பட்டிருந்த கொவிட் தொற்றுநோயின் காரணமாக மெதுவாக நடைபெற்றது என அறிவிக்கப்பட்டது. | |
| 6. | பொலன்னருவையை கட்டியெழுப்புவோம் வட மத்திய புத்தாக அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் ரூபா 1,303.86 மில்லியன் ஆன ஒப்பந்த பெறுமதிக்கு நிர்வாக கட்டிடத் தொகுதியை நிர்மாணிப்பதற்காக பொறியியல்சார் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்திற்கு 2016 திசெம்பர் 15 ஆம் திகதி ஒப்பந்தம் அளிக்கப்பட்டு அச்செயற்திட்டம் 2018 திசெம்பர் 15 ஆம் திகதி பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்டு கையளிக்கப்பட்டிருக்கவில்லை | 2023 | கட்டிடத்தின் நிர்மாண வேலையை பூர்த்தி செய்து ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2018 திசெம்பர் 15 திகதி செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அது 2021 செப்தெம்பர் 30 திகதி வரை காலநீடிப்பு செய்யப்பட்டிருந்த போதிலும் நிதியம் காணப்படாமையால் நிர்மாண வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தது என அறிவிக்கப்பட்டிருந்தது. | தற்போது இந்த கட்டிடத்தில் குறைந்த வசதிகளுடனான ஐந்து நிறுவனங்கள் நிறுவப்பட்டிருந்த போதிலும் அத்தியவசியமான நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

### 3.19 புத்தளம் மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 2,919,898,037 | 246,271,475 | 2,673,626,562 | முனைப்பழியுள்ள |
| **2022** | 2,952,014,921 | 169,032,596 | 2,782,982,325 | முனைப்பழியுள்ள |
| **2023** | 3,146,527,012 | 54,312,676 | 3,092,214,336 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | புத்தளம் மாவட்டத்தில் புத்தளம் நகர எல்லையில் அமைந்துள்ள 02 றூட் 22 பேர்ச் அளவினை உடைய அசோக்க சிரிமா திரையரங்கு அமைந்துள்ள காணி 2014 ஆம் ஆண்டு முதல் புதிய வாடகையாளருக்கு 30 வருட காலத்திற்கு வாடகைக்கு வழங்கப்பட்டதுடன் 2011 ஆம் ஆண்டு முதல் 2021 வரை அறவிட வேண்டிய கூட்டுமொத்தமான ரூபா 25,000,000 வாடகைப் பணம் பதிவழிக்கப்பட்டிருந்தது. | 2023 | அரசுக்கு சொந்தமான காணிகளை குத்தகைக்கு கொடுத்தல் தொடர்பாக பெற வேண்டிய குத்தகை வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | குத்தகைத் தொகையை பதிவழிப்பதற்காக காணி அமைச்சரின் அங்கீகாரம் 2021.08.18 திகதி கிடைத்திருந்தது என 2021.08.19 திகதி காணி ஆணையாளர் நாயகத்தின் 4/10/12226 கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுடிருந்தது. பதிவழித்தல் தொடர்பாக காணி ஆணையாளரின் அறிவுரையின் படி நடவடிக்கை எடுப்பேன். | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 2 | மாவட்ட செயலக அலுவலகத தின் பொறியியல் திணைக்களத்தின் வழிகாட்டல் பிரதேச செயலக அபிவிருத்தி வேலைவிடயத்திற்காக | 2021 | மிகைக் கொடுப்பனவு செய்திருந்த தொகையை குறிப்பிட்ட பொறுப்புச் சொல்ல | 2021 ஆண்டின் முதலாவது அரையாண்டு விலைக் குழு நடாத்தப்பட்டு விலைகள் தீர்மானிக்கப்பட்டது | பரிந்துரைகளை செயற்படுத்தி இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஒரு கியூப் சரளைக கற்களின் தளவிலை (ஏறல் மற்றும் அரசிறை உள்ளடங்கலாக) ரூபா 3,000 ஆன மாகாண விலைக்குழுவின் தளவிலை பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும புதத் ளம் மாவட்ட செயலகத்தின DSP/TFC/CS/01/ මී.ක/ (1)/2021 மற்றும் 2021 சனவரி 01 ஆந் திகதிய மாவட்ட விலைக்குழுவின அறிக்கையின்பிரகாரம் ஒரு கியூப் சரளைக் கல ஏறல் மற்றும் அரசிறை உள்ளடங்கலாக தளவிலை ரூபா 2,000 என குறிப்பிடப்பட்டிருந்தது. அதறக் மைய 2021 ஆம் ஆண்டில் பிரதேச செயலக அலுவலகங்கள் 13 இன் 89 செயற்திட்டங்களுக்காக பயன்படுத்தப்பட்ட 7482.8 கனமீற்றரக்ள் அளவான சரளைக்கறக்ள் அல்லது 2641.3 கியூப் பயன்படுத்திய போது ஒரு கியூப் ரூபா 1,000 படி ரூபா 2,641,300 ஆன நட்டமொன்று ஏறப் ட்டிருந்தது. | | வேண்டிய தரப்பினர்களிடம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | டன் இந்த செயற்திட்டம் உள்ளூராட்சி நிறுவனத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட துடன் அவர்கள் மாகாண விலைக் குழு அறிக்கையை பயன்படுத்துவதனால் மாகாண விலைக் குழுவின் பெறுமதிகள் மாவட்ட கூறுவிலைகளை விட குறைவாக இருப்பதனால் பிரதேச செயலகங்களின் மதிப்பீடு மீது செயற்திட்டங்களை நிறைவேற்றுவதை ஒப்பந்தக்காரர்கள் மறுப்பதனால் மாகாண கூறுவிலைகளை பயன்படுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் எழுத்துமூலம் காணப்படவில்லை. அதன்படி மிகைக் கொடுப்பனவொன்று ஏற்பட்டிருக்கவில்லை. | |
| 3 | கற்பிட்டி பிரதேச செயலகத்தின் சௌபாக்கிய சமுர்த்தி உற்பத்தி கிராம நிகழ்ச்சித்திட்டம் - 2021 இன் கீழ் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் | 2023 | செயற்திட்டத்தின் குறிக்கோள்கள் நிறைவேற்றக் கூடியவாறு செயற்பட வேண்டும். | நாட்டில் நிலவிய சீரற்ற பொருளாதார நிலைமையின் காரணமாக இந்த செயற்திட்டம் தற்போது செயற்படாத | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மொத்தமாக ரூபா 6,837,434 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த கந்தக்குளிய பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி கிராமம் 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் - இல்லாமல் பயனற்றுக் காணப்பட்டது. அவ்வாறே வலை வேலிக்காக பயன்படுத்தப்பட்ட 25mm GI குழாய்களில் உரிய பிரகாரம் வர்ணம் பூசப்படாமை மற்றும் குழாய்களை இணைக்குகின்ற இடங்களில் பயன்படுத்தப்பட்ட PVC பகுதி கழன்று சென்றிருந்தமையினால் குழாய்க்குள் நீர் சென்றமையினாலும் துருப்பிடித்திருந்தது. அவ்வாறே ரூபா 50,000 செலவிடப்பட்ட இரண்டு வாயிற்கதவு மேவுகைகள் மற்றும் ரூபா 113,388 செலவில் நீர்க் குழாய் உபரணங்கள் உடைந்து அழிவடைந்திருந்ததுடன் ரூபா 29,850 செலுத்தப்பட்டிருந்த $1\frac{1}{2}$ அங்குல 25 PVC Gate value பொருத்தப்பட்டிருக்கவில்லை. | | | மட்டத்தில் காணப்படுவதுடன் குறிப்பிட்ட சங்கத்துடன் கலந்துரையாடல் நடாத்தப்பட்டது. வர்ணம் தீட்டுவதற்கு தேவையாள துணைக் கருவிகள் பொறுத்தப்பட்டிருந்த போதிலும் விளையாட்டுத் திடலுக்கு வரக் கூடிய ஆட்கள் அங்கீகாரமின்றி பிரவேசித்து அழித்துள்ளனர். தற்போது குறைபாடுகள் சரி செய்யப்பட்டுள்ளது . கேட்வேல் பிரதேச செயலகத்தின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ளது. | |
| 4 | நிர்மாணிக்கப்பட்டுகொண்டிருக்கின்ற மாவட்ட செயலகத்தின் பிரதான கட்டிடத்தின் 14 ஆவது பட்டியலை செலுத்துதல் நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் தீர்க்கப்படுகின்ற | 2021, 2022, 2023 | 14 ஆவது பில் பத்திரத்தை செலுத்துதல் உடன்படிக்கையின் நிபந்தனையின் படி | நிர்மாண வேலைகளில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக அப்போது காணப்பட்ட உத்தியோகத்தர்க | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செயற்பாடுகளுக்குரிய 14 ஆவது பட்டியலைச் செலுத்துவதற்கு ஏற்பட்ட தாமதத்தால் வட்டியாக ரூபா 10,349,580 செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | | நடவடிக்கை எடுக்கப்படாமையால் வட்டி செலுத்துவதற்கு நேரிட்டிருந்தமையால் அது தொடர்பான பொறுப்புக்கள் தீர்மானிக்கப்பட வேண்டும். | ளினால் கொடுப்பனவு மறுக்கப்பட்டு ஒப்பந்த உடன்படிக்கைக்கு இணங்க செயற்படுத்தப்பட்டது. அதன்படி பிணக்குகள் நியாயசபை செய்முறை நடுத்தீர்ப்பு செய்முறைக்கு செல்லல் காரணமாக இந்த கொடுப்பனவு தாமதமடைந்ததுடன் நடுத்தீர்ப்பு தீர்ப்பின் படி இந்த கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது. அதன் காரணமாக இந்த தாமத வட்டி உடன்படிக்கைக்கு இணங்க செலுத்துவதற்கு நேரிட்டது. | |
| 5 | புத்தளம் மாவட்ட செயலகத்திற்குரிய தற்போதைய மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 255,800,000 ஆன 08 உத்தியோகபூர்வ இல்லங்கள் அமைந்துள்ள 01 ஏக்கர் 02 றூட், 14.7 பேர்ச் அளவான காணி புத்தளம் நகர சபையினால் நிர்மாணிக்கப்படுகின்ற எல்பா வியாபார கட்டடத் தொகுதி மற்றும் அதன் வாகனத் தரிப்பு தளத்திற்காக புத்தளம் நகர சபைக்கு கையளிக்கப் பட்டு அதற்கு பதிலாக | 2021, 2022, 2023 | தாமதமின்றி காணிகளை பெற்றுக் கொண்டு திட்டமிட்ட படி செயற்பட வேண்டும். | 2023.06.07 திகதி குறிப்பிட்ட தரப்பினருடன் விஷேட கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்பட்டு செயற்படுத்த வேண்டிய முறையொன்று தொடர்பாக தீர்மானிக்கப்பட்டது. புதிய 04 உத்தியோக பூர்வ வாசஸ்தலங்கள் நிர்மாணிப்பதற்கு தேவையான மதிப்பீடு 2023.09.20 புத்தளம் நகர | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | புத்தகளம் டிப்போ தளத்திற்கு அருகில் நகர சபைக்குரிய காணியில் 01 ஏக்கர் வழங்கப்பட்டு 08 உத்தியோகபூர்வ இல்லங்கள் தற்போது மதிப்பீட்டுப் பெறுமதிக்கு சமமான 04 உத்தியோகபூர்வ இல்லங்களை நிர்மாணிப்பதற்கு தேவையான பணம் மாவட்ட செயலகத்திற்கு வழங்குவதற்கு இணக்கப்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் நபர்களுக்கு குடியிருப்பதற்குப் பொருத்தமான நிலைமையில் உள்ள இந்த 08 உத்தியோகபூர்வ இல்லங்களில் 04 இல்லங்களை மதிப்பீடு செய்வதற்கு முன்னர் உடைத்து அகற்றப்பட்டிருந்த போதிலும் 2024 மார்ச் வரையிலும் காணி கையளிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாதிருந்ததுடன் தீர்மானம் எடுக்கப்பட்ட பிரகாரம் 04 உத்தியோபூர்வ இல்லங்களின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | | சபை செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| 6 | கிராம சக்தி முதலாவது மற்றும் இரண்டாவது கட்டங்களின் கீழ் புத்தளம் மாவட்ட செயலகத்திற்குரிய 16 பிரதேச செயலகங்களில் 166 | 2021, 2022, 2023 | செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள் நிறைவேறக் கூடியவாறு செயற்பட | தற்போது சௌபாக்கிய அபிவிருத்தி பணியகத்தின் கீழ் கிராம சக்தி சங்கங்களின் செயற்பாடுகள் நெறிப்படுத்தப்படுவ | கிராம சக்தி சங்கங்களின் காலாண்டு முன்னேற்றம் 2024.10.04 திகதியில் உள்ளவாறு நாளதுவரை ஆக்கப்பட்டு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சங்கங்களில் 121 சங்கங்கள் செயலிழந்து காணப்பட்டதுடன் இந்த சங்கங்களில் 2023 திசம்பர் 31 ஆம் திகதி வரையில் கூட்டுமொத்தமாக ரூபா 102,385,768 காசு மீதி பயனற்றுக் காணப்பட்டது. | | வேண்டும். | துடன் செயற்படாத கிராம சக்தி சங்கங்களுக்கு சொந்தமான நிதியம் செயற்படு சங்கங்களுக்கு வழங்கப்பட்டு பொது மக்களின் வாழ்வாதார அபிவிருத்தி மற்றும் நுண்நிதிக் கடன் நிகழ்ச்சித் திட்டத்தை வலுப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | அனுப்பும் படி அனைத்து பிரதேச செயலாளர்களுக்கும் அறிவித்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| 7 | ஆராய்ச்சிக்கட்டுவ பிரதேச செயலகப பிரிவில பத்துலுஓயா,செங்கல ஓயா மற்றும் சுருவில் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில நடாத்திச் செல்லப்படும அனுமதியற்ற இறால் பண்ணைகள் 22 மற்றும தறபோது செயலிழந்த நிலையில காணப்படும 04 பண்ணைகள தொடரப்ான தகவல்கள் வனசீவராசிகள பாதுகாப்புத் திணைக்களத்திற்கு 2019 மற்றும் 2020 ஆம ஆண்டுகளில அனுப்பப் ட்டிருந்த போதிலும் அந்த அனுமதியற்ற இறால பண்ணைகள் கணக்காய்வுத திகதியான 2022 சனவரி 14 ஆந் திகதி வரையிலும் நிறுத்துவதறகு | 2021 | ஆக்கபூர்வமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது இது தொடர்பான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | 42/2019 இலக்கங் கொண்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் படி வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு நடவடிக்கை எடுக்கும் படி அறிவிக்கப்பட்டுள்ள போதிலும் தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த இறால பண்ணைகளிலிருந்து குத்தகைபணத்தை அறவிடுவதற்கேனும நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 8 | 2019 – 2021 காலப்பகுதியில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் புத்தளம் மாவட்ட செயலகத்தின் மூலம் சிறிய மற்றும் நடுத்தர அளவிலாள நெல் ஆலை உரிமையாளர்கள் ஊடாக நெல்லைக் கொள்வனவு செய்வதற்கு 2020/21 பெரும் போகம் மற்றும் 2021 சிறுபோகத்தின் போது ஆனமடுவ, நவகத்தேகம மற்றும் கருவலகஸ்வெவ பிரதேச செயலகப் பிரிவுகளின் 20 நெல் ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்ட பணத்தில் இலங்கை லங்கா ச.தொ.ச இற்கு 2022 மார்ச் 15 ஆம் திகதியில் கிடைக்க வேண்டியிருந்த அரிசி கிலோகிராம் 1429338 இற்காக ரூபா 111,208,565 தொகை 2023 திசெம்பர் 31 வரையிலும் அறவிடுவதற்கு பொறுப்பு வாய்ந்த உத்தியோத்தரினால் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுட | 2021, 2022, 2023 | பணம் அறவீடு செய்வதற்காக செயற்திறனுடன் தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். | வழங்க வேண்டிய அரிசியின் பெறுமதியை அரசிற்கு வழங்கும் படி வழங்கப்பட்டிருந்த தீர்ப்பின் மீது பகுதிகளாக பணம் செலுத்தப்பட்டு வந்ததுடன் 2024.04.30 திகதியளவில் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 106,773,565.39 தொகை ஆகும். அந்தத் தொகையை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | பரிந்துரையின் படி அறவீடு செய்வதற்காக செயற்திறனுடனாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ன் அரசாங்கத்தின் மேற்கூறப்பட்ட நோக்கமான விவசாயிகளின் மிகை நெல் இருப்பினை நியாயமான விலையில் பெற்றுக்கொள்வதற்கும் மற்றும் சத்தேசயின் மூலம் நுகர்வோர்களுக்கு நியாயமான விலையில் அரிசியினை வழங்குதல் என்ற நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்ததுடன் அரசாங்கத்தின் பணம் முறைகேடாகவும் மற்றும் முறையற்ற வகையிலும் பயன்படுத்துவதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. | | | | |
| 9 | மாவட்ட விவசாயப் பணிப்பாளரின் 2021 பெப்ரவரி 25 ஆம் திகதி கடிதத்தின் பிரகாரம் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தரின் பரிந்துரையைக் கவனத்தில் கொள்ளாமல் கமநல சேவை நிலையங்கள் சேவை செயற்குழுக்களின் மூலம் தயாரிக்கப்பட்டுள்ள பசளை பெயர் பதிவேட்டில் பயிரிடப்பட்ட வயல் ஏக்கர்களின் எண்ணிக்கை குறித்துரைத்தவாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவிக்கப்பட்ட போதும் நவகத்தேகம மற்றும் ஆணமடுவ | 2023 | சுற்றறிக்கைக்கு இணங்க தேவையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். | இந்த நெற் கொள்வனவு நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்ட சந்தர்ப்பத்தில் விவசாய ஆய்வு உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க நடவடிக்கை ஒன்றிற்கு அணுகியிருந்ததால் உர பெயர்ப் பட்டியலை பரிசோதனை செய்து நெற்கொள்வனவு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும் விரைவாக இந்த நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்த வேண்டிக் காணப்பட்டமையால் அப்போது | சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பிரதேச செயலகங்களின் உத்தியோகத்தர்கள் அந்தத் தேவையினை நிறைவேற்றாமல் 2021 சிறுபோகத்தின் போது பசளை பெயர்ப் பதிவேட்டில் பெயர் குறிப்பிடாத 142 நபர்களிடமிருந்து 710,000 நெல் கிலோகிராம் இற்காக கொள்வனவு செய்யப்பட்டதாக பதிவேடு தயாரித்து ரூபா 31,240,000 செலுத்தப்பட்டிருந்தது. | | | சேவையாற்றிய விவசாய பணிப்பாளரினால் நெல் வழங்கும் ஆட்களிடம் தான் விவசாயி ஒன்றென கூற்றொன்று கடிதம் மூலம் பெற்றுக் கொண்டு நெல் கொள்வனவு செய்யும் படி வாய்மொழி மூலம் பிரதேச செயலாளர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த மையால் அதன் படி செயற்படுத்தப்பட்ட து. | |
| 10 | 2021 சிறு போகத்திற்குரிய நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விவசாயிகளின் பெயர்ப் பதிவேட்டில் பெயர் குறிப்பிடப்பட்ட 11 விவசாயிகளினால் வழங்கப்பட்ட எழுத்து மூல கூற்றின் பிரகாரம் எந்த ஒரு நெல் அளவும் நெல் ஆலை உரிமையாளர்களுக்கு வழங்க முடியாதிருந்த நெல் கிலோகிராம் 55,000 இற்காக ரூபா 2,420,000 விவசாயிகளின் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்ட பின்னர் அந்தத் தொகை விவசாயிகளால் ஆலை உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும் நவகத்தேகம பிரிவில் 14 விவசாயிகளிடமிருந்து நெல் கிலோகிராம் | 2023 | சுற்றறிக்கை அறிவுரையின் படி அதிகாரிகளின் முறையான மேற்பார்வையின் கீழ் செயற்பட வேண்டும். | நெற் கொள்வனவு செய்முறையில் மோசடி அல்லது தவறு ஏற்படாதவாறு அனைத்து அலுவல்களும் திட்டமிடப்பட்டுள்ள துடன் அந்த அலுவல்கள் சிறந்த முறையில் கண்காணிப்பதற்காக விவசாயப் பிரிவின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு மேலதிகமாக குறிப்பிட்ட பிரதேசத்தின் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் நெல் கொள்வனவு சந்தர்ப்பங்களில் நெல் ஆலைகளில் தங்கி இருக்குமாறு ஆலோசனை | முறையான கண்காணிப்பொன்று மேற்கொண்டு முறையான சட்டச் செயற்பாடுகள் எடுக்கப்பட்டிருக்கவி ல்லை. |

5000 வீதம் மொத்தமாக கிலோகிராம் 70,000 பெறப்பட்டமைக்கான பத்திரம் தயாரிக்கப்பட்டு விவசாயிகளின் கணக்குகளுக்கு ரூபா 3,180,000 செலவு வைக்கப்பட்டிருந்த போதிலும் விவசாயிகளிடமிருந்து பெறப்பட்ட எழுத்துமூல கூற்றுக்களின் பிரகாரம் அவர்களால் கிலோகிராம் 28000 அளவு மாத்திரமே வழங்கப்பட்டிருந்ததுடன் வேறுபாடான நெல் கிலோகிராம் 42000 இன் ரூபா 1,848,000 நெல் உரிமையாளர்களால் விவசாயிகளிடமிருந்து மீளப்பெறப்பட்டிருந்தது.

வழங்கப்பட்டிருந்தது. அவர்களும் அவ்வாறு செயற்பட்டிருந்தனர். நெற் கொள்வனவின் போது கொள்வனவு செய்த எண்ணிக்கையை உறுதிப்படுத்துவதற்காக மாவட்ட செயலகத்தினால் 03 படிவங்கள் அறிமுகப்படுத்தியிருந்தது. அதன் படி ஒவ்வொரு படிவங்களும் சரியாக நிரப்பப்பட்டு தயாரிப்பதற்காக உத்தியோகத்தர்கள் கடமைகள் சாட்டப்பட்டிருந்தது. அவ்வாறு கிடைக்கக் கூடிய ஆவணங்களின் சரியான தன்மையை உறுதிப்படுத்தி பிரதேச செயலாளரினால் கொடுப்பனவு செய்யப்பட்டது. அதன் படி போலியான அனுமதிப்பத்திரங்கள் தயாரித்தல் குறிப்பிட்ட தரப்பினர்களினால் கூட்டிணைந்து மேற்கொண்டிருக்கக் கூடும். எனினும் குறிப்பிட்ட நெல் எண்ணிக்கை அரிசி ஆலைக்கு ஒப்படைக்கப்பட்டது என குறிப்பிட்ட விவசாயியினால் குறிப்பிட்ட

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | படிவத்தில் கையொப்பமிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுத்தல் தொடர்பில் தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | |
| 11 | புத்தளம் மற்றும் முந்தல பிரதேச செயலகங்களுக்கு 2021 ஆம ஆண்டில்திட்டமிடப்பட்டிருந்த ரூபா 69,629,383 பெறுமதியான 46 செயற்திட்டங்களின் செயல்முன்னேற்றம் 20-25 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில காணப்பட்டதுடன் நிதியேற்பாடு இல்லாதிருந்த காரணத்தினால இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது. | 2021 | தேவையான ஏற்பாடுகள் பெற்றுக் கொண்டு திட்டமிடப்பட்ட வாறு செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இணங்குகின்றேன். | திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |
| 12 | வென்னப்புவ ஜோசவ்வாஸ் கல்லூரியின் விளையாட்டு மைதானத்தில கூரையொன்றினை அமைப்பதறக் 2014 ஆம ஆண்டு ரூபா 48,638,504 செலவிடப்பட்டிருந்த போதிலும் 2022 ஆம ஆண்டளவிலும விளையாட்டரங்கின் நலநன பெறாத முழுமையான செயற்திட்டமொன்றாக நிலவுகின்றமை அவதானிக்கப்பட்டது. | 2021 | நிர்மாண வேலைகளை பயன்படுத்துவதற்கு தேவையான முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வரிசை அமைச்சின் கீழ் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த இந்த செயற்திட்டம் தொடர்பான சாத்தியக்கூறு ஆய்வு கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் புத்தளம் மாவட்ட செயலாளரினால் மேற்கொள்ளப்பட்டது பெற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டிற்கு இணங்க நிர்மாண அலுவல்களை | வேலை பூர்த்தி செய்யப்படாமையால் பயன்படுத்த முடியாமல் உள்ளது. |

மேற்பார்வை
செய்தல்
மாத்திரமே.

## 3.20 இரத்தினபுரி மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 2,305,907,126 | 314,449,608 | 1,991,457,518 | முனைப்பழியுள்ள |
| **2022** | 2,444,476,229 | 182,174,408 | 2,262,301,821 | முனைப்பழியுள்ள |
| **2023** | 12,693,035,425 | 101,169,419 | 12,591,866,006 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | உள்விவகார அமைச்சின் கீழ் ரூபா 2,000,000 வீதம் 68 நாட்களில் நிர்மாணிக்கும் அடிப்படையில் 2017 ஒக்டோபர் 25 திகதி ஒப்பந்தமிட்டு பெல்மடுள்ள பிரதேச செயலகத்திற்குரிய கல்லின்ன மற்றும் மொறதொட்ட நில செவன அலுவலகத்தை நிர்மாணிப்பது தொடர்பாக 16 வேலை விடயங்களிற்கு ரூபா 567,269 ஆன மேலதிக கொடுப்னவு தொடர்பாக கணக்காய்வு திகதிய 2022 பெப்ரவரி 02 அளவிலும் பரிசோதனை நடாத்தி அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2021 | நிதிப் பிரமாணம் 156 (ை) இற்கு இணங்க மிகைக் கொடுப்பனவு தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | விசாரணை உத்தியோகத்தர் குழுவொன்றின் மூலம் இது தொடர்பாக விடயங்கள் கண்டறியப்பட்டன. | விசாரணை அலுவல்களை பூர்த்தி செய்து மிகைக் கொடுப்பனவினை அறவீடு செய்திருக்கவில்லை. |
| 2 | மாவட்ட செயலகத்தில் மின் சுற்றுத் தொகுதி பலகை தீபற்றியதால் ரூபா 4,143,204 ஆன இழப்பு ஏற்பட்டு 2023 | 2022 | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். | இது தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் 2024.07.11 திகதிய கடிதத்தின் மூலம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மார்ச் மாதமளவில் 14 மாதங்கள் கடந்திருந்த போதும், நிதிப்பிரமாணம் 104 பிரகாரம் பொறுப்பை உறுதி செய்து இழப்பை மீள்நிரப்பிக் கொள்ளவுள்ள இயலுமையை கண்டறிந்திருக்கவில்லை. | | | | பக்கசார்பற்ற விசாரணையொன்று நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன் விசாரணை அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 3 | மாவட்ட செயலக கட்டிடமொன்றில் நடாத்திச் செல்லப்படும் சிற்றுண்டிச் சாலையிலிருந்து மற்றும் நலன்புரி வியாபார நிலையித்திலிருந்து 2013 – 2022 ஆண்களிற்கு இடையிலான காலத்தில் கிடைத்த கட்டிட வாடகை ரூபா 2,671,760 தொகை நலன்புரி சங்கமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த வாடகை கட்டணத்தை அரசாங்க வருமானமொன்றாக இனங்கண்டிருக்காததுடன் அரச கட்டிடமொன்றிலிருந்து ஈட்டும் வாடகை வருமானத்தை நலன்புரி சங்கமொன்றிற்கு வழங்க காணப்படும் சட்ட இயலுமையை உறுதி செய்து கொள்ள முடியவில்லை. அவ்வாறே, எவ்வித டென்டர் விண்ணப்பமும் இன்றி 2020 ஆண்டு முதல் இது வரை அவ் ஒப்பந்ததாரரினால் சிற்றுண்டிச் சாலையை | 2022 | அரச வருமானம் தாமதமின்றி அறவீடு செய்ய வேண்டும். | 2023 மார்ச் மாதம் முதல் குறிப்பிட்ட வாடகையை அறவீடு செய்து அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். | 2013 ஆண்டு முதல் 2022 ஆண்டு வரை சிற்றுண்டிச்சாலை மற்றும் நலன்புரி விற்பனை நிலையத்தில் இருந்து அறவீடு செய்யப்பட்ட வாடகை அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நடாத்திச் செல்வதுடன், அவரினால் 2022 மற்றும் 2023 ஆண்டிற்காக ரூபா 60,533 ஆன நீர் பட்டியலும், நலன்புரி வியாபார நிலையத்தால் ரூபா 35,459 ஆன மின்சார பட்டியலும் தீர்த்திருக்கவில்லை. | | | | |
| 4 | மாவட்ட செயலகத்தின் 38 அரசாங்க இல்லங்களில் 07 இல்லங்கள் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக பயன்படுத்தாது காணப்பட்டதனால் அந்த இல்லங்களில் காடு வளர்ந்து மூடிக்காணப்பட்டதுடன் கதவு யன்னல்களை கள்வர்கள் எடுத:துச் சென்றிருந்தனர். அந்த வீடுகள் போதைப் பொருட்கள் உள்ளடங்கலாக பல்வேறு தவறான நடத்தைகளுக்கு பயன்படுத்தப்படுவதுடன் அனுமதியற்றவர்கள் குடியிருக்கும் ஆபத்தும் காணப்பட்டது. வீடுகளுக்காக காத்திருக்கும் பட்டியலில் இருக்கும் 77 உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க வீடுகளைப் பெற்றுக்கொள்ளும் தாமதமும் இதனால் காணப்பட்டது. | 2023 | சொத்துக்கள் பயன்படுத்தப்படாமல் இருக்கக் கூடாது. | ஏற்பாடுகள் கிடைத்திருக்காமையால் இந்த வீடுகளை திருத்த வேலை மேற்கொள்வதற்கு முடியாமல் உள்ளது என. | 04 வீடுகளை திருத்த வேலைகள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| 5 | ரூபா 25,850,000 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட 22 வீடுகளின் கட்டிட | 2023 | தேவையான அங்கீகாரம் விரைவாக பெற்றுக் | இதுவரை அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை என. | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | விண்ணப்ப பத்திரங்கள் 2017 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை குருவிட்ட பிரதேச செயலகத்தின் மூலம் அங்கீகரிக்கப்படாமையால் மீளக் குடியமர்த்தும் நடவடிக்கையை முடிவுறுத்த முடியாதிருந்தது. | | கொள்ள வேண்டும். | | |
| 6 | 13 பிரதேச செயலகப் பிரிவுகளில் அமுல்ப்படுத்தப்பட்ட 36 சமூர்த்தி வங்கிகளினால் வழங்கிய கடன்களுக்காக 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 09 மாதங்களுக்கு குறைந்த காலங்கடந்த கடன்கள் மற்றும் 09 மாதங்களுக்கு மேற்பட்ட அறவிட முடியாக் கடன்கள் முறையே ரூபா 357,478,987 மற்றும் ரூபா 208,148,406 ஆகும். | 2023 | அறவிட முடியாத கடன் மற்றும் காலங்கடந்த கடன்களை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும | சமூர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் அறிவுருத்தி அறவீடு செய்தல் மேற்கொள்ளல். நினைவூட்டல் கடிதம் வழங்குதல் இணக்க சபைகளுக்கு சமர்ப்பித்தல். கோரிக்கைபத்திரம் அனுப்புதல் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு தொடர்புபடுத்துதல். பிரதேச செயலாளரின் மூலம் கடிதங்கள் அனுப்புதல். | ஒட்டுமொத்த நிலுவைக் கடன் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.21 திருகோணமலை மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 1,673,916,770 | 113,754,422 | 1,560,162,348 | முனைப்பழியுள்ள |
| **2022** | 4,034,187,197 | 46,574,794 | 3,987,612,403 | முனைப்பழியுள்ள |
| **2023** | 5,621,286,938 | 31,609,633 | 5,589,677,305 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | சேருவில மற்றும் கோமரங்கடவல பிரதேச செயலகங்களில் குறைந்த வருமானம் உடைய மாற்றுத்திறனாளிகளுக்கு ரூபா 5,000 படியை செலுத்தும் அதே நேரம் உரிய பயனாளிகளைத் தெரிவு செய்வதற்கான சுற்றறிக்கையின் ஏற்பாடுகளை மீறி, மீளாய்வாண்டில் 2124 சந்தர்ப்பங்களில் 178 நபர்களுக்கு ரூபா 10.62 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. | 2021 | சுற்றறிக்கை ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். | நலன்பெறுவோர் தெரிவு செய்தல் சுற்றறிக்கை ஏற்பாடுகள், கிராம குழுக்கள் மற்றும் கிராம உத்தியோகத்தர்களின் பரிந்துரைகள் மீது மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. |
| 2 | 2021 சனவரி 11 ஆம் திகதிய நிதி அமைச்சின் MFNPD/07/2021 ஆம் இலக்க கடிதத்தின் 2.4 ஆம் பந்தியின் பிரகாரம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தை வழங்கி | 2021 | சுற்றறிக்கை அறிவுரைகள் உரிய முறையில் கடைபிடிக்க வேண்டும். | நிதி அமைச்சுச் சுற்றறிக்கை MF/NDP/01/2021 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கணக்காய்வினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளவாறு 2021 ஜனவரி | சுற்றறிக்கை அறிவுரைகள் உரிய முறையில் கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பகிர்ந்தளித்தல் பிரதேச செயலக பிரிவில் வசிக்கின்ற மக்களிற்கான வறுமை மற்றும் புவியியல் நிதி அமைச்சின் ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் தொடரப்பட்டது. கணக்காய்வின் மூலம் சுட்டிக காட்டப்பட்டவாறு 2021 சனவரி 11 ஆம் திகதிய நிதி அமைச்சின் சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் முறையாக பின்பற்றப்பட வேண்டும். 17 இருப்பிடத்தின் அடிப்படையில் நியாயமான முறையில் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டில் ஒதுக்கப்பட்ட ரூபா 41.53 மில்லியன் தொகையில் ரூபா 40.61 மில லியன் தொகை மாவட்ட செயலகத்திற்குரிய 11 பிரதேச செயலகங்கள் மூலம் மேற்படி ஏற்பாடுகளிற்கு எதிராக செலவிடப்பட்டுள்ளது. | | | 11 திகதிய நிதியமைச்சின் MFNPD/07/2021 இலக்க கடிதத்தின் பந்தி 2.4 இன் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| 3 | 2019/2020 பெரும் போகத்தில் நெல் கொள்வனவு செய்யும் துரித வேலைத்திட்டத்தின் கீழ், கந்தளாய் பிரதேச செயலகத்தின் 04 அரிசி ஆலை உரிமையாளர்களிடமிருந்தும், லங்கா சதொச நிறுவனத்திடமிருந்தும் | 2023 | குறிப்பிட்ட பணம் விரைவாக அறவீடு செய்து அரச வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டும். | சட்ட செயற்பாடு ஒன்றாக கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த சிக்கலில் குற்றமொன்றிற்கான அடையாளம் காணப்படவில்லை | 2024 செப்தெம்பர் 30 திகதி வரை பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

கிடைக்க வேண்டிய மொத்த பெறுமதி ரூபா 6,490,269 ஆன 77,146 கிலோ கிராம் அரிசிக்கு ஏற்புடைய பணம் 03 வருடங்கள் கடந்த போதிலும், மாவட்ட செயலகத்தினால் அறவிடப்பட்டிருக்கவில்லை.

என கந்தளாய் பொலிஸினால் அறிவிக்கப்பட்டமையால் சட்டமா அதிபரிடம் மேலதிக அறிவுரை வேண்டப்பட்டுள்ளது.

## 3.22 வவுனியா மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 1,705,224,668 | 53,944,802 | 1,651,279,866 | முனைப்பழியற்ற |
| **2022** | 1,702,852,987 | 24,143,871 | 1,678,709,117 | முனைப்பழியுள்ள |
| **2023** | 1,700,012,762 | 14,426,559 | 1,685,586,203 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | நேர் முன்னைய வருடத்தில் வவுனியா மாவட்டத்துக்கு மீள்குடியேற்ற அமைச்சினால் வழங்கப்பட்ட 456 மலசலகூட அமைத்தல் வேலைக்குரிய நிதி ஒதுக்கீட்டில் வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலகத்தினால் கூட்டுமொத்தம் ரூபா 700,000 பெறுமதியான ஒதுக்கீடு செய்யப்பட்ட 10 மலசலகூடங்கள் நாளதுவரை நிர்மாணிக்கப்பட்டிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2022 | கட்டுநிதி பெற்றுக் கொண்டு விரைவாக கழிவறை முறைமையை நிர்மாணிப்பதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கட்டுநிதி கிடைத்தவுடன் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குறிப்பிட்ட நடவடிக்கை இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 2 | மாவட்டச் செயலகத்திற்கு உரித்தான 02 அரச இல்லங்களின் நுழைவாயிற் கதவுகள் மற்றும் இல்லக்கதவுகள் உடைக்கப்பட்டு களவு இடம்பெற்றிருந்தபோதும் இது தொடர்பாக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு | 2023 | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். | இந்த வீடுகளில் களவு நடைபெறல் தொடர்பாக அறிந்தவுடன் வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டு நட்டம் தொடர்பாக மாவட்ட பொறியியலாளரின | குறிப்பிட்ட நடவடிக்கைகள் இது வரை முடிவடைந்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதி 103 இன்படி நாளதுவரையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | | | ால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என. | |
| 3 | இராஜாங்க அமைச்சின் கிராமிய வீடமைப்பு மீள் எழுச்சி திட்டத்தின் கீழ் 2016 இல் ஆரம்பிக்கப்பட்டு 2023 திசெம்பர் 31 இல் முடிவுறுத்தப்பட்ட 3,541 வீடுகளில் 64 வீடுகள் நாளதுவரையில் பயனாளிகளால் பயன்படுத்தப்பட்டிருக்காது காணப்படுகின்றது. | 2023 | செயற்திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக விரைவான வேலைத் திட்டமொன்று செயற்படுத்த வேண்டும். | பயன்படுத்தப்படாத வீடுகளில் வதிய வைப்பதற்காக தொடர்ச்சியாக முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது என. | குறிப்பிட்ட நடவடிக்கைகள் இது வரை முடிவடைந்திருக்கவில்லை. |
| 4 | மாவட்ட செயலகத்தினால் 2018 ஆம் ஆண்டின் வரவு செலவு திட்ட முன்மொழிவுக்கு அமைய கூட்டுமொத்தம் ரூபா 291,639,356 செலவில் நிரமானிக்கப்பட்ட வவுனியா பொருளாதார மத்திய நிலையம் இவ்வறிக்கைத் திகதி வரை மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டிருக்காததுடன் 2018 தொடக்கம் 2023 வரை பாதுகாப்புச் சேவைக்கட்டணம், சுத்திகரிப்பு செலவுகள் மற்றும் நீர்க்கட்டண செலவுகளாக ரூபா 7,846,555 செலவு செய்யப்பட்டுள்ளது. | 2023 | முறையான வேலைத் திட்டமொன்றின் மூலம் சொத்துக்கள் குறிப்பிட்ட குறிக்கோள்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கிராமிய பொருளாதார அமைச்சின் அங்கீகாரம் கிடைத்தவுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட நடவடிக்கைகள் இது வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 5 | பிரதேச செயலக வவுனியா பிரிவிற்குட்பட்ட பறன்நட்டகல் | 2023 | ஏற்பாடுகள் மற்றும் கட்டுநிதித் தொகை | குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டம் ரூபா 194,844,840 இற்கான | செயற்திட்டத்தின் குறிக்கோள் நிறைவேற்றப்பட்டு இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | முன்பள்ளி கட்டடம் அமைத்தல் வேலையானது ஒரு சனசமூக நிலையத்தினூடான ஒப்பந்தம் மூலம் ரூபா 2 மில்லியன் மதிப்பீட்டில் 2019 டிசம்பர் 06 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதும் நாளதுவரையில் நிறைவுபடுத்தப்படாமல் உள்ளதுடன் இவ்வேலைக்காக கூட்டுமொத்தம் ரூபா 1,551,712 செலவழிக்கப்பட்டிருந்த போதும் பூரணப்படுத்தப்படாமையால் இச்செலவினம் ஓர் வீண்விரயமாக காணப்பட்டிருந்தது. | | பெற்றுக் கொள்ளல் தொடர்பாக கவனம் செலுத்தி செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காகவும் செயற்திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | மதிப்பீட்டுக் கிரயம் ஒன்றின் மீது ஒப்பந்த வேலை கையொப்பமிடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், அந்த நிதியாண்டில் கட்டுநிதிகள் கிடைக்கப் பெறாமையால் இந்த நிகழ்ச்சித் திட்டம் கையொப்பமிட்ட திகதியில் பூர்த்தி செய்ய முடியாமல் போனது என. | |
| 6 | மாவட்டச் செயலகத்திற்கும் மற்றும் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலகத்திற்கும் உரித்தான 16 அரச இல்லங்களை கடந்த 03 மாதங்கள் தொடக்கம் 06 வருடங்களுக்கு மேலாக திருத்தங்கள் மேற்கொண்டு பயன்படுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக் கவில்லை. | 2023 | பயன்படுத்த முடியாத சொத்துக்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெங்கடவெட்டிக்குளம் ரஜ சமூக (ஷமரி) வீடு பயன்படுத்த முடியாத நிலைமைக்கு காணப்படுவதனால் அதனை அகற்றும் படி 2024.04.15 திகதிய வேண்டுகோளின் படி தொடர் நடவடிக்கை மாவட்ட பொறியியலாளரின் அறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என. | குறிப்பிட்ட நடவடிக்கை இது வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 7 | வவுனியா மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகத்தில் 08 மோட்டார் சைக்கிள்கள் பயன்படுத்தப்படாமலும் திருத்தம் செய்யப்பட | 2023 | திருத்த வேலைகள் மற்றும் பராமரிப்பு அலுவல்கள் முறைப் பிரகாரம் | திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்தக் கூடிய மோட்டார் சைக்கிள்களை பயன்படுத்துவதற்கும் மீதியானவற்றை | 2024 செப்தெம்பர் 30 திகதி வரை வாகனங்களை பயன்படுத்தி இருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | வேண்டிய நிலையிலும் பாதுகாப்பு மற்றும் பராமரிப்பின்றி கடந்த 02 தொடக்கம் 07 வருடங்களாக உள்ளது. | | மேற்கொள்ளப் பட்டு ஆக்கபூர்வமா க வாகனங்களை பயன்படுத்துவ தற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | சுற்றறிக்கைக்கு இணங்க அப்புறப்படுத்துவத ற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | |
| 8 | மீளாய்வாண்டில் ஆடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வவுனியா மாவட்டத்தின் 04 பிரதேச செயலகங்களிற்கும் ரூபா 13,285,369 செலவில் 525 ஆடுகள் வழங்கப்பட்டது. இருப்பினும், வவுனியா தெற்கு பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட 49 ஆடுகளிற்கு காப்புறுதி செய்யப்பட்டிருக்கவில் லை. மேலும், நான்கு பிரதேச செயலகங்களிலும் 44 ஆடுகள் இறந்துள்ள போதும் தலா ஒரு ஆட்டுக்கான காப்புறுதி தொகை ரூபா 2,935 படி கூட்டுமொத்தம் ரூபா 129,140 இழப்பீட்டுத் தொகையினை நிறுவனத்தினால் பயனாளிகளுக்கு வழங்கப்படாமை அவதானிக்கப்பட்டது. | 2023 | சுற்றறிக்கை நிபந்தனைக ளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுட ன் காப்புறுதித் தொகை குறிப்பிட்ட நிறுவனத்தில் இருந்து நலன்பெறுவே ாருக்கு பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வழங்கியிருந்த மொத்த ஏற்பாடுகளுக்காக ஆடுகள் கொள்வனவு செய்து வழங்குமாறும், காப்புறுதிச் செலவுகள் நலன்பெறுவோரின ாலே மேற்கொள்வதற்கு இணங்கியிருந்தை மயால் கொள்வனவு செய்து வினியோகிக்கப்பட் டது. காப்புறுதி செய்யப்பட்ட இடையில் நோய்வாய்ப்பட்டு இறந்த ஆடுகள் தொடர்பாக தகவல்கள் குறிப்பிட்ட மிருக வைத்தியருக்கு அறிவிக்கப்படாமை , மருத்துவ அறிக்கையின் மூலம் உறுதிப்படுத்தப்பட ாமை ஆகிய காரணங்களினால் காப்புறுதி நட்டஈடு வழங்கப்பட்டிருக்க வில்லை என. | குறிப்பிட்ட நடவடிக்கை இது வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவி ல்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | மீளாய்வாண்டில் பிரதேச செயலக பிரிவற்குட்பட்ட பற்றிக் விற்பனை நிலையத்தின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தி செய்யப்படாத போதும் அதற்காக கூட்டுமொத்தம் ரூபா 354,184 கொடுப்பனவு செய்யப்பட்டமையானது மேலதிக கொடுப்பனவாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது. | 2023 | செயற்திட்டத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியதுடன், மிகைக் கொடுப்பனவுகள் அறவீடு செய்யப்பட வேண்டும். | காண்டிகுளம் பதிக் விற்பனை நிலையத்தில் உங்களினால் சுட்டிக் காட்டப்பட்டிருந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கருமம் 17 மற்றும் 18 பூர்த்தி செய்யப்பட்டதுடன் மீதிக் கருமங்கள் விரைவாக பூர்த்தி செய்யப்படும் என. | குறிப்பிட்ட நடவடிக்கை இது வரை முடிவடைந்திருந்திருக்கவில்லை. |
| 10 | மாவட்டச் செயலகத்தின் 04 அரச இல்லங்களில் குடியிருந்தவர்களிடமிருந்து பெறப்பட வேண்டிய வாடகை கூட்டுமொத்தம் ரூபா 278,085 கடந்த ஒரு மாதம் தொடக்கம் 23 மாதங்களுக்கு மேலாக அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 | நிலுவை வாடகை அறவீடு செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடிதங்கள் மற்றும் நினைவூட்டல் கடிதங்கள் பல அனுப்பப்பட்ட போதிலும் குறிப்பிட்ட திணைக்களத்தினால் நிலுவைத் தொகையை அனுப்பியிருக்கவில்லை. | நிலுவை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| 11 | வவுனியா பிரதேச செயலகத்தினால் அரச காணிக்கான நீண்ட கால குத்தகையின் கீழ் வவுனியா நகர கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள அரச வங்கியின் வவுனியா கிளையினால் செலுத்தப்பட வேண்டிய 12 ஆண்டுகளுக்கான குத்தகை தவணைப்பணம் மற்றும் குற்றப்பணம் ரூபா 45,392,000 இனை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2023 | குத்தகை மற்றும் தண்டப் பணம் அறவீடு செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வவுனியா இலங்கை வங்கியினால் 2012 ஒக்தோபர் 05 திகதி குத்தகைக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2020 ஒக்தோபர் 16 திகதி பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்திருந்தது. வங்கி உத்தியோகத்தர்களுக்கு பல தடவை கடிதங்கள் அனுப்பப்பட்ட | நிலுவைத் தொகையை அறவீடு செய்திருக்கவில்லை. |

| | |
|---|---|
| ல. | போதிலும் குத்தகை மற்றும் தண்டப் பணத்தை செலுத்தியிருக்கவில்லை |

## 3.23 யாழ்ப்பாணம் மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை மூலதனம் ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 2,455,009,928 | 127,189,405 | 2,327,820,523 | முனைப்பழியுள்ள |
| **2022** | 2,638,849,222 | 80,288,963 | 2,558,560,259 | முனைப்பழியுள்ள |
| **2023** | 2,775,414,851 | 50,248,085 | 2,725,166,766 | முனைப்பழியுள்ள |

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|
| 1. நீர்வேலி வாழைக்காய் சிப்ஸ் உற்பத்தி செயற்திட்டத்திற்குத் தேவையான கட்டிடங்கள் மற்றும் இயந்திரங்கள் 2020 யூன் மாதத்தில் நிறுவப்பட்டு, நீர்வேலி வாழைக்காய் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனை கூட்டுறவுச் சங்கத்திடம் கையளிக்கப்பட்டன. அன்று முதல் இன்று வரை அந்தச் சொத்துக்கள் அனைத்தும் பயன்படுத்தப்படாமலும், 02 ஆண்டுகளாக முறையான பராமரிப்பின்றியும் உள்ளன. உற்பத்திக் கிரணம் அதிகமாக உள்ளது என்றும், உற்பத்தித் தேவைக்கு இயந்திரம் பொருத்தமற்றது என்றும் சம்பந்தப்பட்ட கூட்டுறவு சங்க நிர்வாகம் கருத்து தெரிவித்தது. ஆனால், இந்த | 2021 | செயற்திட்டத்தை மேற்கொள்வதற்கு முன்னர் திட்டமிடவும், தொழில்நுட்ப மதிப்பாய்வு மேற்கொள்வதன் மூலம் அவற்றை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு மற்றும் பயன்படுத்தப்படாத சொத்துக்களை ஆக்கபூர்வமான முறையில் பயன்படுத்துவதற்கும் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். | இந்த இயந்திரங்களை பயன்படுத்தி உற்பத்திச் செய்முறைகள் ஆரம்பிக்கப்படும் எனவும், மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட செயற்பாடுகள் 2024 செப்தம்பர் 30 திகதி வரையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செயற்திட்டத்திற்கு செலவிடப்பட்ட ரூபா 10,325,421 தொகை முறையான சாத்திய வள ஆய்வு இல்லாததால் பயனற்றதாகியிருந்தது. | | | | |
| 2. | யாழ்ப்பாணம், வலிகாமம் தென்மேற்கு ஆகிய பிரதேச செயலகங்களின் கட்டடங்களின் கிரயம் கூட்டுமொத்தம் ரூபா 48,299,000 மற்றும் 2018 ஆம் ஆண்டு நிலசெவன திட்டத்திற்கமைவாக 07 பிரதேச செயலகங்களால் கூட்டுமொத்தம் ரூபா 30,830,235 இற்கு நிர்மாணிக்கப்பட்டிருந்த கிராமசேவை உத்தியோகத்தர் மற்றும் இதர உத்தியோகத்தர்களுக் குரிய 12 அலுவலகங்கள் அமைக்கப்பட்டிருந்த நிலம் 2021 மார்ச் ஆம் திகதியிடப்பட்ட 05/2021 ஆம் இலக்க உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சு சுற்றறிக்கையின் பந்தி 2.1 இன் பிரகாரம் மாவட்ட செயலாளருக்கோ அல்லது பிரதேச செயலாளருக்கோ உரித்தற்றிருந்தது. எவ்வாறாயினும் அத்தகைய தனியார் நிலங்களை உரித்தாக்கிகொள்வதற் கோ அல்லது பராதீனப்படுத்துவதற்கோ நாளதுவரை | 2022 | இந்த அலுவலகங்களில் காணி உரித்தாக்குவதற்கு உரிய அலுவல்கள் மேற்கொள்ளப் பட வேண்டும். | குறிப்பிட்ட அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | குறிப்பிட்ட கருமங்கள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | | |
| 3. மீள்குடியேற்ற மற்றும் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சினால் 2016 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட ரூபா 1 மில்லியன் மற்றும் ரூபா 0.6 மில்லியன் வீட்டுத்திட்ட பயனாளிகளில் 1,458 எண்ணிக்கையான ரூபா 1 மில்லியன் வீட்டுத்திட்ட பயனாளிகள் மற்றும் 234 எண்ணிக்கையான ரூபா 0.6 மில்லியன் வீட்டுத்திட்ட பயனாளிகள் ஆகியோர்களின் வீட்டுத்திட்ட வேலைகள் நாளதுவரை முழுமையாக நிறைவுசெய்யப்பட்டிருக்காத போதிலும் கொடுப்பனவுகள் முழுமையாக அவர்களது சொந்த வங்கிக்கணக்கில் வைப்பிலிடப்பட்டு பணம் மீளப்பெற முடியாதவாறு கூட்டுமொத்தம் ரூபா 65,958,938 நிறுத்திவைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டிருந்தது. | 2023 | நிர்மாண வேலைக்காக கொடுப்பனவு மேற்கொள்ளும் போது நிதிப் பிரமாணம் 137, 138 மற்றும் 237 (ஆ)(1) இற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், முறையான விசாரணை மேற்கொண்டு அதன்படி நடவடிக்கை எடுத்திருக்காத உத்தியோகத்தர் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொடுப்பனவுகள் முழுமையாக விடுவிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | குறிப்பிட்ட செயற்பாடுகள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 4. மாவட்டச் செயலகத்தில் செலவின மீளளிப்பாக பெறப்பட்ட வைப்புக்களின் | 2023 | செலவுகளை தீர்ப்பதற்காக கிடைத்திருந்த வைப்புத் தொகைகளை | மலக் கழிவுப்பொருள் மீள்சுழற்சிச் செயற்திட்டம் பூர்த்தி | குறிப்பிட்ட செயற்பாடுகள் 2024 செப்தம்பர் 30 திகதி வரை எடுக்கப்பட்டிருக்கவி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கூட்டுமொத்தம் ரூபா 20,996,124 உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்காது 06 வருடங்களாக வைப்புக் கணக்கில் பேணப்பட்டுவருகின்றன. | | குறிப்பிட்ட காலப் பகுதிகளில் குறிப்பிட்ட தரப்பினருக்கு திருப்பிச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | செய்யப்பட்டுள்ளது. அந்தக் கொடுப்பனவை தீர்த்தல் தொடர்பாக குழுவொன்று நிறுவப்பட்டுள்ளதுடன், மிகவும் விரைவில் இவற்றை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என. | ல்லை. |
| 5. | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை VIII ஆம் அத்தியாயத்தின் 9 ஆம் பிரிவின் பிரகாரம் விடுமுறைதினக் கொடுப்பனவிற்கான மணித்தியாலங்கள் பொதுவாக பணியாற்றும் காலம் உள்ளடங்கலாக மாத்திரமே கணிப்பீடு செய்யப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தும் மாவட்டச் செயலகம் மற்றும் 13 பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் 73 உத்தியோகத்தர்கள் பொதுவான வேலை நேரத்திற்கு பின்னர் வேலைக்கு அறிக்கையிடப்பட்டிருந்ததுடன் அவர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட விடுமுறை தினக் கொடுப்பனவு கூட்டுமொத்தம் ரூபா 1,763,047 மேலதிக கொடுப்பனவாக அவதானிக்கப்பட்டிருந்தது. | 2023 | மிகை கொடுப்பனவுகள் திருப்பி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அமைச்சின் அறிவுரையின் படி தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என. | குறிப்பிட்ட செயற்பாடுகள் இதுவரை முடிவுற்றிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. 2018 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளில் முறையே இரு வேறுபட்ட அமைச்சுகளினால் வழங்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடுகளிலிருந்து 2021 ஆம் ஆண்டில் கூட்டுமொத்தம் ரூபா 196,039,247 கிரயத்தில் மாவட்டச் செயலகத்தினால் மட்டுவில் பொருளாதார மத்திய நிலையம் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் குறித்த செயற்திட்டம் நாளதுவரை செயற்படுத்தப்பட்டிருக் கவில்லை. | 2023 | அந்த பொருளாதார நிலையக் கட்டிடத்தை பயன்படுத்துவ தற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொருளாதார நிலையத்தின் செயற்பாடுகள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | குறிப்பிட்ட செயற்பாடுகள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவி ல்லை. |
| 7. சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதியில் 2018 ஆம் ஆண்டு மாவட்டச் செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ரூபா 56,640,750 பால் பதனிடும் செயற்திட்டத்திற்கான உபகரணங்கள் கொள்வனவு மற்றும் கட்டட நிர்மாணம் ஆகிய இரண்டு வேலைத்திட்டங்கள் 2019 ஆம் ஆண்டு நிறைவுசெய்யப்பட வேண்டியிருந்தும் நாளதுவரை குறித்த வேலைத்திட்டங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வில்லை. | 2023 | திட்டத்தின் படி செயற்திட்டத் தை பூர்த்தி செய்து சொத்துக்களை ள பயன்படுத்துவ தற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | அந்தக் கட்டிடங்களை நிர்மாணித்து பூர்த்தி செய்வதற்கான செயற்திட்டம் 2024.07.02 திகதி விவசாய அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது என. | குறிப்பிட்ட செயற்பாடுகள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவி ல்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 8. | சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் நிதியில் 2018 ஆம் ஆண்டு மாவட்டச் செயலகத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ரூபா 75,323,600 மலக்கழிவுகளை மீள்சுழற்சியிடல் செயற்திட்டம் 2019 ஆம் ஆண்டு நிறைவுசெய்யப்பட வேண்டியிருந்தும் குறித்த செயற்திட்டத்திற்காக ரூபா 65,955,381 செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தும் நாளதுவரை வேலைத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 | முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்திட்டத்தை உயிர்ப்புடன் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த கொடுப்பனவுகளை தீர்ப்பதற்கு குழுவொன்று நிறுவப்பட்டுள்ளதுடன், விரைவாக பூர்த்தி செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மேலும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் உதவியுடன் இந்தச் செயற்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | குறிப்பிட்ட செயற்பாடுகள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3.24 மன்னார் மாவட்ட செயலகம்

| | மொத்தச் சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 905,466,284 | 183,291,771 | 722,174,513 | முனைப்பழியுள்ள |
| **2022** | 957,155,766 | 160,765,533 | 796,390,233 | முனைப்பழியுள்ள |
| **2023** | 2,186,045,019 | 268,117,997 | 1,917,927,022 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | முசலி சமுர்த்தி வங்கியின் காசாளர் வங்கிக் கருமபீடத்தில் பயனாளிகளின் நேரடி பிரசன்னம் மற்றும் ஆள் அடையாளம் என்பவற்றினை உறுதிப்படுத்தாமல் நிதி ஒழுங்கு விதி இலக்கம் 139 இற்கு முரணான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தருக்கு ரூபா 3,392,000 வழங்கியது. இந்த தொகையை குறித்த உத்தியோகத்தர் தவறாக பயன்படுத்தி இழப்பாக அடையாளம் காணப்பட்டது. இதில் ரூபா 2,650,000 அறவிடப் பட்டிருப்பினும், மீதமுள்ள ரூபா 942,000 இதுவரை அறவிடப்படவில்லை. | 2023 | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க, குறிப்பிட்ட நலன்பெறுவோரின் தனிப்பட்ட அடையாளத்தை உறுதிப்படுத்தி கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டியதுடன் மேலும் அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | முசலி பிரதேச செயலகத்தின் சமூர்த்தி வங்கியினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக முழுமையான விளக்கம் அந்த வங்கியில் இருந்து பெற்றுக் கொண்டு விரைவாக அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மீதியான ரூபா 942,000 தொகை இது வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 2 | 02 வைப்புக் கணக்கின் தலைப்பின் கீழ் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 4,125,661 பெறுமதியான 66 வைப்புக்கள் 03 | 2023 | உரிய குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக | பொருத்தமான செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என. | உரிய செயற்பாடுகள் இது வரை முடிவடைந்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொடக்கம் 40 மாதங்களாக பயன்பாடின்றி பொது வைப்புக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தன. | | பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | | |
| 3 | மாந்தை மேற்கு பிரதேச செயலகத்தில், மொத்தம் ரூபா 1,889,938 பெறுமதியான 49 காசோலைகள் 7 வருடங்களாக இனங்காணப்படாத கொடுப்பனவுகளாக காணப்பட்டிருந்தும் இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 | நிதிப் பிரமாணம் 104-110 இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சினால் இந்த மோசடிகள் தொடர்பாக நியமனம் செய்யப்பட்ட விஷேட குழுவின் தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும் என. | இது வரை பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 4 | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் நானாட்டான் பிரதேச செயலகப்பிரிவில் ரூபா 6,321,438 செலவில் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் சமுர்த்தி ஆரோக்கிய உணவகம் மற்றும் விற்பனை நிலையம் அமைக்கப்பட்டிருந்த போதிலும் சரியான சாத்திய வள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு இக் கட்டடம் அமைக்கப்பட்டிருக்கவில்லை. இதனால் அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் அடையப்பெற்றிருக்கவில்லை. | 2023 | எதிர்காலத்தில் இவ்வாறான நிர்மாண வேலைகள் மேற்கொள்ளும் போது சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ள வேண்டுமெனவும், தற்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள சமூர்த்தி போசாக்கு சிற்றுண்டிச்சாலை செயற்திறனுடன் செயற்படுத்துவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. | குறிப்பிட்ட நடவடிக்கைகள் இது வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 5 | கமத்தொழில் அமைச்சின் ரூபா 9.9 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் கீழ் பின்தங்கிய கிராமிய பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக 2023 ஆம் ஆண்டில் முன்மொழியப்பட்ட ஆடுகள் வளர்ப்புத் திட்டம் தொடர்பாக 120 பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட 360 பெண் ஆடுகளில் 2024 மே 06 ஆந் திகதிவரை வழங்கப்பட்ட 20 ஆடுகள் 14 நாட்களுக்குள் நோய்காரணமாக இறந்துள்ளமை களப் பரீட்சிப்பின்போது அவதானிக்கப்பட்டுள்ளது. ஆயினும் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் வழங்குனரால் இறந்த ஆடுகளுக்குப் பதிலாக புதிய ஆடுகள் நாளதுவரை வழங்கப் பட்டிருக்காமையால் எதிர்பார்க்கப்பட்ட நலனை பெறமுடியாமல் இருந்தது. | 2023 | உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு இணங்க, வழங்குனர்களினால் இறந்த ஆடுகளுக்கு பதிலாக புதிய ஆடுகள் பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | வழங்குனர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | குறிப்பிட்ட நடவடிக்கைகள் இது வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 6 | மன்னார் மாவட்ட சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் கீழ் உள்ள 09 சமுர்த்தி வங்கியினூடாக சமுர்த்தி நிவாரண உதவி பெறும் 622 அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்ட கடன்களுக்கான மாதாந்த கடன்தவணைக் கட்டணமானது 03 | 2023 | வழங்கியிருந்த கடன்கள், உடன்படிக்கையின் பிரகாரம் மாதாந்தம் அறவீடு செய்வதற்கு பொருத்தமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைக் கடன் தொடர்பாக நலன்பெறுவோருக்கு அறிவுரை வழங்கப்பட்டு அறவீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், அறவீடு செய்ய முடியாத நலன்பெறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும் படி | குறிப்பிட்ட நடவடிக்கைகள் இது வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | தொடக்கம் 30 மாதங்கள் வரையான காலப்பகுதி வரை அறவிடப்படாத நிலுவையாக கூட்டுமொத்தம் ரூபா 25,160,211 காணப்படுவதுடன் அந்நிலுவைகள் தொடர்பில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள் மற்றும் மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | | முன்னேற்ற மீளாய்வுக் குழுக் கூட்டத்தின் போது மாவட்ட செயலாளரினால் பிரதேச செயலாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது என. | |
| 7 | வங்கிகளின் வங்கிக்கணக்குகளை பரிசீலித்ததன் அடிப்படையில் பயனாளிகளுக்கான மாதாந்த சமுர்த்தி கொடுப்பனவு பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் தொடர்ச்சியாக வைப்பிடப்பட்ட போதிலும் 223 பயனாளிகளினால் மொத்தமாக ரூபா 17,739,811 தொகை 10 தொடக்கம் 48 மாதங்களுக்கு மேலாக மீளப்பெறாது உரிய தேவைக்கு பயன்படுத்தப்படாது இருப்பது அவதானிக்கப்பட்டது. இது தகுதியற்ற பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளமையை எடுத்துக்காட்டுவதுடன் காத்திருப்போர் | 2023 | சமூர்த்தி நலன் பெறுவோர்களை தெரிவு செய்யும் மூலப் பிரமாணங்களின் படி மேற்கொள்வதற்கும் முறையான விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டு தேவையற்ற நபர்களை அகற்றி நலன்கள் தேவையான நபர்களுக்கு மாத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தற்போது இவற்றை உறுதிப்படுத்தி பொருத்தமான ஆட்களுக்கு வழங்குவதற்கும் ஏனைய ஆட்களுக்கு வழங்குவதை நிறுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | குறிப்பிட்ட நடவடிக்கைகள் இது வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

பட்டியலில் உள்ள சமுர்த்தி பயனாளிகள் சமுர்த்தி உதவி கிடைக்காது பாதிக்கப்பட்டுள்ளனர்.

## 3.25 முல்லைத்தீவு மாவட்ட செயலகம்

| | மொத்தச சொத்துக்கள் ரூபா | மொத்தப் பொறுப்புக்கள் ரூபா | உரிமை ரூபா | அபிப்பிராயம் |
|---|---|---|---|---|
| **2021** | 1,388,321,957 | 49,733143 | 1,338,588,814 | முனைப்பழியுள்ள |
| **2022** | 1,498,400,735 | 60,945,629 | 1,437,455,106 | முனைப்பழியுள்ள |
| **2023** | 1,424,902,250 | 11,618,159 | 1,413,284,091 | முனைப்பழியுள்ள |

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | அறிக்கையின் ஆண்டு | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பரிந்துரை | கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தால் எடுக்கப்பட்ட தடுப்பதற்கான நடவடிக்கைகள் | அறிக்கைத் திகதியில் பரிந்துரை அமுல்படுத்துதலின் நிலைமை |
|---|---|---|---|---|---|
| 1 | காணி கொள்வனவிற்காக வரையறுக்கப்பட்ட லங்கா மினரல் சேன்ட் கம்பனியினால் 2012 ஆம் ஆண்டில் மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட ரூபா 2,250,000 தொகையானது உரிய நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது கடந்த 9 வருடங்களுக்கு மேலாக வைப்புக்கணக்கில் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. | 2021 | குறிப்பிட்ட குறிக்கோள்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆரம்ப உரிமையாளர்கள் இறந்திருப்பதனால் காணியை தனதாக்கும் கருமங்கள் தாமதம் அடைந்திருந்தது. | மதிப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், இந்த பணம் குறிப்பிட்ட தரப்பினருக்கு செலுத்தப்பட்டிருந்தது. |
| 2 | 04 பிரதேச செயலகங்களினால் கூட்டுமொத்தம் ரூபா 183.9 மில்லியன் பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டிருந்த 118 வீடுகள் கடந்த 06 தொடக்கம் 10 | 2022 | அந்த வீடுகள் தொடர்ந்தும் ஆக்கபூர்வமான வகையில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பொருளாதார, கல்வி மற்றும் சுகாதார காரணங்களினால் ஏனைய பிரதேசங்களுக்கு சென்று வாழ்வதனால் இவற்றை பயன்படுத்த | மீள் குடியேற்ற காலப்பகுதியினுள் வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. எனினும் தனிப்பட்ட காரணங்களினால் நலன்பெறுவோர் பல்வேறு இடங்களில் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஆண்டுகளாக குடியிருப்பாளர்களால் உபயோகிக்கப்பட்டிருக் காது பாழடைந்திருந்தது. | | | முடியாமல் இருந்தது. | வசிக்கின்றனர். |
| 3 | தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையிடமிருந் து பெறப்பட்டிருந்த நிதியிலிருந்து கூட்டுமொத்தம் ரூபா 24.19 மில்லியன் கிரயத்தில் மாவட்டச் செயலகத்தினால் 2014 ஆம் ஆண்டு செல்வபுரத்தில் நிர்மாணிக்கப்பட்டு 481 இருப்புப் பொருட்களுடன் வசதிப்படுத்தப்பட்டிருந் த பாதுகாப்பற்ற மற்றும் துஸ்பிரயோகத்திற்குட்ப ட்ட சிறுவர்களுக்கான பாதுகாப்பு நிலையமானது கடந்த 08 ஆண்டுகளாக குறித்த திட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெறப்பட்டிருக்காது பயன்பாடின்றிக் காணப்பட்டது. | 2022 | குறிப்பிட்ட குறிக்கோள்க ளுக்காக பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கணக்காய்வு அவதானிப்புக்களுக் கு பொருத்தமான முறையில் பதில் சமர்ப்பித்திருக்கவில் லை. | 2024 செப்தெம்பர் 30 திகதி வரை பயன்படுத்தியிருக்க வில்லை. |
| 4 | மாவட்டச் செயலகத்துக்கு அனர்த்த முகாமைத்துவ அமைச்சினால் வழங்கப்பட்டிருந்த மின்பிறப்பாக்கியொன்று 06 ஆண்டுகளாகப் பயன்படுத்தப்படாதுள்ள துடன் 2016 திசெம்பரில் ரூபா 9.8 மில்லியனுக்கு மாவட்டச் செயலகத்தின் பிரதான | 2022 | திருத்த வேலை மேற்கொண்டு ஆக்கபூர்வமா ன முறையில் பயன்படுத்து வதற்கு பொருத்தமா ன நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்பாடுகள் கிடைத்தவுடன் திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2024 செப்தெம்பர் 30 திகதி வரை பயன்படுத்தியிருக்க வில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மின்துண்டிப்பு வேளைகளில் மாத்திரம் உபயோகிக்கப்படுவதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த 502 கிலோவாற்று (502KW) மின்வலுவுடைய வேறொரு மின்பிறப்பாக்கியானது 385 இயந்திர மணித்தியாலங்கள் தொழிற்பட்ட பின்னர் செயற்பாடற்றிருந்தது. | | | | |
| 5 | 2019 செப்தெம்பர் 10 அன்று முள்ளியவளையிலுள்ள உலக உணவுத் திட்டத்திற்கான களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்த 03 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 02 லொறிகள் மீளாய்வாண்டில் பௌதீக செவ்வை பாாத்தலுக்குக் கிடைத்திருக்கவில்லை. | 2022 | தொடர்புடைய பதிவேடுகள், புத்தகங்கள் பௌதீக பரிசோதனைக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை. | பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| 6 | மாவட்ட செயலகம் மற்றும் 06 பிரதேச செயலகங்களுக்கு உரித்துடையதென நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டு வந்த காணிகளுக்குரிய உறுதிப்பத்திரம், காணி சுவீகரித்தல் கட்டளை Vesting Order மற்றும் நிலஅளவை வரைபடங்கள் என்பன கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக கணக்காய்வுக்குக் கிடைத்திருக்காத போதிலும் அவற்றினை | 2022 | உரித்துறுதிகள் மற்றும் காணிகளின் பரப்பளவினை உறுதிப்படுத்தி அதன் நியாயமான பெறுமதி அரச பெறுமதி மதிப்பீட்டாளர் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காட்டுவதற்கு நடவடிக்கை | இது தொடர்பாக செயற்பாடுகள் விரைவாக ஆரம்பிக்கப்படும். | குறிப்பிட்ட நடவடிக்கைகள் இது வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பெற்றுக்கொண்டு நியாயமான பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுகளிற்கு கொண்டு வரப்பட்டிருக்க நாளதுவரை ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | எடுக்க வேண்டும். | | |
| 7 | 2020/2021 காலப்பகுதிகளில் கொவிட் விசேட கொடுப்பனவுக்காக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து பெறப்பட்ட நிதியில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிராத மீதித் தொகை ரூபா 579,500 திணைக்களத்திற்கு மீளளிப்பு செய்யப்பட்டிருக்காது புதுக்குடியிருப்பு சமுதாய அடிப்படை வங்கியில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. | 2023 | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு மீண்டும் மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீண்டும் மீளளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | குறிப்பிட்ட நடவடிக்கைகள் இது வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 8 | 03 சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளால் 2014 தொடக்கம் 2022 வரையான காலப்பகுதிகளில் 31 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகையில் கூட்டுமொத்தம் ரூபா 1,421,364 தொகை அறவிடப்படாமல் நிலுவையாக காணப்பட்டிருந்தது. | 2023 | நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் கடன் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிலுவைத் தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| 9 | மூன்று சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிகளில் காணப்பட்ட 05 வகையான 6,172 | 2023 | சமுர்த்தி நலன் பெறுவோரின் வங்கிக் கணக்குகளை | இவ்வாறான கணக்குகளின் எண்ணிக்கைகள் குறைக்கப்பட்டு வருகின்றது. | பொருத்தமான நடவடிக்கைகள் இது வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பயனாளிகளின் கூட்டுமொத்தம் ரூபா 26,299,722 செயற்பாடற்ற வங்கிக் கணக்கு மீதிகள் தொடர்பில் நாளது வரை உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | ள செயற்படுத்துவதற்கு முறையான நடவடிக்கை எடுக்க வேண்டும். | | |
| 10 | விவசாயிகளிடமிருந்து நெல் கொள்வனவு செய்து விற்பனை செய்வதற்காக மாவட்டச் செயலகத்தினால் 02 பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு 2015 ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருந்த நெல் கொள்வனவுக்கான முற்பணம் கூட்டுமொத்தம் ரூபா 20,729,785 இல் கூட்டுமொத்தம் ரூபா 14,259,125 அல்லது 69 சதவீதமானது நாளதுவரை தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 | அறவிடப்பட வேண்டிய முற்பணங்களை திருப்பப் பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | பனங்காமம்பத்து ப.நோ.கூ. சங்கத்தின் மீதி ரூபா 1,909,125 தொகை எனவும் விசுவமடு ப.நோ.கூ. சங்கத்தின் மீதி ரூபா 12,350,000 தொகை எனவும் மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்படுகின்றது என. | இது வரை முற்பணக் கூட்டுத்தொகை ரூபா 14,259,125 தொகை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| 11 | தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை மற்றும் கிராமிய வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கட்டடப்பொருட்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு என்பவற்றால் பல்வேறு கட்டங்களாக 98 பயனாளிகளுக்கு வழங்கப் பட்ட வீட்டுத்திட்டத்திற்கான கொடுப்பனவுகள் ரூபா | 2023 | சமுர்த்தி வங்கிக் கணக்குகளில் காணப்படும் பணம் குறிப்பிட்ட குறிக்கோள்களுக்காக பயன்படுத்த பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | குறிப்பிட்ட அதிகாரிகளின் அங்கீகாரம் கிடைத்தவுடனே கொடுப்பனவு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய நடவடிக்கைகள் இது வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 13,405,280 உரிய பயனாளிகளுக்கு வழங்கப்பட்டிருக்காது புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான், உடையார்கட்டு சமுர்த்தி வங்கிக் கணக்குகளில் 01 தொடக்கம் 04 ஆண்டுகளாக குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்படாது நாளதுவரை தேக்கி வைக்கப்பட்டிருந்தன. | | | | |
| 12 | சமுர்த்தி வாழ்வாதார உதவிக் கொடுப்பனவு தொடர்பான பயனாளிகளின் கணக்குகளை தெரிவுச் செவ்வை அடிப்படையில் கணக்காய்வுக்குட்படுத்திய போது 135 பயனாளிகளின் கணக்கு மீதிகள் ரூபா 32,106 தொடக்கம் ரூபா 175,749 எனும் வீச்செல்லையில் கூட்டுமொத்தம் ரூபா 8,443,715 உதவுதொகைகள் வாழ்வாதார மேம்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருக்காது பயனாளிகளின் சமுர்த்தி வங்கிக் கணக்குகளில் தேங்கி காணப்பட்டன. | 2023 | நலன்பெறுவோர் தொடர்பாக விசாரணை மேற்கொண்டு வாழ்வாதார கொடுப்பனவு குறிப்பிட்ட குறிக்கோளுக்காக பயன்படுத்துவதற்காக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேற்கூறிய நலன்பெறுவோரின் விபரங்களை பெற்றுக் கொண்டு வெளிக்கள உத்தியோகத்தர்கள் மூலமாக நலன்பெறுவோரை இனங்கண்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | உரிய நடவடிக்கை இது வரை பூர்த்த செய்திருக்கவில்லை. |
| 13 | 2019 ஆண்டு துணுக்காய் பிரதேச செயலகத்தின் செயற்குழுவினால் தீர்மானிக்கப்பட்டிருந்த பெறுமதி மதிப்பீட்டிற்கமைவாக அறவிடப்பட்டிருக்க வேண்டிய 19 அரச | 2023 | நிலுவை குத்தகைத் தொகையை அறவீடு செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட | சிலர் கட்டணம் செலுத்தியிருந்தனர். மேலும் சிலருக்கு கடிதங்கள் மூலம் அறிவிக்கப்பட்டது. 2019 ஆண்டிற்கு முன்னைய காலப் பகுதி தொடர்பான அலுவல்கள் | நிலுவைத் தொகையை அறவீடு செய்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | காணிகளுக்குரிய குத்தகைக் கட்டணம் கூட்டுமொத்தம் ரூபா 3,268,790 கடந்த 01 தொடக்கம் 05 ஆண்டுகளாக அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும் 2019 ஆம் ஆண்டுக்கு முற்பட்ட காலப்பகுதிகளிலிருந்து அரச காணிகளை அடையாளப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையால் பல்வேறுபட்ட தரப்பினர்களிடமருந்து அக் காணிகளை உபயோகித்து வந்தமைக்கான குத்தகை வருமானத்தினை இழந்துள்ளது. | | வேண்டும். | மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என. | |
| 14 | துணுக்காய் பிரதேச செயலாளரினால் பயனாளியொருவருக்கு தற்காலிக குத்தகையடிப்படையில் 2014 ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருந்த 29 ஏக்கர் அரச காணிக்குரிய குத்தகைக் கட்டணம் கூட்டு மொத்தம் ரூபா 1,480,000 அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2023 | நிலுவை குத்தகைத் தொகையை அறவீடு செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அறிவுரை கிடைத்தவுடன் உரிய வருமானத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுதைத் தொகையை அறவீடு செய்திருக்கவில்லை. |
| 15 | முன்னறிவித்தலின்றி தொடர்ந்தும் கடமைக்கு சமுகமளிக்காதிருந்த 04 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கும் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய அலுவலர் | 2023 | சம்பளத்தை திருப்ப அறவீடு செய்வதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அந்த உத்தியோகத் | பிரதேச செயலாளர் ஊடாக பணம் திருப்பி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. முடியாவிடின் சட்ட செயற்பாடுகள் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என | மிகையாக செலுத்திய சம்பளத்தை திருப்ப அறவீடு செய்திருக்கவில்லை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஒருவருக்கும் அவர்கள் கடமைக்கு சமுகமளிக்காதிருந்த காலப்பகுதிகளிற்கான வேதனாதிகள் கூட்டுமொத்தம் ரூபா 712,675 மேலதிக கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | | தர்கள் தொடர்பாக ஒழுக்காற்று செயற்பாடுகளும் மேற்கொள்ள வேண்டும். | அறிவிக்கப்பட்டுள்ளது என. | |
| 16 | 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தில் சமூக சேவை கிளையினால் வழங்கப்பட்டு வந்த அங்கவீனமுற்றவர்களுக்கான கொடுப்பனவு, சிறுநீரக நோய் கொடுப்பனவு, 70 வயதிற்கு மேற்பட்ட மற்றும் 100 வயதிற்கு மேற்பட்ட முதியவர்களுக்கான கொடுப்பனவுகளை பெற்று வந்த 154 பயனாளிகளுக்கு கூட்டுமொத்தம் ரூபா 2,788,300 கொடுப்பனவு வழங்கப்பட்டிருக்கவில்லை | 2023 | குறிப்பிட்ட காலப் பகுதியினுள் நலன் பெறுவோருக்கு கிடைக்க வேண்டிய படிகளை செலுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். | பணம் பெற்றுக் கொண்டு படிகளை செலுத்துவதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | உரிய நடவடிக்கைகள் இதுவரை முடிவடைந்திருக்கவில்லை. |